# திருமந்திரம்

## ஓர் அறிமுகம்



வழக்கறிஞர்

செல்லத்தம்பி சிறீக்கந்தராசா

ஆலயம் வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம்

## ஓர் அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம்

## ஓர் அறிமுகம்

## Tirumantiram

(An Introduction)

வழக்கறிஞர்

செல்லத்தம்பி சிறீக்கந்தராசா

B.Sc., LL.M. (London)

ஆலயம் வெளியீட்டகம்

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | திருமந்திரம் - ஓர் அறிமுகம் |
| எழுதியவர் | : | செல்லத்தம்பி சிறீக்கந்தராசா |
| பதிப்பு | : | 2017 |
| வெளியீடு | : | ஆலயம் வெளியீட்டகம்<br>39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06<br>தொ.பேசி: 011 2364550<br>மின்னஞ்சல்: kumbhlk@gmail.com |
| அச்சு | : | குமரன் அச்சகம்<br>39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06<br>தொ.பேசி: 011 2364550<br>மின்னஞ்சல்: kumbhlk@gmail.com |
| Title | : | Tirumantiram - An Introduction |
| Author | : | Sellathamby Sriskandarajah |
| Year of Publication | : | 2017 |
| Published by | : | Aalayam Veliettakam<br>No. 39, 36th Lane, Colombo -06<br>Tel. - 011 2364550, E.mail: kumbhlk@gmail.com |
| Printed by | : | Kumaran Press<br>39, 36th Lane<br>Colombo - 06<br>Tp.: 011 2364550<br>E-mail: kumbhlk@gmail.com |
| வெயியீட்டு எண் | : | #028A |
| ISBN | : | 978-955-0881-27-7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


ஆக்கியோன் உரை viii

பத்மசிறீ முனைவர் ஔவை நடராசனின் அணிந்துரை xxi

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரின்
பிரார்த்தனை உரை xxv

பாகம் ஒன்று - சைவசித்தாந்தம்

1. சைவசித்தாந்தம் கூறுவதென்ன? 1
2. சைவசித்தாந்தத்தில் மாயை 2
3. சிவாயநம என்ற மந்திரம் 6
4. வள்ளுவரும் ஐஞ்செழுத்தும் 8
5. முப்பொருள்களில் முதன்மையான பதி 9
6. அத்துமீறி நுழையும் வேற்று மதத்தினர் 13
7. பதியின் பண்புகள் 15
8. சைவசமயத்தின் அடிப்படைகள் - ஒரு கண்ணோட்டம் 16
9. விடை கிடைக்காத சிக்கல்கள் சில 19

பாகம் இரண்டு - இந்தியத் தத்துவ தரிசனங்கள்

10. இந்துமதம், இந்து சமயம் என்ற சொற்றொடர்கள்? 22
11. இந்திய தத்துவ ஞானப் பார்வைகள் 23
12. ஏழு தரிசனங்கள் 24
13. தத்துவ தரிசனங்களும் அவற்றின் கொள்கைகளும் 25
14. சாங்கியம் 26
15. யோக தரிசனம் 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. வைசேடிகம் 33

17. நியாயம் என்ற நியாயதரிசனம் 35


பாகம் மூன்று - திருமந்திரம்


18. நுழைவாயில் 37

19. மந்திரம் என்றால் என்ன? 38

20. திருமந்திரம் தோத்திரமா? சாத்திரமா? 41

21. சேக்கிழாரும் திருமூலரும் 42

22. சுந்தரமூர்த்தி நாயனாரும் திருமூலரும் 43

23. நம்பியாண்டார் நம்பியும் திருமூலரும் 44

24. திருமுறையைத் தேடி எடுத்தவர் யார்? 45

25. அப்பரும் சம்பந்தரும் திருமூலரை மதிக்கவில்லையா? 48

26. திருமந்திரம் என்ற பெயர்க் காரணம் 49

27. திருமந்திரமும் திருக்குறளும் 51

28. திருமந்திரம் மூலநூலா? மொழிபெயர்ப்பு நூலா? 53

29. திருமந்திரத்தில் எத்தனை பாடல்கள் உள்ளன? 57

30. திருமந்திரம் என்பதா? திருமந்திரமாலை என்பதா? 58

31. திருமந்திரமும் மெய்கண்டசாத்திரங்களும் 61

32. மெய்கண்டசாத்திரச் சொல்லாட்சியும் திருமந்திரச் சொல்லாட்சியும் 62

33. திருமந்திரப்பாடல்கள் - ஒரு பறவைப் பார்வை 64

34. திருமந்திரத்தில் இடைச்செருகல்கள் ஏற்பட்டிருக்குமா? 74

35. மீண்டும் மீண்டும் வந்துள்ள பாடல்கள் 76

36. இறை இயலும் தத்துவ இயலும் 78


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. திருமந்திரத்தின் உள்ளீடு - பாயிரம் பகருகின்ற செய்தி 79

38. முதலாம் தந்திரம் மொழிகின்ற செய்தி 80

39. இரண்டாம் தந்திரம் இயம்புகின்ற செய்தி 81

40. மூன்றாம் தந்திரம் முழங்குகின்ற செய்தி 82

41. நான்காம் தந்திரம் நவிலுகின்ற செய்தி 83

42. ஐந்தாம் தந்திரம் அறைகின்ற செய்தி 84

43. ஆறாம் தந்திரம் அறிவிக்கின்ற செய்தி 85

44. ஏழாம் தந்திரம் எடுத்தோதும் செய்தி 85

45. எட்டாம் தந்திரம் எண்பிக்கின்ற செய்தி 87

46. ஒன்பதாம் தந்திரம் ஒலிக்கின்ற செய்தி 88

47. திருமந்திரம் நிறைவுரை 89

**பின்னிணைப்புக்கள்**

(1) நூலாக்கத்துக்கு உதவிய நூல்களின் பட்டியல் 92

(2) பயனுள்ள திருமந்திரப் பாடல்கள் சில 93

(3) திருமந்திரமும் மெய்கண்டசாத்திரமும் - ஓர் ஒப்பீடு 101

(4) இரட்டித்து இடம்பெற்ற திருமந்திரப் பாடல்கள் 107

(5) குழூஉக்குறிச் சொற்களும் அவற்றைக் கொண்டுள்ள பாடல்களின் எண்களும் 115

(6) ஆசிரியரின் ஏனைய நூல்களின் பட்டியல் 118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கியோன் உரை

மநுநீதி என்று வழங்கப்படுகின்ற மநுசுமிருதி கூறுகின்ற செய்திகள் சில மனித உரிமையை மீறுகின்ற செயல்களாக உள்ளன என்று மநுநீதி என்ற சாத்திரத்தைக் கற்றவர்கள் சொல்கிறார்கள். வருண ஆசிரமத்தை வற்புறுத்த என்று எழுந்த வடநாட்டு நூலான அந்த நூலில், சாதித்துவேசம் துள்ளித் துடிப்பதாகச் சொல்வார்கள். அந்த நூல் ஆளுக்கொரு நீதி சொல்கின்ற அநியாய நூல் என்று சொல்வதும் உண்டு. சூத்திரன் ஒருவன் வேதத்தை ஓதினால் அவனுடைய நாக்கை அறுத்துவிடு என்கிறது மநுநீதிசாத்திரம். சூத்திரன் வேதத்தைத் தொட்டால் அவனுடைய கையை வெட்டிவிடு என்று சொல்வதும் அந்தத் தரும நூல்தான்.

மேற்படி அநீதியான கருத்துக்கள் எப்படியோ தமிழ் நாட்டிலும் அன்றைய நாள்களில் பரவிவிட்டன. இதனால், தென்னிந்தியாவின் சாதாரண தமிழர்கள், திருமூலர் என்ற தமிழரால் இயற்றப்பட்ட, தமிழருக்கே உரிய திருமந்திரத்தைக் கூடப் படிக்காமல் விட்டுவிட்டார்கள் என்று எண்ணத் தோன்று கின்றது. திருமந்திரத்துக்கு ஏற்பட்ட கதி, தேவார திருவாசகங் களுக்கும் ஏற்பட்டிருக்கின்றது. பழம் பாடல்களான சங்கப் பாடல்களுக்கும், இலக்கண நூல்களுக்கும் உரை எழுதிய உரையாசிரியர்கள், திருமந்திரம், தேவார திருவாசகங்களுக்கு உரை எழுதாதது ஏன் என்பதைச் சிந்திக்கின்றபோது, மநுசு மிருதியின் செல்வாக்கு அத்தகைய தவிர்ப்புக்குக் காரணமாக இருந்திருக்கலாமோ என்று எண்ணவும் தோன்றுகின்றது.

சென்னைப் பல்கலைக்கழகம் 1850 ஆம் ஆண்டளவில் தோற்றுவிக்கப்பட்டது. அந்தப் பல்கலைக்கழகத்தின் தமிழுக்கான பாடவிதானத்தில்கூடத் திருமந்திரத்துக்கோ, தேவார திருவாசகங் களுக்கோ வேண்டிய அளவு முதன்மை கொடுக்கப்படவில்லை. இவ்வாறு பல்கலைக்கழக மட்டத்திலேகூடத் தேவார திருவாசகங்களுக்கு இடம் கொடுக்காத காரணத்தினால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவார திருவாசகங்கள் ஓதுவார்களின் வீடுகளுக்குள்ளும் சிவன் கோயில்களுக்குள்ளும் ஒடுங்கி மடங்கிவிட்டன. தேவாரங்கள் ஓதுவார்களினால் ஓதப்பட்டனவேயொழிய, அவைகள் விரிவுரை செய்யப்படவில்லை; அவற்றுக்கு விளக்கங்கள் கொடுக்கப்படவுமில்லை.

சிவன்கோயில்களுக்குள் ஒடுங்கி ஒதுங்கிவிட்டன என்று கூறினேன்; ஆனாலும் அதுவும் சரியான கூற்று அன்று. கோயில் என்பது சிதம்பரம் என்பது முதுமொழி. சிதம்பர நடராசருக்குரிய கோயில் சிவன்கோயில். அந்தக் கோயிலை நிர்வகிப்பவர்கள் தில்லைவாழ் அந்தணர். அந்தக் கோயிலில் ஓதுவார்மூர்த்திகள் என்று அழைக்கப்படும் ஓதுவார்கள் தேவாரம் ஓதுவதை, வடநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டவர்களாகச் சொல்லப்படும் தில்லைவாழ் அந்தணர் என்போர் விரும்புவதில்லை.

விசயாலயச் சோழனோடு தொடங்கிய பிற்காலச் சோழராட்சியின்போது, பிற்காலச் சோழர் பலர் தமிழகக் கோயில்களில் சைவாசாரியம் செய்வதற்கென்று வடநாட்டிலிருந்து தமிழறியாத பிராமணர்களை அழைத்து வந்து பூசைக்காணி களை வழங்கிப் பூசகர் பணியில் அமர்த்தினார்கள் என்பது கல்வெட்டுக்கள் தருகின்ற செய்தி. அவ்வாறு கொண்டுவரப்பட்ட வடநாட்டுப் பிராமணரை அக்காலச் சோழ அரசர்கள் சிலர், குலகுருக்களாகக் கொண்டனர் என்பதும் கல்வெட்டுக்கள் தருகின்ற செய்தி. இராசராசனும் அவனுடைய மகனாகிய இராசேந்திரனும் வடநாட்டுப் பிராமணர்களைத் தங்கள் குருமார்களாகக் கொண்டிருந்ததைத் தஞ்சாவூர்க் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. குறிப்பாக இராசேந்திரசோழன் ஆயிரக்கணக்கான பிராமணர்களைக் கங்கைக் கரையிலிருந்து அழைத்துவந்து, தமிழ்நாட்டில் குடியேற்றினான் என்பதைத் **திருலோச்சன சிவாசாரியார்** எழுதிய **சித்தாந்தசாரவலி** என்ற நூல் கூறுகின்றது என்று நாவலர் **ந.மு.வேங்கடசாமிநாட்டார்** அவர்கள் தமது கல்வெட்டுப் பற்றிய நூலில் எழுதியிருக்கின்றார்.

இவ்வாறு வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்களே தமிழ்மொழிக்கு விரோதமாகச் செயற்பட்டுத் தமிழ்நாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ப்பெயர்கள், தலப்பெயர்கள் பலவற்றைச் சமக்கிருத மயமாக்கினர் என்பது வரலாறு. இலங்கையில் சிங்கள மன்னர்களும் இப்படியான அடாவடித்தனம் செய்தார்கள் என்பதும் வரலாறு. **"மணல் ஆறு"** என்பது **"வெலி ஓயா"** என்று மாற்றப்பட்டமை அதற்கான ஓர் எடுத்துக்காட்டு. இன்றைய சிங்கள அரசு அதே செயலை வன்னியில் மும்முரமாகச் செய்கின்றது என்பது இன்றைய அரசியல் நிகழ்வு.

இறைவனின் அருளால் பாடிய பாட்டுக்களான தேவார திருவாசகங்களைப் பிராமணராக அல்லாத ஓதுவார்கள் ஏனைய கோயில்களில் ஓதுகிறார்கள். ஆனால், அவர்கள் தில்லையில் தேவாரம் ஓதுவதைத் தில்லையில் பூசை செய்யும் தில்லைவாழ் அந்தணர்கள் விரும்பவில்லை. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுகின்றவர்கள் என்று வள்ளுவர் கூறும் தமிழ்நாட்டு அந்தணர்கள் வேறு. அவிசொரிந்து ஆயிரம் வேட்டுச் சோமபானம் அருந்திய வடநாட்டுப் பிராமணர் வேறு என்பது இங்கே மனங்கொள்ளத்தகும்.

பழைய உரைகள் என்று தேவார திருவாசகங்களுக்கு உரைகள் இருப்பதாகத் தெரியவில்லை. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், சேக்கிழார் அடிப்பொடி எனப்படும் கலாநிதி T.N. இராமச்சந்திரன் அவர்கள் போன்ற ஒருசிலர், தேர்ந்தெடுத்த தேவாரங்கள் சிலவற்றுக்கு விளக்கமும் மொழிபெயர்ப்பும் கொடுத்திருக்கிறார்கள். திருமந்திரத்தின் நிலையும் அவ்வாறாகவே இருந்து வந்திருக்கிறது என்றே எண்ணத் தோன்றுகிறது. தெய்வ நூல்களான தேவார திருவாசகங்களையும், திருமந்திரத்தையும் பிராமணரல்லாதோர் தீண்டுவது பாவம் என்ற கருத்து நிலவியதால், அவை புறக் கணிக்கப்பட்டன போலும்.! இருபதாம் நூற்றாண்டில் அந்த நிலை சற்று மாறியது என்று சொல்லலாம். அதன் விளைவாக இருபதாம் நூற்றாண்டில் சில திருமந்திர விளக்க நூல்கள் வெளிவந்தன. அவற்றுட் சிலவற்றின் பெயர்களைக் கீழே காணலாம்.:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. **"திருமந்திரக் கருத்து" - திருவாவடுதுறை ஆதீனம். (1964)**
2. **"திருமூலர் திருமந்திரம்" - கைலாயச்சித்தர் உரை - திருவாவடுதுறை (1954)**
3. **"திருமந்திர சம்பிரதாயம்" - எம். இரத்தினசபாபதிப்பிள்ளை - சைவசித்தாந்த சமாசம் - சென்னை (1968)**
4. **"திருமந்திரம்" - கழக வெளியீடு - சென்னை(1962-1963)**
5. **"திருமந்திரம்" - சைவசித்தாந்த சமாசம் - சென்னை (1940)**
6. **"திருமந்திரம்" - சிறீ குமரகுருபரன் சங்கம் - சிறீ வைகுண்டம் (1960)**
7. **"திருமந்திரம்" - எம்.வி. விசுவநாதபிள்ளை - சென்னை (1912)**
8. **"திருமந்திரம்" - உலகநாதன் பதிப்பு**

மேற்படி பட்டியலைப் பார்க்கும்போது, 1912ஆம் ஆண்டுக்கு முன்னர் திருமந்திரத்துக்கு எவருமே உரை எழுதவில்லை என்று தெரிகிறது. இந்தக் கூற்றும் ஆராயப்படவேண்டியதே. முனைவர் இரா மாணிக்கவாசகம் என்பவரால் எழுதப்பட்ட **திருமந்திர ஆராய்ச்சி** என்ற ஒரு நூல் 1982ஆம் ஆண்டில் "அன்னை அபிராமி அருள்" என்ற நிலையத்தால் வெளியிடப்பட்டது.

"Thirumantiram"– A Tamil Scriptural Classic" என்ற ஓர் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் 1991 ஆம் ஆண்டு பொள்ளாச்சி Dr என். மகாலிங்கம் என்பவரால் வெளியிடப்பட்டது. இதை மொழிபெயர்த்தவர் Dr. B. Natarajan என்பவர். கவிஞர் கோ. ஞா. மாணிக்கவாசகன் என்பவர் 2003ஆம் ஆண்டில் திருமந்திரத்துக்கு ஓர் உரை எழுதி **"திருமூலர் திருமந்திரம் - மூலமும் விளக்க உரையும்"** என்ற பெயரில் வெளியிட்டார். சென்னையில் அமைந்துள்ள "உமா பதிப்பகம்" என்ற அச்சகத்தார் அதனைத் தமது பதிப்பாக வெளியிட்டுள்ளனர். கனடா நாட்டில் அமைந்து செயற்படுகின்ற Balaji's Kriya Yoga and Publications என்ற நிறுவனத்தினர் "The Yoga of Siddha Tirumûlar" என்ற பெயருள்ள ஆங்கில நூலொன்றை 2006ஆம் ஆண்டில் வெளியிட்டனர். பத்துக் கட்டுரைகள் அடங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நூலை Dr T.N. Ganapathy, Dr K.R. Arumugam என்று இருவர் எழுதியுள்ளனர்.

திருமந்திரம் பற்றிக் கற்க நினைக்கின்றவர்கள் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்களைப் புரிந்து கொண்டாலன்றித் திருமூலர் கூறுகின்ற செய்திகளைப் புரிந்து கொள்ள முடியாது. இதனை மனதிற் கொண்டு சைவசித்தாந் தத்தின் அடிப்படைக் கருத்துக்கள் சிலவற்றை இந்த நூலின் முதலாம் பகுதியில் விளக்கியிருக்கிறேன்.

சைவசித்தாந்தக் கருத்துக்கள் எல்லாமே திடீரென்று தமிழரின் (திராவிடரின்) மனதில் தோன்றிய கருத்துக்கள் என்று எண்ணிவிடக்கூடாது. அவை வேதங்களிலும் சிவ ஆகமங்களிலும் ஏற்கெனவே பேசப்பட்டு விவாதிக்கப்பட்ட கருத்துக்களையும் கொண்டிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் வேதங்கள் பற்றிச் சில கருத்துக்கள் கூறுவது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

நான்கு வேதங்களும் கிறித்து பிறப்பதற்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருக்கலாம் என்பது வரலாற்று அறிஞர்களின் கருத்து. இன்று சமக்கிருத மொழியில் உள்ள வேதங்கள் கூறுகின்ற தத்துவ விசாரணைச் செய்திகள் இந்தியாவுக்கு வெளியிலிருந்து வந்தவர்களாகச் சொல்லப் படுகின்ற ஆரியர்கள் கொண்டுவந்த நம்பிக்கைகள் அல்ல. ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தபோது, இந்திய மண்ணின் மைந்தர்களாக இருந்த திராவிடர்கள் கொண்டிருந்த கொள்கைகள் பலவும் இன்று வடமொழியில் கிடைக்கின்ற வேதங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என்பதும் தத்துவ வரலாற்றுப் பேராசிரியர்களின் கருத்தாகும். ஆரியரும் இந்திய மண்ணின் மைந்தரான திராவிடரும் கலந்தபின்னர், இந்திய மக்களில் பெரும்பாலோர் கொண்டிருந்த ஆன்மவிசாரக் கொள்கைகளின் சாரமே இன்று நமக்குக் கிடைத்துள்ள வேதங் களில் காண்கின்றது. இவற்றுக்குள் எவ்வளவோ இடைச் செருகல்களும் காலப்போக்கில் நுழைந்திருக்கின்றன என்பதும் மறுக்க முடியாத ஒருண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்** என்ற வேதங்கள் இன்று சமக்கிருத மொழியில் இருக்கின்றன என்ற ஒரு கருத்தை மட்டும் வைத்துக்கொண்டு, வேதங்களில் உள்ள செய்திகள் யாவும் ஆரியர் எனப்படுகின்ற வடநாட்டினருக்கே உரியன என்ற முடிவுக்கும் வந்துவிட முடியாது.

இன்று வடமொழி நூலாக நாங்கள் பார்க்கின்ற நான்கு வேதங்களும் தமிழ் மொழியிலும் இருந்தன என்றும், பின்னர் அந்தத் தமிழ்மொழி ஏடுகள் அழிந்துபோயின என்றும் கொள்ளலும் பொருந்துவதே. அஃதன்றி, இன்றுள்ள சமக்கிருத மொழி வேதங்கள் திராவிடர்களால் மட்டும் படைக்கப்பட்ட நூல்களாக இருத்தலும்கூடும். அவ்வாறு கருதுவதற்குக் காரணங்களும் உள்ளன.

இன்று, பரதநாட்டியமென்று பறையப்படுகின்ற தமிழ் ஆடல் தமிழர்க்கே உரித்தாக இருந்த ஆடல் என்பதில் ஐயம் எதுவுமே இருக்கமுடியாது. அந்த ஆடல் பற்றிய இன்றைய நூல், சமக்கிருத மொழியில் இருக்கின்றது என்ற ஒரே காரணத்தை வைத்துக்கொண்டு, அந்த ஆடல் வடநாட்டாருக்கே உரித்தாக இருந்த ஆடல் என்ற முடிவுக்கு வந்துவிடமுடியாது. பரதநாட்டியம் கூறுகின்ற விடயங்கள் பல தமிழ்நாட்டுக் கோயிற் சிற்பங்களிலேதான் பெருமளவில் காணப்படுகின்றன. அந்த ஆடல்பற்றிப் பேசுகின்ற நூலும் **இளங்கோ** எழுதிய சிலப்பதிகாரந்தான். இளங்கோ அடிகள் இரண்டாம் நூற்றாண்டுக்கு உரியவர். பரதநாட்டிய சாத்திரத்தின் ஆசிரியர் **பரதர்** எனப்படுகின்றார். அவர் கி.பி. மூன்றாம் அல்லது நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அந்தப் பெயருள்ள ஒருவர்தான் அதனை எழுதினாரென்று வைத்துக்கொண்டாலும், அவர் வடவர் என்பதற்கு ஆதாரம் இல்லை. அவர் ஒரு தமிழராக இருந்திருக்கவும் கூடும். இன்றைய உலகில் ஆங்கிலத்தில் பேசினால்தான், எழுதினால்தான் பெருமையென்று நம்மவர் சிலர் நினைத்து ஆங்கிலத்தில் எழுதுவதும் பேசுவதும் போல, அன்றைய தமிழர் சிலரும் தமிழாடல் பற்றிய நூலைச் சமக்கிருத மொழியில் எழுதியிருத்தல் கூடும். தமிழரின் ஆடலை வடவருக்கு அறிமுகப்படுத்த வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காகத் தமிழும் சமக்கிருதமும் வல்ல தமிழர் ஒருவர், தமிழாடல் பற்றிய நூலைச் சமக்கிருத மொழயில் எழுதியிருத் தலுங் கூடும்.

தமிழ்நாடு, முகலாயருக்கும், மராட்டியருக்கும், விசய நகரத்துத் தெலுங்கருக்கும், நாயக்கருக்கும் முந்நூறு ஆண்டு களுக்கு மேலாக அடிமைப்பட்டுக் கிடந்ததன் விளைவாகப் **புரந்தரதாசரின்** கன்னட இசையும், **தியாகராசர், சியாமா சாத்திரி, முத்துச்சாமி தீட்சிதர்** ஆகியோரின் தெலுங்கு, சமக்கிருத மொழி களில் அமைந்த இசையும், தமிழருக்கே உரித்தான தமிழிசையை வழக்கொழித்ததுபோல, ஏதோவொரு வரலாற்றுக் காரணியால், தமிழ் மொழியிலிருந்த வேதங்களும் ஆகமங்களும் அழிக்கப் பட்டிருக்கக்கூடும். நம்முடைய ஏழு **திருமுறைகள்** கூட அழியுந்தறுவாயிலிருந்து மீட்கப்பட்ட கதை நாம் அறிந்த கதை. இசை நுணுக்க விளக்கம் நிறைந்த **அடியார்க்கு நல்லாரின்** சிலப்பதிகார உரை நம் தவக்குறைவால் மறைந்த கதையும் நாமறிந்த கதைதான்.

மலையாளத்தின் (திருவாங்கூரின்) மன்னராயிருந்த **சுவாதித்திருநாள் மகாராசா** மலையாள மொழியும் தமிழும் வல்லவரா யிருந்தும், தமது இசை உருப்படிகள் அனைத்தையும் (250) சமக்கிருத மொழியிலும் தெலுங்கு மொழியிலும் இயற்றியது நாமறிந்த வரலாறு.

பிற்கால இசை மூவர்களுள் ஒருவரான **சியாமா சாத்திரி** அவர்கள் தமிழ்நாட்டுக்கே உரிய ஒரு தமிழ்ப் பிராமணர். அவர் ஒரு தமிழராக இருந்தும் தமது பெரும்பாலான இசை உருப்படிகளைத் தெலுங்கு மொழியிலேதான் இயற்றியும் பாடியும் வந்தார். தமிழ் ஊரான **திருவாரூரில்** வாழ்ந்தபோதும், தெலுங்கிலே பாடினால்தான், தெலுங்கிலே இயற்றினால்தான், பேரும் புகழும் கிடைக்குமென்று எண்ணிய அந்தத் தமிழர், தம் தாய்மொழியை விடுத்துத் தெலுங்கு மொழியில் பாடல்களை இயற்றினார் என்பது பதினெட்டாம் நூற்றாண்டின் வரலாறு. சுவாதித் திருநாளையும் சியாமா சாத்திரியையும் பற்றியிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் போன்ற ஒரு நோய், பழங்காலத் தமிழரின் மத்தியிலும் இருந்திருக்குமென்று நம்பலாம்.

**தண்டியலங்காரம்** என்று ஓர் அணியிலக்கண நூல் தமிழில் உண்டு. அதனை எழுதிய ஆசிரியரின் பெயர் **தண்டி** என்பது. வடமொழியில் **காவியாதர்சம்** என்ற ஓர் அணியிலக்கண நூல் உண்டு. அந்த வடமொழி அணி இலக்கணத்தை எழுதிய வரும் தமிழ்த் தண்டியலங்கார நூலை எழுதியவரும் ஒருவர்தான் என்ற விடயம் பலருக்குத் தெரியாது என்று தமிழ்ப் **பேரறிஞர் மு. அருணாசலம்** அவர்கள் "தமிழ் இலக்கிய வரலாறு" (பாகம் 12.. 02) என்ற நூலில் எழுதியிருக்கிறார். "Tamil - A Biography" என்ற நூலை எழுதிய Professor Dr David Shulman அவர்களும் இந்தக் கருத்தை அவருடைய நூலின் 5 ஆம் பக்கத்தில் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

வேதங்கள் மூவாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்தவை யாயினும் அவற்றிலே பல குறைபாடுகள் இருந்தன; விளக்க வீனங்களும் இருந்தன. இதனால் வேதங்கள் பற்றிய பல விமர்சனங்கள் எழத்தொடங்கின. இந்த விமர்சனங்கள்தாம் உபநிடதங்கள். மேற்படி விமர்சனங்களாகிய உபநிடதங்களும், ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களைக் கொண்டிருந்தன. சில உபநிடதங்கள் இரட்டை நாக்குக் கொண்டிருந்தன; இரண்டுற மொழியும் பண்புகொண்டிருந்தன. ஆகவே இந்தியத் தத்துவப் பொருளைப் புரிவதற்கு உபநிடதங்களை மட்டும் நம்பக்கூடாது என்ற நிலை ஒன்று தோன்றியது. அந்த நிலையில் இந்திய தத்துவப் பொருளைச் சரிவரப் புரிவதற்கு **உபநிடதம், பகவத்கீதை, பிரம்மசூத்திரம்** என்ற மூன்றையும் ஆராய்ந்து முடிவுகாண வேண்டும் என்ற ஒரு கொள்கை பரவியது. இந்த மூன்று நூல்களுக்கும் "முக்கியமான மூன்று" **("பிரத்தானத் திரயம்")** என்பது பெயர். "பிரத்தானத்திரயம்" என்ற தொடரை முதன்முதலாகக் கூறியவர் யாரெண்பது புரியவில்லை. அவரைப் பற்றிய விவரமும் கிடைக்கவில்லை. பாரதம் என்ற நெடுங் கதையின் கடைசி அங்கமென்று கூறப்படுகின்ற "பகவத்கீதை" விட்டுணுவின் புகழ் பாடுகின்ற ஒரு உரையாடற்கதை. இதனைப் பிற்கால இடைச் செருகல் என்று சொல்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞரும் உளர். இந்த உரையாடல் "முக்கியமான மூன்று" என்ற தொடருக்குள் நுழைந்தது எப்படியென்பதும் வியப்பூட்டு வதாகவே உள்ளது.

இந்த "முக்கியமான மூன்றில்" **"பிரம்ம சூத்திரம்"** என்பதும் அடங்கும். இந்தப் பிரம்மசூத்திரத்தை இயற்றியவர் **வியாசர்** எனப்படுகின்றார். பாரதத்தை இயற்றிய பாரதவியாசரும், பிரம்மசூத்திரத்தை இயற்றிய வேதவியாசரும் ஒருவரோ இருவரோ என்பதும் தெரியவில்லை. வேதவியாசருக்குப் **பாதராயனர்** என்ற ஒரு பெயரும் இருப்பதாகச் சொல்வார்கள்.

"முக்கியமான மூன்று" என்றவொரு சங்கதிக்குள்ளேதான் வேதங்களின் சாரம் அடங்கியிருக்கின்றது என்று கூறிய பின்னரும், உபநிடதங்கள் பற்றிய சங்கடங்கள் தொடர்ந்து கொண்டே வந்தன. முக்கியமான மூன்றைப் படிப்பதால் குழப்பம் விளையுமே ஒழியத் தெளிவு ஏற்படாது என்ற ஒரு நிலை வடநாட்டில் ஏற்பட்டது. ஒவ்வொருவரும் கண்டபாட்டில் கொண்டை முடித்து மகிழ்ந்துகொண்டிருந்தனர். வைதீகம் வலுவிழக்கத் தொடங்கியது. வடநாட்டில் **உலகாயதமும், சமணமும், பவுத்தமும்** கொடிகட்டிப் பறக்கத்தொடங்கின. **அசோகச் சக்கரவர்த்தி** பவுத்தத்தைத் தழுவியவுடனும், வடநாடு பவுத்தத்தைத் தழுவியது. மெல்ல மெல்ல அது தமிழ்நாட்டுக்குள் புகுந்தது. பருமாவுக்குள்ளும் ஊடுருவியது. கி.பி. முதலாம் நூற்றாண்டளவில், தமிழ் நாட்டுக்குள் நுழைந்த பவுத்தமும் சமணமும் கி.பி ஆறாம் நூற்றாண்டுவரை, (நானூறு ஆண்டுகள்) தமிழர் சமயமான சிவப்பயிரை மேய்ந்து அழித்தன. இந்தக் கட்டத்திலேதான் சமணப் புல்லுருவியையும், பவுத்த ஒட்டுண்ணியையும் பக்தி என்ற கிருமிநாசினி கொண்டு தொலைக்கவென **அப்பரும், சம்பந்தரும்** தமிழ்நாட்டில் வந்து பிறந்தனர். சைவத்தைக் காக்கவெனச் சம்பந்தரும் அப்பரும் கிளம்பியதைக் கண்ட தென்தமிழ் நாட்டுப் பிராமணரான **சங்கரர்** என்பவர் வடக்கிலே வாழ்விழந்து தடுமாறிக்கிடந்த வேதாந்தக் கொள்கைக்குப் புத்துயிர் கொடுக்கவெனப் புறப்பட்டார் என்பது வரலாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மசூத்திரமென்ற வேதாந்த சூத்திரத்தை எழுதிய வியாசரின் முயற்சி, தெளிவுக்குப் பதிலாகக் குழப்பத்தையே ஏற்படுத்தி வடநாட்டில் அவைதிக சமயங்கள் தோன்ற வழி வகுத்தது என்று முன்னர் பார்த்தோம். வடநாட்டு வியாசரின் வேதாந்த சூத்திரத்தில் காணப்பட்ட மயக்கங்களைத் தெளிவு படுத்திக் குறைகளை நீக்கும் முயற்சியில் சங்கரர் என்ற தமிழ் நாட்டுப் பிராமணர் இறங்கினார்.

இன்றைய மலையாளத்திலுள்ள **காலடி** என்ற இடத்தில் பிறந்த சங்கரர், **ஏகான்மவாதம்** என்ற **மாயாவாதத்தை** நிலை நாட்டுவதற்காகப் பல நூல்களைச் சமக்கிருத மொழியில் எழுதினார். அவர் எழுதிய எழுத்துக்களால் வேதாந்தம் பற்றிய சிந்தனை வடநாட்டில் புத்துயிர் பெற்று வளரத் தொடங்கியது. சங்கரரின் விளக்கத்தைப் பலர் ஏற்றுக்கொண்டபோதும், தமிழ்நாட்டைச் சேர்ந்த வேதாந்தப் பிராமணர் சிலர் ஏகான்ம வாதக் கொள்கையை (மாயாவாதத்தை) ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அவர்களில் முக்கியமானவர் இருவர். ஒருவரின் பெயர் **இராமாநுசர்** மற்றவரின் பெயர் **மத்துவாசாரியார்**.

இராமாநுசர் தோற்றுவித்த தரிசனத்துக்கு **விசிட்டாத்துவிதம்** என்பது பெயர். மத்துவாசாரியார் தோற்றுவித்த தத்துவ தரிசனத்துக்கு **துவைதம்** என்பது பெயர்.

இராமாநுசர் தமிழ்நாட்டில் பிறந்த தமிழர் எனினும், வியாசரின் பிரம்மசூத்திரத்துக்கு விளக்கம் கொடுக்கவந்த சங்கரரின் மாயாவாதக் கொள்கைகளை மறுக்கவென எழுதிய நூல்களைச் சமக்கிருத மொழியிலேதான் எழுதினார். மத்துவாசாரியாரும் ஒரு தமிழரே. அவர் தமிழ்நாட்டில் **உடுப்பி** என்ற இடத்தில் பிறந்தவர்; தமிழிலும் வடமொழியிலும் நிறை புலமை கொண்டவர். முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதிய இவர், எல்லா நூல்களையும் வடமொழியிலேதான் எழுதினார்.

காலப்போக்கில், வரலாற்றுப் பதிவுகள் அழிந்துபோனால் சங்கரர், இராமாநுசர், மத்துவர் ஆகியோர் வடநாட்டு அறிஞர்கள் என்ற தவறான கருத்துத் தோன்றவும்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய வேதங்கள் ஆகமங்கள் என்பன தமிழ் மொழி யிலும் இருந்திருக்கலாம் அல்லது தமிழ் மொழியிலே மட்டுமே இருந்து பின்னர் வடமொழிக்கு மொழி மாற்றப்பட்டிருக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்தவே மேற்கண்டவற்றை எழுத நேர்ந்தது.

வேதங்களை விமர்சித்த **தீர்த்தங்கரும், புத்தரும், சர்வாகரும்** இந்த உலகம் பற்றியும், கடவுள் பற்றியும், உயிர் பற்றியும் நிறையவே பேசியும் விவாதித்தும் வந்தார்கள். அந்த விவாதங்களின் பயனாகவே, **உலகாயதம், சமணம், பவுத்தம், சாங்கியம், யோகம், வைசேடிகம், சங்கரவேதாந்தம், இராமாநுச வேதாந்தம், மத்துவ வேதாந்தம்** என்று சொல்லப்படுகின்ற தத்துவப் பார்வைகள் வெளிக்கிளம்பி வெவ்வேறு உள்ளங்களை இந்தியா எங்கணும் கொள்ளை கொண்டன. மேற்படி தரிசனங்களுள் ஒன்றுதானும், பழந்தமிழ் இலக்கியங்களிலும் தமிழ்ப் பக்தி இலக்கியங்களிலும் காணப்பட்ட இறைக்கொள்கை யோடு முழு அளவில் ஒத்துப் போகாமல் இருந்ததைக் கண்ட **சந்தான குரவர்கள்,** மேற்படி அவைதிக தரிசனங்களையும் வைதிக தரிசனங்களையும் தருக்க முறைப்படி ஆராய்ந்து, அந்தந்தத் தரிசனங்களில் காணப்பட்ட குறைகளைச் சுட்டிக்காட்டி, முடிந்த முடிவாக வெளியிட்ட சித்தாந்தமே **சைவசித்தாந்தம்** என்ற முப்பொருள் உண்மைச் சித்தாந்தம்.

இந்தத் தருக்க முறையான சித்தாந்தத்தைப் புரிந்து கொள்வதற்கு, மேற்படி தரிசனங்களின் கோட்பாடுகளைச் சிறிய அளவிலாகுதல் புரிந்து கொள்வது அவசியம் என்பதால் அவற்றைப் பற்றியும் திருமந்திரம் பற்றிய இந்த அறிமுக நூலில் எழுதியிருக்கிறேன்.

உண்மையைச் சொல்லப்போனால், திருமந்திரம் பற்றித் தெரிய விரும்புகிறவர்கள், ஆறு தரிசனங்கள் பற்றியும், அதனை அடுத்துச் சைவசித்தாந்தம் பற்றியும் தெரிந்த பின்னர்தான் திருமந்திரப் பகுதிக்குள் புகவேண்டும். ஆகவே திருமந்திரம் பற்றித் தீவிரமாகத் தெரிய விரும்புகின்றவர்கள் இந்திய தரிசனங்கள் பற்றியும், சைவசித்தாந்தம் பற்றியும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டிருப்பனவற்றைப் படித்த பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரத்துக்குள் நுழைவதே விரும்பத்தக்கது. இந்த நூலில் அடங்கியுள்ள மூன்று பகுதிகளும் தனித்தனிப் பகுதிகள். ஆதலால் எந்தப் பகுதியை முதற்படித்தாலும் தீங்கில்லை. ஆகவே எதை முதலில் படிப்பது என்பதை வாசகரின் முடிவுக்கே விட்டுவிடுகின்றேன்.

**திருமந்திரம்** பற்றிய இந்த நூல் ஒரு பாலபாடம் போன்றதே. திருமந்திரத்தை ஆழமாகப் படிக்க விரும்புகின்றவர்கள், ஆழங் காற்பட்ட அநுபூதிகளைத் தேடிப்பிடித்து அவர்களிடம் கற்க வேண்டும். திருமந்திரத்தில் வருகின்ற பாடல்கள் பல, மறைமொழிகளாகவே உள்ளன; அதாவது குழூஉக்குறிச் சொற்கள் கொண்டனவாகவே உள்ளன. மேலோட்டமாகப் பார்த்தால் ஒரு பொருளும், ஆழமாகப் பார்த்தால் வேறொரு தீவிரமான பொருளும் புதைந்திருப்பதைக் காணலாம். புதைந்திருக்கும் பொருள்தான் திருமூலரின் உட்கருத்தாக இருக்கும். அந்தப் பொருள் தத்துவங்கள் பொதிந்ததாக இருக்கும்; யோகப்பயிற்சியில் திளைத்த அநுபூதிமான்களுக்கே அவை புரியும். யோகப்பயிற்சியும் சைவசித்தாந்தம் பற்றிய ஞானமும் சிவவழிபாட்டு வாழ்க்கைமுறையும் இல்லாதவரிடம் திருமந்திரம் கற்பதென்பது, திருமூலர் சொல்வதுபோலக் குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடுகின்ற கதையாக முடியும்.

**“ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே**
**மெய்யுணர்வு இல்லாத வர்க்கு”**

என்ற குறளில், மெய்யுணர்வாளர் என்று வள்ளுவர் குறிப்பிடுவது இந்த அநுபூதிமான்களையே.

இலண்டனில் இயங்கி வருகின்ற **“வித்துவான் க.ந. வேலன் இலக்கிய வட்டம்”** என்ற வட்டத்தினர், அவர்களின் மாத இலக்கிய வட்டக் கூட்டத்தின்போது (2016ஆம் ஆண்டு செற்றெம்பர்) திருமந்திரம் பற்றி ஓர் ஆய்வு நடத்தினர். அந்தக் கூட்டத்தில் நான் பேசிய ஆரம்ப உரையைக் கேட்ட வட்ட நண்பர்கள் அந்த உரையைச் சிறிய அறிமுக நூலாக எழுதி உதவும்படி வேண்டினார்கள். அந்த வேண்டுதலின் விளைவே இந்தச் சிறிய நூல். திருமந்திரம் பற்றிய மேலெழுந்தவாரியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளையே இந்த நூலில் எழுதியிருக்கிறேன். திருமந்திரத்தை ஆழமாகக் கற்க விரும்புகின்றவர்களுக்கு இந்த அறிமுகநூல் சிறிய அளவிலேனும் வழிவகுக்குமேல் மகிழ்வேன்.

இந்த நூலைக் கையால் எழுதிமுடித்த பின்னர், தட்டச்சிடுவது யார் என்ற கனத்த கேள்வி மனத்துள் எழுந்தது. இலண்டனின் நியூமால்டன் என்ற பகுதியில் இயங்குகின்ற ஒரு தமிழ்ப்பள்ளியின் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரும், தமிழ் ஆர்வலரும், **"கலசம்"** என்ற சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான செகதீசுவரம்பிள்ளை அவர்களின் உதவியை நாடி அவரை வேண்டினேன். மறுபேச்சுப் பேசாமல் என் வேண்டுகோளுக்கு இணங்கி இந்தத் தட்டச்சு வேலையைத் திறம்படச் செய்து தந்த அவருக்கு நன்றி கூறுகின்றேன். தட்டச்சோடு நின்றுவிடாமல், அரிய கருத்துக்களையும் அவ்வப்போது கூறி, இந்த நூலுக்குக் கவின்சேர்த்த அவருக்கு எனது வாழ்த்துக்கள். அச்சகத்துக்குப் போகுமுன்னர் இந்த நூலை வாசித்து, நூலுக்குப் பொருத்தமான அணிந்துரை வழங்கிய தமிழியல் வித்தகன் பத்மசிறீ முனைவர் ஔவை நடராசன் அவர்களுக்குப் பல்லாண்டு பாடி நன்றி கூறுகின்றேன். இந்த நூலின் தட்டச்சுப்படியை இட்டத்தோடு வாசித்து எனக்கு உற்சாக மூட்டி என்னை வாழ்த்தியதோடு இந்த நூலுக்கெனப் பிரார்த்தனை உரை ஒன்றையும் எழுதி உதவிய எனது சட்டக் கல்லூரி நண்பனும் இந்து மாமன்றத்தின் தலைவருமான கந்தையா நீலகண்டன் அவர்களுக்கும் பெரும் நன்றியுடையேன்.

இந்த முயற்சியில் என்னை ஊக்கிய வித்துவான் வேலன் இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்களுக்கும், இந்த நூலை விரைவில் எழுதி முடிக்குமாறு ஊக்கிய என் மனைவி மாதினிக்கும் எனது உள்ளம் குழைந்த நன்றி. வழக்கம் போல இந்த நூலை அழகுற அச்சிட்டு உதவிய குமரன் அச்சகத்தாருக்கு நன்றியுடையேன்.

14/05/2017

**செ. சிறீக்கந்தராசா** B.Sc; LL.M
வழக்கறிஞர்
இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Padmashri
**Dr.AVVAI NATARAJAN**
CHANCELLOR - BHARATH UNIVERSITY
FORMER VICE-CHANCELLOR
FORMER SECY TO GOVT. OF TAMILNADU (RETD.)

OFFICE :
# 30, B.B.C. ORCHID APARTMENTS
TILAK STREET, THEAGARAYA NAGAR,
CHENNAI - 600 017.
98410 19950 044-28340020
thamizhavvai@hotmail.com

# திருமந்திரத் தெளிவு

இலண்டன் மாநகரத்தில் பிரித்தானியத் தமிழ் மகனாகத் தனிப்புகழொடு திகழும் வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா, தம் வழக்குப்பணிகள் ஒருபுறம் நெருக்கினாலும், ஆர்வம் ததும்பும் அறிவுழைப்பினால், தமிழ் ஆங்கில நூல்களை நுண்ணிய சித்தம் மணங்கமழ எழுதிவருவதை எண்ணி நான் பாராட்டாத நாளில்லை.

திருக்குறள், சிலப்பதிகாரம், திருமுறைகளில் தோய்ந்த புலமையால் நூலாசிரியர் வரைந்த நூல்கள் எல்லாம் அஃகி அகன்ற அறிவுச் செழுமையைக் காட்டவல்லன.

படிறு இலவாகி ஈரம் அளைந்த இனிமையுடையனவாய்ச் செம்பொருள் கண்டவர் மொழியும் வாய்ச்சொற்கள், கருதியன பயக்கும் பண்மாண் சிறப்புடையன; நிலத்துக்கும் பெருமையூட்டும் நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப என்னும் கருத்தினைத் தொல்காப்பியமும் திருக்குறளும் தெளிவுறுத்துகின்றன.

அருளியல் பரப்பும் ஞானநூல்கள் சாத்திரம் தோத்திரம் என்னும் இருவகையுள் அடங்கும். "சொல்லும் பொருளும் ஆனார்தாமே தோத்திரமும் சாத்திரமும் ஆனார்தாமே" என்பது ஆளுடைய அரசின் அருளுரையாகும்.

இந்நிலையில், தோத்திர நூல்களைத் திருமுறைகள் எனவும், சாத்திர நூல்களை மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் வழங்குவது மரபு. பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தைத் தோத்திரத்துக்குத் தோத்திரமாகவும் சாத்திரத்துக்குச் சாத்திர மாகவும் அருட்செல்வர்கள் போற்றியுரைத்தனர். பேரருளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்வதாகவும் மெய்யுணர்வு பொங்கும் ஞான உரையாகவும் திருமந்திரச் சொற்கள் அமைந்தன.

தமிழ் மந்திரமாகிய திருமந்திரங்கள் மூவாயிரம் எனவும், வள்ளற்பெருமான் எண்ணாயிரம் என்றும், குறிப்பதுண்டு. "மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ், ஞாலம் அறியவே நந்தி அருளது, காலையெழுந்து கருத்தறிந் தோதிடில், ஞாலத்தலைவரை நண்ணுவர் அன்றே" என்று திருமந்திரம் குறிப்பிடக்காணலாம்.

ஓதற்கு எளிதாய தந்திரங்கள் உணர்வதற்கு அரிதாய் அமைந்துள்ளன. வேதாந்திகள், சித்தாந்திகள், சித்தர்கள் எனப் பலரும் திருமந்திரத்தைத் தம் மதம் நிறுவ மேற்கோளாகக் காட்டி உரைப்பர். யோகம், சக்கரம் முதலிய பொருண்மைகள் தமிழர்க்கு உடன்பாடானவையா என்று ஐயுறுவோரும் உண்டு. திருக்குறளில் இடம்பெறாதன, தமிழ் மரபெனக் கொள்ள என் மனம் துணியவில்லை.

திருமந்திரத்துக்கு விளக்கவுரை கண்டவர் இந்நூலை அறிவின் அறிவு என்றே எழுதினார். திருமந்திரக் கடலில் திளைத்து, அரிய பொருண்மைகளையும் எட்டவியலாத முடிவுகளையும், அறிதொறும் புதுச் சிந்தனைகள் புலர்விக்கும் வண்ணம் நண்பர் சிறீக்கந்தராசா நூற்றைம்பது பக்கங்களில் திருமந்திரத் திறவுகோலாக "திருமந்திரம் - ஓர் அறிமுகம்" என்ற அழகிய ஏட்டினை நாற்பத்தேழு தலைப்புக்களில் எளிய இனிய தமிழில் எழுதிய திறம் வியப்பினும் வியப்பிறந்தற்று. திருமந்திரத் திருமுகம் காட்டும் அறிமுக ஆடியாக இந்நூல் அமைகிறது. சான்றாக, நூலாசிரியர் எழுதிய ஒரு பகுதியைச் சுட்டிக்காட்ட விழைகிறேன்:

> "வேதங்களை விமர்சித்த தீர்த்தங்கரரும், புத்தரும், சர்வாகரும் இந்த உலகம் பற்றியும், கடவுள் பற்றியும், உயிர் பற்றியும் நிறையவே பேசியும் விவாதித்தும் வந்தார்கள். அந்த விவாதங்களின் பயனாகவே, உலகாயதம், சமணம், பவுத்தம், சாங்கியம், யோகம், வைசேடிகம், சங்கரவேதாந்தம், இராமாநுச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாந்தம், மத்துவ வேதாந்தம் என்று சொல்லப்படுகின்ற தத்துவப் பார்வைகள் வெளிக்கிளம்பி வெவ்வேறு உள்ளங்களை இந்தியா எங்கணும் கொள்ளைகொண்டன. மேற்படி தரிசனங் களுள் ஒன்றுதானும், பழந்தமிழ் இலக்கியங்களிலும், தமிழ்ப் பக்தி இலக்கியங்களிலும் காணப்பட்ட இறைக்கொள்கையோடு முழு அளவில் ஒத்துப்போகாமல் இருந்ததைக் கண்ட சந்தானகுரவர்கள், மேற்படி அவைதிகத் தரிசனங்களையும் வைதிகத் தரிசனங்களையும் தருக்க முறைப்படி ஆராய்ந்து, அந்தந்தத் தரிசனங்களில் காணப்பட்ட குறைகளைச் சுட்டிக்காட்டி, முடிந்த முடிவாக வெளியிட்ட சித்தாந்தமே சைவ சித்தாந்தம் என்ற முப்பொருள் உண்மைச் சித்தாந்தம். இந்தத் தர்க்க முறையான சித்தாந்தத்தைப் புரிந்து கொள்வதற்கு, மேற்படி தரிசனங்களின் கோட்பாடுகளைச் சிறிய அளவிலாகுதல் புரிந்துகொள்வது அவசியம் என்பதால் அவற்றைப் பற்றியும் திருமந்திரம் பற்றிய இந்த அறிமுக நூலில் எழுதியிருக்கிறேன்.

உண்மையைச் சொல்லப்போனால், திருமந்திரம் பற்றித் தெரிய விரும்புகிறவர்கள், ஆறு தரிசனங்கள் பற்றியும், அதனை அடுத்துச் சைவசித்தாந்தம் பற்றியும் தெரிந்த பின்னர்தான் திரு மந்திரப் பகுதிக்குள் புகவேண்டும். ஆகவே திருமந்திரம் பற்றித் தீவிரமாகத் தெரிய விரும்புகின்றவர்கள் இந்தியத் தரிசனங்கள் பற்றியும், சைவசித்தாந்தம் பற்றியும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டிருப்பனவற்றைப் படித்த பின்னர்த் திருமந்திரத்துக்குள் நுழைவதே விரும்பத்தக்கது. இந்த நூலில் அடங்கியுள்ள மூன்று பகுதிகளும் தனித்தனிப் பகுதிகள்; ஆதலால் எந்தப் பகுதியை முதற் படித்தாலும் தீங்கில்லை. ஆகவே எதை முதலிற் படிப்பது என்பதை வாசகரின் முடிவுக்கே விட்டுவிடுகின்றேன்"

ஓர் அவிழ் பதமாக நாம் கண்ட இத்தொடர்கள் ஆசிரியர்தம் சிந்தனையில் திரண்ட கருத்தினைத் தெளிவாகப் புலனாக்கு கின்றன.

புலமைத் திலகமாகிய வழக்கறிஞர் சீர்வளர் கந்தராசாவைத் திருமந்திரமாமணி என்று அழைப்பதற்கு இவ்வறிமுக நூலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும். குறுகத் தறித்த வடிவத்தில், பெருகப் பெருகும் திருமந்திர நூலுக்கு அமைந்த இந்த அறிமுக நூலை இருகையேந்தித் தமிழர்கள் மகிழ்ந்தேற்பர் என்பது என் துணிபு.

இவ்வுரை வடிவெடுத்த வித்துவான் வேலன் இலக்கிய வட்டத்தின் நற்பணிகள் நாளும் தழைக்குமாக!

**தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகமென் றுணர்**

அறிஞர் ஔவை நடராசன்
மேனாள் துணைவேந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

**ALL CEYLON HINDU CONGRESS**

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

| நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் | தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| **Chairman of the Board of Trustees** | **President:** | **Hony. General Secretary:** | **Hony. Treasurer:** |
| வி. கயிலாசபிள்ளை | கந்தையா நீலகண்டன் | முத்தையா கதிர்காமநாதன் | வே. கந்தசாமி |
| *V.Kailasapillai* | *Kandiah Neelakandan* | *Muthiah Kathirgumanathan* | *V. Kandasamy* |
| *Phone:2575566 (Res)* | *Phone: 2580807 (Res)* | *Phone: 2582139 (Res)* | *Phone: 2586620 (Res)* |
| *Fax : 2575472* | *2371100 (Off) - Fax : 2371111* | *Fax: 2593997* | *Mobile: 071-5349150* |
| *hariomak@gmail.com* | *neela@mnlaw.lk* | *mknathan21@yahoo.com* | *vkandasami@gmail.com* |


# அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரின் பிரார்த்தனை உரை

இந்த நூலை ஆக்கித்தந்திருக்கும் என் பழைய நண்பர் சிறீக்கந்தராசாவை நேரில் அறியும் பாக்கியம் நாங்கள் இருவரும் ஐந்து தசாப்தங்களுக்கு முன் இலங்கைச் சட்டக் கல்லூரியில் பயின்ற காலகட்டத்தில் சிறியேனுக்குக் கிட்டியது. வித்துவான் க.ந. வேலன் அவர்களின் மருமகனான அவர் தமது கருத்தை ஆணித்தரமாக, இரத்தினச்சுருக்கமாக, சுத்தமான அழகிய தமிழில் எடுத்துக்கூறுகின்ற திறனை அந்த இளம் பராயத்திலேயே பெற்றிருந்தார்.

இந்த நூலின் தட்டச்சுப்படியை வாசிக்கும்போது அவர் அன்று கடைப்பிடித்த "தனித்தமிழ்க் கடும்போக்கை" நான் பல இடங்களிற் கவனித்தேன். புலம்பெயர்ந்து இலண்டனில் குடியேறியிருந்தும் தமது மண்ணின் வாசனையை மறவாத இந்த வடமராட்சியின் மைந்தன், தமிழும் சைவமும் பேணிப் போற்றிய குடும்பத்துடன் இணைந்து வாழ்ந்த, வாழ்கின்ற சிறப்பைப் பெற்றிருக்கிறார். அவரின் கருத்துக்களை எடைபோடும் அறிவோ, தகுதியோ எனக்கு இல்லை.

சிவயோக நுணுக்கங்களை விளக்கமாகக் கூறும் அற நூல் திருமந்திரமாகும். திருமூலர் சிவயோகநிலையில் அமர்ந்து ஆண்டுக்கு ஒரு மந்திரமாக மூவாயிரம் ஆண்டுகளில் திருமந்திரத்தைப் பாடியுள்ளார் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள். சைவசமயிகளது ஆதார நூலாகவும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தும் தத்துவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாகவும் திருமூலரின் திருமந்திரம் அமைகின்றது என்பதுவும் அறிஞர்களின் முடிவாகும்.

(1) சைவசித்தாந்தம், (2) இந்தியதத்துவ தரிசனம், (3) திருமந்திரம் என மூன்று பாகங்களில் இந்த நூலைத்தரும் சிறீக்கந்தராசா தமது உரையில் பின்வருமாறு கூறுகின்றார்:

"ஆறு தரிசனங்கள் பற்றியும், அதனை அடுத்துச் சைவசித்தாந்தம் பற்றியும் தெரிந்தபின்னர்தான் திருமந்திரப் பகுதிக்குள் புகவேண்டும். ஆகவே திருமந்திரம் பற்றித் தீவிரமாகத் தெரிய விரும்புகின்றவர்கள் இந்திய தரிசனங்கள் பற்றியும், சைவ சித்தாந்தம் பற்றியும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டிருப்பனவற்றைப் படித்த பின்னர் திருமந்திரத்ததுக்குள் நுழைவதே விரும்பத் தக்கது. இந்த நூலில் அடங்கியுள்ள மூன்று பகுதிகளும் தனித்தனிப் பகுதிகள். ஆதலால் எந்தப் பகுதியை முதற் படித்தாலும் தீங்கில்லை. ஆகவே எதை முதலில் படிப்பது என்பதை வாசகரின் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்."

திருமந்திரம் பற்றிய இந்த நூல் ஒரு "பாலபாடம்" எனத் தன்னடக்கத்துடன் கூறும் நுலாசிரியர் தமது நிறைவுரையில் பின்வருமாறு கூறிக்கொண்டு வாசகர்களிடமிருந்து விடை பெறுகின்றார்:

"திருமூலரின் திருமந்திரத்தையோ சந்தானகுரவரின் மெய்கண்ட சாத்திரங்களையோ கற்க விரும்புகின்றவர்கள், திருவள்ளுவரின் "நீத்தார் பெருமை", "மெய்யுணர்தல்", "அவா அறுத்தல்" என்ற அதிகாரங்களில் வருகின்ற குறள்களைக் கசடறக் கற்றுத் தெளியவேண்டும். அவ்வாறு கற்றபின், மெய்கண்ட சாத்திரங்களின் அடிப்படைத் தத்துவங்களைப் புரிந்துகொண்டு திருமந்திர மாலைக்குள் புகுவது பயனுள்ள முயற்சியாக அமையும். இதனை மனதில் கொண்டே திருமந்திரம் பற்றிய இந்த நூலில் சைவசித்தாந்தம் பற்றியும் இந்தியத் தத்துவ தரிசனங்கள் பற்றியும் முதலாம் இரண்டாம் பாகங்களில் சிறு சிறு குறிப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திருமந்திரத்தை ஆழமாகக் கற்க விரும்புகின்றவர்கள் அநுபூதிமான்கள் எனப்படும் வல்லார்வாய்க் கேட்டுப் பயனடைவார்களாக".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலின் பின்னிணைப்பு - 2இல் பயனுள்ள திருமந்திரப் பாடல்கள் சிலவற்றையும் நண்பர் சிறீக்கந்தராசா சேர்த்திருப்பது பாராட்டற்பாலது. அங்கு தரப்பட்டிருக்கும் பாடல்களில் பின்வரும் பாடலை முக்கியமாகக் கருதுகிறேன்:

**"நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்**
**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே"**

இந்த நூலைத் தட்டச்சிட்ட உருவத்தில் பார்த்தபோது என் உள்ளத்தைத் தொட்ட சில பகுதிகளை மட்டும் (இந்நூலை விமர்சிக்கும் பணிக்குள் புகுந்துவிடாது - புகுந்துவிடக்கூடாது என்பதனையும் மறந்துவிடாது) இந்த உரையில் காட்டி யிருக்கிறேன். உள்ளே போனால், உவப்பும் உவர்ப்புமான செய்திகள் பலவற்றைப் பார்க்கலாம்.

இப்படியான நூல்கள் எமது மக்களுக்கு - குறிப்பாக இளம் சமுதாயத்துக்கு - அவசியம் தேவை என்பதை உணர்ந்து அவற்றை வெளியிட்டு வைக்க இந்து மாமன்றம் பல வழிகளில் உதவிவருகின்றது. அந்த வகையில் இந்த நூலினை வெளியிட்டு வைக்கும் விழாவை கொழும்பில் நடத்த நாங்கள் அனுசரணை தருவதில் திருப்தியும் பெருமையும் காண்கிறோம். அதே நேரத்தில் நூலாசிரியரின் கருத்துக்கள் அனைத்தையும் இந்து மாமன்றத்தின் கருத்துக்களாக வாசகர்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதையும் கூறிவைப்பது என் கடமை ஆகிறது. கருத்துச் சுதந்திரத்தை நாம் மதிக்கிறோம் என்பதற்கு இது சான்று.

நூலின் ஆசிரியர் சம்மதித்தால் இதனை எங்களின் இணையத்தளத்திலும் வெளியிட வழிவகுப்போம் எனக் கூறிக்கொண்டு, நண்பர் சிறீக்கந்தராசாவின் வழியில் பலரும் தமிழருக்கான சமய நூல்களை எழுதும் பணியைத் தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் செய்யவேண்டும் எனவும் கூறிவைக்க விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியருக்கு என்றும் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவருள் கிட்ட வேண்டிப் பிரார்த்தனை செய்துகொண்டு நிறைவுசெய்கிறேன்.


இறைபணியில்

**கந்தையா நீலகண்டன்**

தலைவர்

அகில இலங்கை இந்து மாமன்றம்

இலங்கை இந்துமன்ற அமைப்புக்களினதும்

ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் ஒன்று - சைவசித்தாந்தம்

## 1. சைவ சித்தாந்தம் கூறுவதென்ன?

கடவுள், உயிர்கள், பாசம் என்ற மூன்றும் உள்பொருள்கள் என்று கூறுகின்ற சித்தாந்தத்துக்குச் சைவ சித்தாந்தம் என்று பெயர்; அதாவது, கடவுள் என்ற பரம்பொருளைத் தவிர மற்றைய எல்லாம் மாயை என்று கூறுகின்ற கருத்தை ஏற்றுக் கொள்ளாத சித்தாந்தம் சைவசித்தாந்தம். என்றுமுள்ள இந்த மூன்று உள்பொருள்களுக்கும் இடையிலான உறவைக் கூறுகின்ற சித்தாந்தம் சைவசித்தாந்தம். நிலைபேறும், முற்றறிவும், நிறைமகிழ்வும் என்றென்றும் உடையதாக இருக்கின்ற பொருளுக்குக் கடவுள் அல்லது சிவம் என்பது பெயர் என்று கூறுகின்ற சித்தாந்தம் சைவசித்தாந்தம்.

உயிர்கள் அறிவுள்ள பொருள்கள் என்றும், அவை பாசங்களால் மறைக்கப்பட்டிருப்பதால் அவற்றினுடைய அறிவு முற்றறிவு அன்று என்றும், அவை பாசங்கள் நீங்கியவுடன் முற்றறிவும் நிறைமகிழ்வும் பெறும் என்றும் கூறுகின்ற சித்தாந்தம் சைவசித்தாந்தம்.

குற்றறிவு உள்ள உயிர்கள் முற்றறிவு பெறுவதற்காக, இறைவன் அவற்றுக்கு உடலையும் கரணங்களையும், உலகத்தையும், போகங்களையும் வழங்குகின்றான் என்று கூறுகின்ற சித்தாந்தம் சைவசித்தாந்தம். இந்தத் தனுகரண புவன போகங்களை, இறைவன், மாயை என்ற உள்பொருளிலிருந்து உருவாக்குகின்றான் என்று நம்புகின்ற சித்தாந்தம் சைவ சித்தாந்தம். உயிர்களின் நலனுக்காகவும், நன்மைக்காகவும் இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்று ஐந்தொழில்களையும் புரிகின்றான் என்று நம்புகின்ற சித்தாந்தம் சைவசித்தாந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவராசிகளின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது என்பதால், உயிர்களின் எண்ணிக்கையும் கணக்கற்றவை என்று நம்புகின்ற சித்தாந்தம் சைவசித்தாந்தம். உயிர்களுக்கு அறிவுண்டு, ஆசையுண்டு, செயற்படும் ஆற்றலுண்டு என்று நம்புகின்ற சித்தாந்தம் சைவசித்தாந்தம். அறிவின் இயக் கத்துக்கும், ஆசையின் இயக்கத்துக்கும், செயலின் இயக்கத்துக்கும், சக்தி தேவை என்று நம்புகின்ற சித்தாந்தம் சைவசித்தாந்தம். மேற்படி இயக்கத்துக்கான சக்தி, உயிர்களிடம் இயல்பாக இல்லை என்று நம்புகின்ற சித்தாந்தம் சைவசித்தாந்தம். இயக்கத்துக்கான இந்தச் சக்தியை உயிர்கள் வேறொரு உள்பொருளிலிருந்து பெறுகின்றன என்று நம்புகின்ற சித்தாந்தம் சைவசித்தாந்தம்.

## உ. சைவசித்தாந்தத்தில் மாயை

சாதாரண மொழியில் விளக்குவதானால், உயிர்களை, பெற்றோலோ (கல்நெய்யோ), பற்றரியோ (மின்கலமோ), வாயுவோ இல்லாத ஒரு புத்தம் புது மோட்டார்க்காருக்கு ஒப்பிடலாம். இயங்கத் தயாராக இருக்கிறது கார்; ஆனால் அதன் இயக்கத்துக்கு வேண்டிய பெற்றோல் அதனிடம் இல்லை; பற்றரி அதனிடம் இல்லை; மின் அதனிடம் இல்லை; வேறெங்கோ இருந்துதான் பெற்றோல், வாயு, மின் என்ற சக்தியைக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. உயிரானது ஆசைப்படுவதற்கும் சக்தி வேண்டியிருக்கிறது; அறிவதற்கும் சக்தி வேண்டியிருக்கிறது; செயற்படுவதற்கும் சக்தி வேண்டி யிருக்கிறது. அந்தச் சக்தி எங்கிருந்து கொண்டுவரப்படுகிறது என்பதே கேள்வி. உயிருக்கு அந்தச் சக்தியைத் தருகின்ற பொருளைச் சைவசித்தாந்தம் மாயை என்கின்றது. **ஏகாந்த வாதிகள்** (மாயாவாதிகள்) கூறுகின்ற மாயை (Illusion) வேறு; அஃது உள்பொருளன்று; சைவசித்தாந்திகள் கூறுகின்ற மாயை உள்பொருள்; உண்மையான பொருள்; நித்தியமான பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்திகள் குறிக்கின்ற மாயை, உயிர்கள் அறிதலுக்கும், ஆசைப்படுதலுக்கும், செயற்படலுக்கும் தேவையான சக்தியை மட்டும் கொடுக்கவில்லை; அவ்வாறு அறிதலுக்கும், ஆசைப்படுதலுக்கும், செயற்படுதலுக்கும் தேவையான சக்தியையும், இயக்குவதற்கான கருவிகளையும் ஆயுதங்களையும் ஒருசேரக் கொடுக்கின்றது. அதாவது, உடலடிப்படையிலான கருவிகளையும், உளம் அடிப்படையிலான கருவிகளையும் கொடுக்கின்றது. அவை மட்டுமா? உயிர்கள் வாழ்வதற்கான உலகத்தையும், உயிர்கள் துய்ப்பதற்கான போகங்களையும் வழங்குகின்றது. எல்லா உலகங்களும் அவற்றில் அடங்கியுள்ள அனைத்துச் சடப்பொருள்களும் மாயையின் விளைவுகளே; மாயையின் உற்பத்திகளே.

இந்த உலகங்கள் அழிவதில்லை; ஆனால், தொடர்ச்சியாக மாறிக்கொண்டேயிருக்கும். (ஆங்கிலத்தில் சொல்வதானால் These worlds constantly evolve and involve; these evolutions and involutions are works of the Almighty. They are part of the five activities of the Almighty as seen by the Saiva Siththantha Philosophy). உடல், மனம், சக்தி என்ற எல்லாமே மாயையிலிருந்து வந்தவைதாம். அதனால், அவை ஒன்றுக்கொன்று உறவானவையே. ஏனென்றால் அவற்றின் ஊற்று மாயைதான். Matter can neither be created nor destroyed என்று விஞ்ஞானிகள் சொல்வது இதைத்தான். **உள்ளது போகாது இல்லது வாராது** என்று சைவ சித்தாந்திகள் கூறுவதும் இதைத்தான். இறைவனின் ஐந்தொழில்களால் உலகம் விரியும்; பின்னர் ஒடுங்கும்; பின்னர் விரியும்; ஒடுங்கலும் விரிதலும் ஓய்வின்றித் தொடரும்; பஞ்சகிருத்தியங்களில் இதுவும் அடங்கும்.

உயிர் அறிவதற்கும் ஆசைப்படுவதற்கும் செயற்படுவதற்கும் தேவையான சக்தியை இயக்குவதற்கான கருவிகளும் மாயையிலிருந்தே கிடைக்கின்றன என்று மேலே கூறினோம். இந்தக் கருவிகள் யாவை? அவற்றின் பெயர்களைக் கீழே காணலாம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஞானேந்திரியங்கள் ஐந்து: மெய், வாய், கண், மூக்கு, செவி.
2. கன்மேந்திரியங்கள் ஐந்து: கை, கால், நா, கருவாய், எருவாய்.
3. தன்மாத்திரைகள் ஐந்து: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.
4. அந்தக்கரணங்கள் நான்கு: மனம், புத்தி. சித்தம், அகங்காரம்.
5. ஐம்பூதம்: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்.

மாயையின் உற்பத்திகளான இந்திரியங்களாலும், அந்தக் கரணங்களாலும், உலகப் பொருள்களாலும், உலகப் போகங்களாலும் உயிர் பெற்றுக்கொள்ளக்கூடிய அறிவு குற்றறிவாக இருப்பதனால், உயிர் தவறுசெய்ய நேர்கிறது; அல்லது எதையும் உறுதி செய்ய முடியாமல் சந்தேகித்துத் தடுமாறுகின்றது. மங்கிய ஒளியில், கயிற்றைப் பாம்பென்றும், பாம்பைக் கயிறென்றும் நாம் சந்தேகப்படுவதுபோல, சிற்றறிவு காரணமாக, உயிர் தடுமாறுகின்றது. சரியைப் பிழையென்றும் பிழையைச் சரியென்றும் தவறாகப் புரிகிறது. இந்தத் தவறான புரிகையினால் தவறுகளை இழைக்கின்றது; தீங்குகளுக்கு உள்ளாகின்றது.

மாயையிலிருந்து பெறப்பட்ட இந்திரியங்கள்மூலம் உயிரின் உள்ளார்ந்த அறிவு ஓரளவிற்கு வெளிப்பட்டாலும், அப்படிப்பட்ட அறிவு குற்றறிவு அல்லது சிற்றறிவாக இருப்பதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கவேண்டும். அந்தக் காரணம் என்ன? ஆணவம் என்பதே அந்தக் காரணம். **“ஆணவம்”** என்பது அருத்தமுள்ள ஒரு சொல். அறிவதற்கும், ஆசைப்படுவதற்கும், செயற்படுதலுக்கும் உயிருக்குத் தேவைப்படுகின்ற ஆற்றலைக் குறைத்துச் சிதைக்கின்ற பொருளுக்கு ஆணவம் என்பது பெயர். பெரிய எதையும் அணுவளவாக ஆக்குகின்ற ஆற்றல் கொண்டிருப்பதால் அதற்கு ஆணவம் என்று பெயர். அதாவது அந்தக்கரணங்கள், இந்திரியங்கள் என்பவற்றின் ஆற்றலைக் குறைக்கின்ற ஆற்றல் கொண்டது ஆணவம். அப்படியிருப்பினும், மாயையிலிருந்து கிடைக்கின்ற வேறு சில பொருள்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவத்தின் ஆற்றலைக் குறைத்து, உயிரினுடைய சக்தியைக் கூட்டக் கூடியனவாகவும் உள்ளன என்பதை நாம் நினைவில் வைத்திருத்தல் வேண்டும். உயிர், சிறிய அளவு அறிவைப் பெறத்தொடங்கியதும், தான் யார் என்பதை ஓரளவுக்கு உணரத்தொடங்குகிறது. ஆனாலும் அந்த நிலையில், தான் வேறு, தான் குடியிருக்கின்ற உடல் வேறு என்பதை உணராமல் இருக்கின்றது. இதனால் தவறிழைக்கின்றது. வேடிக்கை என்னவென்றால், தான் தவறிழைக்கின்றது என்பதை உயிர் புரியமுடியாமல் இருக்கின்றது என்பதுதான்.

இந்தச் சிற்றறிவின் விளைச்சல்களில் முதன்மை பெற்று நிற்பது தன்முனைப்பு; பொய்யான தற்பெருமை; ஒருவித அகங்காரம். இந்த அகங்காரத்தினால், தான் சொல்வது, தான் செய்வது எல்லாம் சரியானவையே என்று உயிர் நினைக்கிறது. இந்தத் தன்முனைப்பு என்ற அகங்காரம்தான் அதனது முதலாவது எதிரி என்பதை உயிர் உணர்வதில்லை. உணர முடியாத ஒருநிலையில் அது இருக்கிறது. ஆக, உயிரின் மட்டித்தனமான செயல்களுக்கும் அந்தச் செயல்களினால் விளைகின்ற துன்பங்களுக்கும் ஆணவம்தான் முழுமுதற் காரணம். இந்திரியங்களின் மூலமும், புத்தி, சித்தங்களின் மூலமும், மாயை, உயிருக்கு உதவி செய்து, ஆணவத்தின் வலுவைக்குறைக்க முயல்கின்றது. அந்த முயற்சி நெடுங்காலப் போராட்டமாகவே தொடரும்.

சிற்றறிவைக் கொண்டிருக்கின்ற உயிர், தனு கரண, புவன, போகங்களின் துணைகொண்டு செய்கின்ற செயற்பாடுகள், எண்ணங்களாகவும், சொற்களாகவும், செயல்களாகவும் வெளிப்படும். நல்ல எண்ணங்களும், சொற்களும், செயல்களும் உயிருக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்யும். அத்தகைய எண்ணங்களும் சொற்களும் செயல்களும் இன்பத்தையே விளைவிக்கும்.

உயிருக்கும் மற்றவர்களுக்கும் தீமை தருகின்ற செயற் பாடுகள் தவறான செயற்பாடுகள் எனப்படும். அத்தகைய செயற்பாடுகள் சுமுகமான உறவைத் தகர்ப்பதால், அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் விளைவிக்கின்றன. இவ்வாறு இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறி அநுபவிக்கின்ற உயிர், அந்த அநுபவங்களின் விளைவாக அதனுடைய அறிவைச் சற்றுப் பெருக்கிக் கொள்கிறது. அவ்வாறு அறிவு பெருகிய உயிர், சற்று ஆழமாகச் சிந்திக்கவும் தொடங்குகின்றது. அவ்வாறு சிந்திக்கின்றபோது, தீயவற்றைத் தவிர்த்து, நல்லனவற்றை நாடவேண்டும் என்ற ஓர் உணர்வு உயிருக்கு ஏற்படுகின்றது. இந்த உணர்வு ஆணவத்தின் ஆற்றலை ஓரளவிற்கேனும் நலிக்கவும் உதவுகின்றது. ஆணவம் அதன் முழு வலியையும் இழந்த நிலையில், உயிரைக் கட்டியிருந்த கயிறு அறுந்து, உயிர் விடுதலைபெறும்; உயிர் விடுதலை பெற்ற நிலையில் உயிர் அதன் குறிக்கோளை நோக்கிப் பயணிக்கும். ஆனால், ஆணவத்தின் வலுவைக் குறைத்தல் என்பது சாதாரண விடயம் அன்று. திருவருளின் துணையின்றி அது நிகழாது. அல்லன அகற்றி, நல்லன செய்ய வேண்டும் என்று உயிர் சிந்திக்கத் தொடங்கியதும், அதாவது உயிரானது பக்குவப்படத் தொடங்கியதும், உதவுவதற்கான தருணத்துக்காகத் காத்திருந்த திருவருள், உயிரினை நோக்கி நகரத் தொடங்கும். இதுதான் சைவ சித்தாந்தம் கூறுகின்ற தத்துவம்.

## 3. சிவாயநம என்ற மந்திரம்

இந்தச் சந்தர்ப்பத்தில் **"சிவாயநம"** என்ற ஐந்தெழுத்தின் அமைப்புப் பற்றியும் உட்பொருள் பற்றியும் ஓரிரு விடயங்களை மனத்திருத்துதல் பொருத்தமானது என்று நினைக்கின்றேன். இந்த ஐந்தெழுத்து மந்திரத்திலுள்ள ஒவ்வோர் எழுத்தும் குறித்த ஒரு பொருளைச் சுட்டுவதாகச் சொல்வார்கள். அதாவது **"சி"** என்பது சிவத்தைக் குறிக்கும் என்றும், **"வா"** என்பது சிவனருளைக் குறிக்கும் என்றும், **"ய"** என்பது உயிரைக் குறிக்கும் என்றும், **"ந"** என்பது மலத்தை அல்லது திரோதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியைக் குறிக்கும் என்றும், **"ம"** என்பது ஆணவத்தைக் குறிக்கும் என்றும் சொல்வார்கள்.

உயிருக்கு ஒருபுறத்திலே சிவனருளும் சிவமும் இருக்கிறார்கள்; உயிருக்கு மறுபுறத்திலே திரோதான சத்தியும் ஆணவமும் நிற்கின்றன. ஆனால் அநாதியிலிருந்தே ஆணவத்தால் மறைக்கப்பட்டிருக்கிற உயிர், திருவருளை நாடாமல், மாயை என்ற வலைக்குள் சிக்கி ஆணவத்தின் பக்கமே நிற்கின்றது. இதை உமாபதிசிவாசாரியார் அழகான ஓர் உதாரணத்தின்மூலம் விளக்குவார். பாற்கடலில் வாழுகின்ற மீன் பாலைக்குடிக்க வாய்ப்பிருந்தும், பாலைக் குடிக்காமல் பிணத்தையும் அழுக்கையுமே உண்ணுகின்றது. திருவருள் என்ற நண்பனுக்கு அண்மையிலிருந்தும் உயிரானது அந்த நல்ல நண்பனோடு நட்புப்பூணாமல், திரோதானசக்தி என்ற கெட்டவனோடு கூடிப்பழகுகின்றது என்று உமாபதிசிவாசாரியார் ஒப்புமை காட்டுகிறார்.

கருணையே வடிவான இறைவன், மாயையிலிருந்து பிறப்பித்து வழங்கிய தனுகரண புவன போகங்களைப் பயன்படுத்தி நல்லறிவு பெற்றுத் திருவருளின் பக்கம் திரும்ப வேண்டிய உயிர், அவ்வாறு செய்யாமல், இன்ப துன்பங்களில் அழுந்தி உழலுகின்றது. இவ்வாறு உழலுவதனால் ஏற்படுகின்ற அநுபவஞானம், உயிருக்கு உண்மைநிலையை உணர்த்தித் தானும், தானுறைகின்ற உடலும் ஒன்றல்ல என்ற உண்மையை உணர்த்தும். அந்த நிலையில், திரோதான சத்தியோடு கூட்டாளியாக நின்ற உயிர், அந்தக் கூட்டாளியை விட்டுவிட்டுத் திருவருளை நாடிச்செல்லும். திருவருளின் ஒளிபட்டவுடனும், உயிரின் பசுஞானம் மறைந்து பதிஞானம் தோன்றத் தொடங்கும். சிவாயநம என்ற பஞ்சாட்சரம் உணர்த்துகின்ற உண்மை இதுதான். இந்தப் பஞ்சாட்சரத் தத்துவத்தைத் திருவள்ளுவரின் ஒரு திருக்குறளின் மூலமும் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. வள்ளுவரும் ஐஞ்செழுத்தும்

**"காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய்"**

என்ற குறளின் சாரமே பஞ்சாட்சரத்தின் உட்பொருள் என்று கூறலாம். இதைப் பின்வருமாறு சொல்லலாம்:-

1. அறநெறி நின்று தவமியற்றி ஐயத்தின் நீங்கித் தெளிந்து அவா அறுத்தவர்களால் உணரப்படுவதே, **பேரா இயற்கை** என்றும், **செம்பொருள்** என்றும் கூறப்படுகின்ற சிவம். இதனையே "சி" என்பது குறிக்கின்றது.

2. சிவத்தை உணர்ந்து உய்தி பெற வள்ளுவர் காட்டுகின்ற வழி, அன்பின் குழவியாகிய அருள் அல்லது திருவருள். இதனையே "வா" என்ற எழுத்துக் குறிக்கின்றது.

3. காமம், வெகுளி, மயக்கம் என்னும் முப்பரிமாணம் கொண்ட உடலால் பின்னி முடையப்பட்டு, அவா என்ற கயிற்றைப் பயன்படுத்திக் கீழ்நோக்கி இழுக்கப்படுகின்ற உள்பொருள் தான் உயிர்; இதனையே "ய" என்ற எழுத்துக் குறிக்கின்றது.

4. நில்லாதவற்றை நிலையின என்றும், பொருளல்லவற்றைப் பொருளுடையன என்றும் மருண்டு மயங்கச் செய்கின்ற பொருள்தான் மாயையின் உற்பத்திகளான தனு, கரண, புவன, போகங்கள். இதையே "ந" என்ற எழுத்துக் குறிக்கின்றது.

5. *"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்*
*குயர்ந்த உலகம் புகும்"*

என்பதை உணராமல், யான், எனது என்னும் செருக்கின் உதவியுடன், உடலியற் சுழற்சியைத் தவிர அதற்கும் மேம்பட்ட அறிவியற்சுழற்சி பற்றியோ, அல்லது அவற்றிற்கும் மேம்பட்ட ஆன்ம இயல், இறையியல் ஆகிய சுழற்சிகள் பற்றியோ, உயிரானது உணர்ந்து கொள்ளாதவாறு, உயிரின் உண்மையான உணர்வை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பை மூடிமறைக்கின்ற இருளினும் மோசமான ஓடுதான் ஆணவம்; இதனையே "ம" என்ற எழுத்துக் குறிக்கின்றது.

மேலே நாம் கூறியிருக்கின்ற கருத்தைப் பின்வருமாறு விளக்கியும் கூறலாம்:

காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றின் ஒட்டுமொத்த மயக்கத்தில் சிக்குண்டு, கட்டுப்பட்டு, ஆணவம் எனப்படும் அநாதி மலத்தால் மூடப்பட்டிருக்கின்ற உள்பொருளாகிய உயிரானது, அந்த ஆணவத்தின் ஆற்றலைக் குறைக்கவெனக் கொடுக்கப்பட்ட கொடைகளாகிய மாயை, கன்மம் என்பவற்றின் காரணமாய்ப் பிறவிகளையெடுத்து, இன்பதுன்பங்களை அநுபவித்து, அந்த அநுபவங்களின் பயனாக, யான், எனது என்ற இருவகைப் பெரும் செருக்குகளையும் செதுக்கியெறிந்து, நில்லாதனவற்றை நிலையானவை என்றும், பொருளல்லவற்றைப் பொருள்பொதிந்தன என்றும் தவறாக உணருகின்ற மயக்கத்தை நீக்கி, ஒழுக்கத்தைத் துணைகொண்டு, அன்பும், அறனும் சார்ந்த இல்லற நோன்பும், அருளும் அறனும் சார்ந்த துறவற நோன்பும் இயற்றிவர, உரிய பருவத்தில் பற்றற்றாரது வழிகாட்டுதலால் மெய்யுணர்வும், செம்பொருள் நுகர்வும் பெற்றுச் சிவப்பேறு அடையும் என்பதே சைவசித்தாந்தம், பஞ்சாட்சரத்தின் மூலம் கூறுகின்ற சித்தாந்தச் செய்தி.

இந்தச் செய்தியின் அடிப்படையைப் புரிந்து கொண்டால்தான், திருமூலர் கூறுகின்ற **அன்பும் சிவமும்** ஒன்றே என்ற தத்துவமும், **ஒன்றே குலம் ஒருவனே தேவன்** என்ற தத்துவமும் புரியும்.

## 5. முப்பொருள்களில் முதன்மையான பதி

இதுவரையில் சைவசித்தாந்தம் கூறுகின்ற அடிப்படைத் தத்துவம் என்னவென்று பார்த்தோம். அதாவது உயிர்களின் நோக்கம் என்னவென்றும், அவை எவ்வாறு அவற்றின் தலைவனைத் தேடிச்செல்லும் பாதையில் அடியெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கின்றன என்றும், அவை எந்த நிலையில் அந்தத் தலைவனின் காலடியில் தலை வைத்துக் கிடக்கும் என்றும் மிகமிக மேலோட்டமாகப் பார்த்தோம். இனி மெய்ப்பொருள்கள் என்று சைவசித்தாந்திகள் கூறுகின்ற பதி, பசு, பாசம் என்பவற்றில் பதியின் இயல்புகளை மட்டும் சுருக்கமாகப் பார்ப்போம்.

பதி என்றாலும் இறை என்றாலும் ஒன்றே. பதி எனப்படும் இறை ஆணா, பெண்ணா, அலியா என்று வேடிக்கையாகவும் தீவிரமாகவும் சிலர் கேட்கின்றார்கள். இன்னும் சிலர் இந்து சமயத்தில் எத்தனை கடவுளர்கள் என்று நக்கலாகவும் கேட்கின்றார்கள். அறியாமையால் அவர்கள் அப்படிக் கேட்கின்றார்கள் என்பது சைவசித்தாந்திகளுக்குப் புரிகின்றது. அந்த அறியாமையினாலேதான் அவர்கள் இந்துசமயத்தவரைப் Pagans என்றும் அழைக்கின்றார்கள். பரம்பொருளைப் பலபேர் பலவாறாகப் பார்த்துப் பலவிதமான நாமரூபங்களைக் கொடுத்தாலும், அந்தப் பரம்பொருளுக்கு உருவமும், பெயரும், வண்ணமும் இல்லை என்பதே சைவசித்தாந்த உண்மை. இந்த உண்மையைச் சில பாடல்களால் விளக்குகின்றார் மாணிக்க வாசகர்:

1. **“உண்டொர் ஒண்பொருள் என்றுணர் வார்க்கெல்லாம்**
   **பெண்டிர், ஆண், அலி என்றறி யொண்கிலை**
   **தொண்டனேற் குள்ளவா வந்து தோன்றினாய்**
   **கண்டும் கண்டிலேன் என்ன கண் மாயமோ” (திருச்சதகம்)**

2. **காணுமாறு காணேன் உன்னை அந்நாள் கண்டேனும்**
   **பாணே பேசி என்றனைப் படுத்த தென்ன பரஞ்சோதி**
   **ஆணே, பெண்ணே, ஆரமுதே அத்தா செத்தே போயினேன்**
   **ஏணாணில்லா நாயினேன் என்கொண்டெழுகேன் எம்மானே**
   **(திருச்சதகம்)**

3. **அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்**
   **விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல**
   **கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்**
   **தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகலப்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெண்ணாகி, ஆணாய், அலியாய்ப் பிறங்கொளிசேர்**
**விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்**
**கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்**
**பெண்ணேஇப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்**
**(திருவெம்பாவை)**

4. **ஆணோ, அலியோ அரிவையோ என்றிருவர்**
**காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்**
**நாணாமே உய்ய ஆட்கொண்டருளி நஞ்சுதனை**
**ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்**
**கோணார் பிறைச் சென்னிக் கூத்தன் குணம் பரவிப்**
**பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ**

பெயரும், உருவமும், வண்ணமும் இல்லாத பரம்பொருளுக்குப் பெயரும், உருவமும், குணமும், வண்ணமும் கொடுத்துத் தொழுவதும், அழைப்பதும் உலகத்தார் இயல்பு. இ∴து எல்லாச் சமயங்களுக்கும் பொருந்தும். வேண்டியபோது ஆண் என்கிறோம்; விரும்பியபோது பெண் என்கிறோம்; விரும்பியபோது உயர்திணையாகப் பேசுகிறோம்; வேறொரு போது அ∴றிணையாகப் பார்க்கிறோம்; கோயில் தெய்வம் பேசாது என்று அ∴றிணையில் பேசுகிறோம்; அப்பனே என்று ஆண்பாலாக்குகின்றோம்; தாயே என்று பெண்பால் ஆக்குகின்றோம்.

சலமும் சலனமும் இல்லாத பரம்பொருளுக்கு, விருப்பும் வெறுப்பும் இருப்பதாக நினைக்கின்றோம். இவையெல்லாம் நாம் நமது சிற்றறிவுக்கும் வசதிக்கும் ஏற்ப வகுத்துக் கொண்டவைகள். ஞானிகளும் யோகிகளும், பருவரல் இன்பம் என்றிரண்டும் ஒக்கநோக்குகின்ற யோகர்களும், பரம் பொருளுக்குப் பெயரோ, உருவமோ, ஆண்பால், பெண்பாலோ கொடுப்பதில்லை; சாதாரணமானவர்களாகிய நாம்தான் அவ்வாறு பேரும் உருவும், பாலும் குறிப்பிட்டுப் பேசுகின்றோம். மனிதர், தமது கற்பனைப்படி, தரிசனப்படி பெயரும், உருவமும் கொடுக்கின்றார்கள் என்பதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறமில்லாத நீருக்கு அது அடைக்கப்பட்டிருக்கும், அல்லது அதைக் கொண்டிருக்கும் பாத்திரத்தின் நிறத்தை வைத்து நிறப்பெயரைச் சூட்டுவதைப்போலக் குணங்குறி இல்லாத இறைவனுக்குப் பல்லாயிரம் குணங்கள் இருப்பதாக நாமே கற்பனை செய்து அந்தக் கற்பனைகளுக்கேற்பப் பல பெயர்களைக் கொடுத்திருக்கின்றோம், கதைகளையும் கட்டியிருக்கின்றோம்.

ஓர் உதாரணத்தைப் பாருங்கள். நான் என் அப்பாவுக்கு மகன்; என் மகனுக்கு அப்பா; என் பேரனுக்குத் தாத்தா; என் மனைவிக்குக் கணவன்; என் மாமாவுக்கு மருமகன்; என் ஆசிரியனுக்கு மாணவன்; என் நண்பனுக்கு நண்பன்; என் தம்பிக்கு அண்ணன்; என் அண்ணனுக்குத் தம்பி. ஒரே நான், அதே நான், என் அம்மாவுக்கு மகன், என் அப்பாவுக்கும் மகன்; மகனுக்கு அப்பா; பேரனுக்குத் தாத்தா; மனைவிக்குக் கணவன். இப்படியே ஏனைய உறவுகளும், அதற்கேற்ப வெவ்வேறு பெயர்களும்.

இவ்வாறுதான் பரம்பொருளாகிய கடவுளுக்கும் ஆயிரம் திருப்பெயர்கள் சூட்டுகின்றோம். அல்லா என்றாலும், பிள்ளையார் என்றாலும், வயிரவர் என்றாலும், வீரபத்திரர் என்றாலும், சரசுவதி என்றாலும், இலக்குமி என்றாலும், காளி என்றாலும், பார்வதி என்றாலும் அந்த வெவ்வேறு பெயர்களாலும் சுட்டப்படுகின்ற பரம்பொருள் ஒன்றே; ஒரே கடவுள்தான். இந்த உண்மையை உணராத அறிவிலிகளுக்கு அறிவுச்சுடர் கொளுத்த விரும்பிய **அருணந்தி சிவாசாரியார்** அவர் படைத்தளித்த **சிவஞானசித்தியார்** என்ற நூலின் இரண்டாம் பகுதியான **சுபக்கம்** என்ற பகுதியில் ஒரு பாடலை வரைந்திருக்கிறார். சைவசித்தாந்திகளின் கடவுளாகிய பரம்பொருள் என்ற சிவத்துக்குப் பிறப்புமில்லை, இறப்புமில்லை, அதிசயப் பிறப்புமில்லை.

கருவாயல்லாத வழிகளால் பிறக்கின்ற பிறப்புமில்லை, அவதாரங்களும் இல்லை என்பதை விளக்குகின்ற பாடல் ஒன்றை அவர் பாடியிருக்கின்றார். இதுதான் அந்தப் பாடல்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வ மாகியாங்கே**
**மாதொரு பாகனார்தாம் வருவர்மற் றைத்தெய்வங்கள்**
**வேதனைப் படுமிறக்கும் பிறக்கும் மேல்வினையும் செய்யும்**
**ஆதலால் இவையிலாதான் அறிந்தருள் செய்வனன்றே**

மேற்படி பாடலின் பொருளை உற்றுநோக்குகின்றபோது அது வைணவத்தை நோக்கியும் கிறித்துவத்தை நோக்கியும் கூறப்பட்ட சொற்கள்போல் தோன்றுகின்றது.

## 6. அத்துமீறி நுழையும் வேற்று மதத்தினர்

மேற்குலகச் சமயத்தினர், இந்துமதத்தின் (இந்தியத்தின் / இந்துவத்தின்) ஒரு கூறான சைவசமயத்தில் ஆயிரம் கடவுளர் உள்ளனர் என்று அறியாமையால் அலட்டிக் கொள்கின்றார்கள். அப்படியான அறிவிலிகளை நாம் பொருட்படுத்த வேண்டிய தில்லை. இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் சோற்றுக்காகவும், பட்டம் பதவிகளுக்காகவும் சமயம் மாறிய சோற்றுப்பாதிரிமார் (Rice Christians) என்போரின் வழித்தோன்றல்கள் சிலர், தாம் தழுவிய கிறித்துவ சமயத்தைத் தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரப்புவதை ஆழ்ந்த நோக்கமாகக் கொண்டு, சைவ இலக்கியங் களையும், சைவ சாத்திரங்களையும் கற்று, சைவ சமயத்துக்கும் கிறித்துவ சமயத்திற்கும் இடையில் வேறுபாடில்லை என்றும், திருவள்ளுவர் சொல்வதும் விவிலியம் சொல்வதும் ஒன்றே என்றும், விவிலியத்தில் சொல்லப்பட்ட அறக்கருத்துக்களைத்தான் திருவள்ளுவர் திருடித் திருக்குறளில் சேர்த்திருக்கிறார் என்றும் கூறிவருகின்றனர். தமிழ்நாட்டில் **தினகரன்** என்று பெயர் பூண்ட கிறித்துவப் பரப்புரையாளர் ஒருவர், இந்த வகையில் முன்னணி வகித்தவர் என்பது பலரும் அறிந்ததே. தினகரனுக்குப் பின்னர், **சாது செல்லப்பா** என்ற கிறித்துவத்துக்கு மாற்றப்பட்ட பிராமணர் ஒருவரும் அத்தகைய பணியில் ஈடுபட்டார் என்பது இலண்டன் வாழ் சைவமக்களுக்குத் தெரியும். அதேபோன்ற பணியை ஐரோப்பிய நாடுகளிலும் இங்கிலாந்திலும் முன்னெடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கத்தோடு, ஐரோப்பிய நாடுகளிலும் இலண்டனிலும் வாழுகின்ற கிறித்துவத் தமிழர் சிலர், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், மெய்கண்ட சாத்திரம் முதலிய சைவ இலக்கியங் களை அரைகுறையாகக் கற்றுவிட்டு, அவையும் கிறித்துவ நூலான விவிலியம் கூறுவதும் ஒன்றே என்று கூறிச் சைவத்துக்குத் தீங்கு விளைவித்து வருகின்றார்கள். இதை உணராத சில சிவாலயங்களும், சிவநெறிக் கழகங்களும், அவற்றின் அறங்காவலர்களாக இருக்கின்ற மருத்துவர்கள் சிலரும், இந்த மாயவலைக்குள் வீழ்ந்திருப்பது கவலைக்குரியது.

சங்கர வேதாந்தத்தை உலகெங்கும் பரப்பி வருகின்ற இராமகிருட்டினர் மடத்தைச் சாரந்த தமிழர் சிலர், பெரியபுராணம் போன்ற சில புராணங்களையும், திருமந்திரம் போன்ற தோத்திர சாத்திரங்களையும் பதிப்பித்து வெளியிட்டு வருவது உலகறிந்த ஒன்று. **சுவாமி சிற்பவானந்தர்** என்ற வேதாந்த அறிஞரை எல்லோரும் அறிவார்கள். அவர் சிறீராமகிருட்டின தபோவனத்தைச் சேர்ந்தவர். சங்கர வேதாந்தத்தைப் போற்றிய அவர் **மாணிக்கவாசகரின்** திருவாசகத்துக்கும் உரை எழுதியிருக் கிறார். மாயாவாதத்தை நம்புகின்ற அவர் முப்பொருள் உண்மையென்று கூறுகின்ற சைவசித்தாந்தத்துக்கு மூலமாக அமைந்த திருவாசகத்துக்கு உரை எழுதியது ஏன் என்று புரியவில்லை. திருவாசகத்துக்கு உரை எழுதக்கூடாது என்ற ஒரு பழைய மரபு இருந்தும் சைவரல்லாத ஒருவர் உரை எழுதியது ஏன்? இவ்வாறு உரை எழுதிய அவர் சைவ சித்தாந்தத்தை மறுக்கின்ற கருத்துக்கள் பலவற்றை அதில் எழுதியிருக்கிறார். செத்துப்போன சமக்கிருதத்தை உயிர்ப்பிக்க வேண்டும் என்றும், அது என்றோ ஒருநாள் உயிர்க்கும் என்றும் கனவுகாண்கின்ற சுவாமி சிற்பவானந்தர் போன்றோரைச் சைவத் தமிழ் மக்கள் நம்பி ஏமாறிவிடக்கூடாது. மாயாவாதம் பேசுகின்ற இராமகிருட்டின மடத்தினர், முப்பொருள் உண்மை பேசும் சைவ இலக்கிய நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதும், அவற்றைக் கற்பதும் ஏன் என்பதை நாம் ஆழ்ந்து யோசிக்க வேண்டும். தமிழரின் சமயமான சைவத்தில் கடவுள் ஒருவரே என்பதை நிறுவவும், ஐரோப்பிய நாடுகளில் சைவசமயிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாதார் சைவசமயத்தைக் கேலிசெய்து கொச்சைப் படுத்துகிறார்கள் என்பதை வெளிப்படுத்தவுமே மேலே கூறிய சில வசனங்களை எழுத நேர்ந்தது. இவ்வளவில் இது நிற்க.

## 7. பதியின் பண்புகள்

பேரும் உருவமும் இல்லாத இறை என்ற பரம்பொருள் முற்றறிவு கொண்டது என்பதை உலகச் சமயங்கள் பல ஒப்புக்கொண்டிருக்கின்றன. சைவசித்தாந்தமும் ஒப்புக் கொண்டிருக்கிறது. இறைக்குரிய முற்றறிவைக் கூறவந்த வள்ளுவர்:

> **"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
> **தாளை வணங்காத் தலை"**

என்று குறள் வரைந்திருக்கிறார். எண்குணங்கள் யாவை என்பதைப் பரிமேலழகர் பின்வருமாறு பட்டியலிடுகிறார்:

1. தன்வயத்தனாக இருத்தல்.
2. தூய உடம்பினனாக இருத்தல்.
3. இயற்கை உணர்வினனாக இருத்தல்.
4. முற்றும் உணர்ந்தவனாக இருத்தல்.
5. இயல்பாகவே பாசங்களில் நீங்கியவனாக இருத்தல்.
6. பேரருள் உடையவனாக இருத்தல்.
7. முடிவில் ஆற்றலுடையவனாக இருத்தல்.
8. வரம்பில் இன்பம் உடையவனாக இருத்தல்.

ஆகிய எட்டுக்குணங்கள் இறைவனுக்கு இருப்பதாக வள்ளுவர் கூறுகின்றார். வள்ளுவர் விள்ளுவதையே சைவசித்தாந்தமும் கொள்ளுகின்றது. இந்த எட்டுக்குணங்களில் மிக முக்கிய குணங்களாக மூன்று குணங்களைச் சொல்வார்கள்; அவையாவன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. முற்றறிவை உடையதாயிருத்தல்.

ஆ. தோற்றமும் அழிவும் அற்றதாயிருத்தல்.

இ. பேரருளும் பேரானந்தமும் உடையதாயிருத்தல்.

இதனாலேயே சைவசமயத்தவர் தாம் வணங்கும் கடவுளைச் "சச்சிதானந்தம்" என்று அழைக்கின்றனர்.

ஆங்கிலத்திலும் பரம்பொருளின் நிறைகுணங்களைக் குறிப்பதற்கான சொற்கள் உள்ளன. அவை பின்வருமாறு:-

1. Omnipotence – எல்லாம் வல்லது
2. Omnipresence – எங்கும் நிறைந்தது
3. Omniscience – எல்லாம் அறிவது.

பரம்பொருளின் முக்கிய குணங்குறிகளாகச் சத்து + சித்து + ஆனந்தம் எனப்படும் மூன்றென்று சுருக்கமாகச் சச்சிதானந்தம் என்று கூறினாலும், பேரருள் பூண்டதாய் இருத்தல் என்பதும் முக்கியமான ஒரு குணம். இந்தப் பேரருள் கொண்டதாலேயே பாசத்தளை கொண்ட உயிர்களுக்கு விடுதலை கொடுத்தற்பொருட்டுத் தநுகரணபுவன போகங்களை இறைவன் ஆக்கிக் கொடுக்கிறான் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

## 8. சைவசமயத்தின் அடிப்படைகள் ஒரு கண்ணோட்டம்

பரம்பொருளின் பண்புகளை மேலே கூறிய நாம், உயிர்களின் இயல்பையும், பாசத்தின் இயல்பையும் அவ்வாறே விவரித்தல் தான் முறை. ஆனால் திருமந்திரம் பற்றிய இந்த நூலில் அவற்றைப்பற்றி விளக்கமாக எழுதுவது பொருந்தாது என்று கருதி, அவற்றைத் தவிர்த்துவிட்டுச் சைவசமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை மட்டும் கீழே மிகச் சுருக்கமாகப் பட்டியல் போட்டுக் காட்டுகின்றேன்:

- சைவசமயத்தவரைச் சைவசித்தாந்திகள் என்று கூறுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சைவசித்தாந்திகளின் கோட்பாட்டைச் சைவசித்தாந்தம் என்பர்.
- **வேதங்களைப் பிரமாணநூலாக ஏற்றுக்கொண்டாலும், வேதக் கருத்துக்கள் சிவாகமக் கருத்துக்களுடன் மாறுபடுகின்ற தறுவாய்களில் சிவாகமமே மேலோங்கி நிற்கும்; வேதக் கருத்துக்கள் ஒதுக்கப்படும் என்கிறது சைவசித்தாந்தம்.**
- சங்கர வேதாந்திகள் பரம்பொருள் ஒன்றே உண்மைப் பொருள் என்றும், மற்றைய எல்லாமே மாயத்தோற்றங்கள் என்றும் சொல்வார்கள்.
- உயிர்கள், உலகம் என்பன வெறும் மாயை என்று சங்கரவேதாந்திகள் கூறும் கருத்தைச் சைவசித்தாந்திகள் ஏற்பதில்லை.

**பின்வருவனவே சைவசித்தாந்தக் கொள்கைகள்:**

1. உயிர்கள், இறைவன், பாசம் உட்பட்ட இந்த உலகம் எல்லாம் என்றும் உள்ளவை; நித்தியமானவை.
2. உயிர்கள் இறைவனால் படைக்கப்பட்டவை அல்ல.
3. இறைவனடி சேர்வதுதான் உயிர்களின் இலட்சியம்.
4. உயிர்களைத் தன்னோடு சேர்ப்பதற்காகவே இறைவன் உயிர்களுக்குத தநுகரணபுவன போகங்களை உதவுகின்றான்.
5. இறைவனின் கருணையினாலேதான் உயிர்கள் உடல் பெறுகின்றன; அதாவது பிறப்பெடுக்கின்றன.
6. ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று கயிறுகளினால் உயிர்கள் கட்டப்பட்டுள்ளன.
7. மேற்படி கயிறுகள் என்ற மலங்கள் நீங்கினால் மட்டுமே உயிர்கள் இறைவனடி சேரமுடியும்.
8. உயிர்கள் அநாதியிலிருந்தே ஆணவமலத்தால் கட்டுப் பட்டிருக்கின்றன.
9. கன்மம் என்ற பழவினையை ஒழிப்பதற்காகவே, உயிர் களுக்கு இறைவன் உடல் முதலானவற்றைக் கொடுக்கிறான், அஃதாவது உயிர்கள் பிறப்பெடுக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. எடுத்த பிறப்பில் அநுபவிக்கவென்று இறைவனால் உயிருக்கு அளந்து கொடுக்கப்படுகின்ற பழவினைப் பகுதிக்குப் **பிராரப்தம்** என்று பெயர்.

11. பிறப்பெடுத்த உயிர், சம்பந்தப்பட்ட பிறவியின்போது இழைக்கின்ற பாவ புண்ணியச் செயல்களுக்கு **ஆகாமியம்** என்று பெயர்.

12. இன்னமும் அநுபவிக்கப்படாமல் உயிரின்பேரில் எஞ்சியிருக்கின்ற வினைத்தொகுதிக்குச் **சஞ்சிதம்** என்று பெயர்.

13. உயிர், வினைப்பட்டு ஆகாமியத்தை ஈட்டிச் சஞ்சிதத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கின்ற வரைக்கும், பிறப்பெடுத்துக் கொண்டேயிருக்கும்.

14. நல்வினை இருந்தாலும் தீவினை இருந்தாலும் அவற்றைத் தீர்த்துக்கட்டுகின்ற வரைக்கும் பிறப்புத் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

15. விருப்பு, வெறுப்பின்றி உயிர்கள் செய்கின்ற செயல்கள், அவை நற்செயல்களாயினும் சரி, தீச்செயல்களாயினும் சரி அவை வினைகள் ஆகா; அதாவது ஆகாமியம் ஆகா; நிட்காமியச் செயல்கள் ஆகாமியம் ஆகா.

16. சஞ்சிதமும் தீர்ந்துபோய், ஆகாமியமும் ஏற்படாத நிலைக்கு **இருவினைஒப்பு** என்பது பெயர்.

17. இருவினைகளும் ஆகாமியமாக ஆகாத நிலையில் **மலபரிபாகம்** நிகழும்.

18. அந்த நிலையில் குருவின் கூட்டத்தால் திருவருள் சேரும்.

19. திருவருள் குவிந்ததும் **(சத்திநிபாதம்)** இறை, உயிரைத் தன்னடியில் வரவேற்கும்.

20. அந்த நிலைக்குத் **தாடலை** என்பது பெயர்.

21. தாடலை என்பது இரண்டு சொற்கள் சேர்ந்தது; அதாவது **தாள்** என்ற சொல்லும் **தலை** என்ற சொல்லும் தமிழ் இலக்கணப்படி புணர்ந்து ஒன்றான சொல்; ஒரு சொல்லாய்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றினாலும், அதற்குள் இரண்டு சொற்கள் அடக்கம். தாள் என்றால் பாதம்.

22. இறைவனுடைய பாதத்தில் உயிர் தலை வைத்துக் கிடக்கின்ற, இரண்டற்ற நிலைக்குச் சைவசித்தாந்தத்தில் தாடலை என்று பெயர். இந்தத் தாடலை நிலை அத்துவிதம் போலத் தோன்றுகின்ற துவித நிலை என்பதை விளக்க வந்த உமாபதிசிவாசாரியார்,

> **"தாடலை போல் கூடியவை தானிகழா வேறின்பக்**
> **கூடலை நீ ஏகமெனக் கொள்"**

என்று **திருவருட்பயன்** என்ற நூலில் குறள் செய்திருக்கிறார்.

## 9. விடைகிடைக்காத சிக்கல்கள் சில

சைவசித்தாந்தம் தருக்கமுறையிலமைந்த நூலேயாயினும், விளக்கமில்லாத, விடைகிடைக்காத சில விடயங்களும் அதில் உள்ளன. அத்தகைய ஐயங்கள் சிலவற்றை இப்போது சிந்திப்போம்.

முப்பொருள் உண்மை என்பதைச் சைவசித்தாந்திகள், **சுருதி, அநுமானம், ஆப்த வாக்கியம்** என்ற மூன்றில் ஏதேனும் ஒன்றினால் அல்லது இரண்டினால் அல்லது மூன்றினாலும் நிரூபிக்க முயன்றுள்ளார்கள் என்று நாம் பெருமைப்படுவதுண்டு. அப்படி இருந்தும், மெய்கண்டசாத்திரத்தை எழுதியோர் விடை கூறத் தவறிய சில விடயங்களும் உள்ளன. அந்த விடயங்களைப் பற்றிச் சைவசித்தாந்திகள் மௌனமாக இருக்கின்றார்கள் என்றே சொல்லலாம். விவிலியம் கூறுவதைப்போல், இந்தப் பிரபஞ்சம் இறைவனால் படைக்கப்படவில்லை என்று கூறுபவர்கள் அன்றும் இருந்தார்கள். விவிலியக் கருத்துக்களை மறுத்துக் கூர்ப்புப் பற்றிய கொள்கையை (Postulate/Proposition) முன்வைத்த **Darwin, Lamarck** போன்றவர்கள், ஓருயிர்க் கலனிலிருந்து (Single Cell) சீவராசிகள் எல்லாமே தோன்றின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறினார்கள். விவிலியத்தை நம்பமறுத்த பலருக்கு, Darwin முதலியோரின் பரிணாம வளர்ச்சிக் கொள்கை என்ற கூர்ப்புக் கொள்கை வரவேற்கத்தக்கதாக இருந்தது. அந்தக் கொள்கை பரவியதும் விவிலியக் கருத்துக்கள் தகர்க்கப்பட்டன என்று அவர்கள் ஆர்ப்பரித்தார்கள்.

Charles Darwin அவர்கள் முன்வைத்த கொள்கைக்கு மூலமான "ஓருயிர்க்கலன்" (Primordial cell) எங்கிருந்து வந்தது என்பதற்கான விளக்கத்தை Darwin அவர்கள் தரவில்லை என்பதைப் பலர் எண்ணிப் பார்க்கவில்லை. அப்படியான ஒரு வில்லங்கம் சைவசித்தாந்தத்தின் கொள்கையிலும் உண்டு. உயிர்கள் பாவிகளாகவே, மலமுடையவர்களாகவே பிறக்கின்றன என்று விவிலியமும் சொல்கிறது; சைவசித்தாந்திகளும் ஒப்புக்கொள்கின்றார்கள். உயிர்கள் தொடக்கத்திலிருந்தே குற்றவாளிகளாக, அல்லது குற்றம் அல்லது கன்மம் என்ற மலமுடையவர்களாகப் பிறப்பதற்கான காரணத்தை விவிலியம் சொல்கிறது. ஆதி மனிதராகிய **ஆதாமும் ஏவாளும்** பழத் தோட்டத்தில் இருந்தபோது, பழங்களைப் பிடுங்கவேண்டாமென்று இறைவனிட்ட கட்டளையை மீறியதால் ஆதாமும் ஏவாளும் குற்றம் அல்லது பாவம் செய்தார்கள். ஆதாம், ஏவாள் என்ற தொடக்கப் பெற்றோரிலிருந்த பாவம் அதன் பின்னர் வந்த அவர்களின் பிள்ளைகளின் மரபணுக்களிலும் ஒட்டிக்கொண்டது. அதனால்தான், பிறக்கின்ற உயிர்கள் எல்லாம் பாவிகளாகப் பிறக்கின்றன என்று விளக்கம் தருகிறார்கள் கிறித்தவர்கள். உயிர்கள் கன்மபந்தத்தோடு ஏன் பிறக்கின்றார்கள் என்பதற்கு விவிலியத்தில் விளக்கமுண்டு. இப்படியான ஒரு விளக்கத்தைச் சைவசித்தாந்தத்திலே காணோம்.

ஆணவம் உயிரோடு உடன் பிறந்தது என்றும், அது ஒடுங்குமே ஒழிய ஒழியாது என்றும், அது ஒடுங்கி முனைப்பழிந்த நிலையிலேதான் தாடலை நிலை கிட்டும் என்றும் சைவசித்தாந்தம் கூறுகின்றது. **கேவல அவத்தையில்,** அதாவது உயிரானது ஆணவமலத்தோடு மட்டும் சேர்ந்திருக்கின்ற நிலையில், உயிரானது செயலற்றுக்கிடக்கின்றது என்று சைவசித்தாந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றது. கேவல அவத்தையில், உயிரோடு கூடியிருக்கின்ற ஒரேமலம், ஆணவமலம் மட்டும்தான் என்றால், அந்த நிலையில் உள்ள உயிருக்குக் கன்மமலமோ, மாயாமலமோ இல்லை என்பதுதானே பொருள்? அதாவது சஞ்சிதம் என்ற வினைத் தொகுதி உயிருக்கு இல்லை என்பதுதான் பொருள். கன்மவினை இல்லாத உயிருக்குத் தநுகரணபுவன போகங்களை இறைவன் ஏன் கொடுக்கின்றான் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

கேவல அவத்தையில் ஆன்மாவானது, ஆணவத்தின் வலையில் முழுக்கமுழுக்கக் கட்டுண்டு கிடக்கின்றது என்கின்றார் கள் சைவசித்தாந்தவாதிகள். கட்டுண்டு கிடக்கின்ற நிலையைப் **பெத்த நிலை** என்கிறார்கள் சைவசித்தாந்திகள். ஆணவத்தால் கட்டப்பட்ட ஆன்மா, ஆணவம் என்ற கயிற்றை வலுவிழக்கச் செய்து, கன்மம், மாயை என்ற பாசங்களை அடியோடு அறுப்பதற்காகவே இறைவன் ஆன்மாக்களுக்குத் தன்பெருங் கருணையினால், தநுகரணபுவன போகங்களை மாயையிலிருந்து படைத்துக் கொடுக்கிறான் என்பது சைவசித்தாந்தம். அவ்வாறு படைத்துக் கொடுத்து ஆன்மாக்களைப் பிறக்க வைக்கின்றபோது, அந்தப் பிறப்பின்போது அநுபவித்துத் தீர்ப்பதற்கான பிராரப்த கன்மத்தையும் அளந்து கொடுக்கின்றான் என்பது சைவசித்தாந்தம். சஞ்சிதம் என்ற வினைத்தொகுதி எதுவுமேயில்லாமல், ஆணவ மலத்தோடு மட்டும் கேவல நிலையில் கிடந்த ஆன்மாவுக்குப் பிறப்பைக் கொடுக்கின்ற இறைவன், பிராரப்த வினை என்ற ஒரு வினையை எப்படிக் கொடுக்கமுடியும் என்ற ஒரு கேள்வி எழுகிறது. இதற்கும் சைவசித்தாந்தக் கோட்பாட்டில் விடை இருப்பதாகத் தெரியவில்லை. இந்த விடயமும் சிந்திக்க வேண்டிய ஒன்று.

சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகளை இது வரை பார்த்தோம். இனிவருகின்ற இரண்டாம் பகுதியில் சைவ சித்தாந்தத் தத்துவக் கோட்பாடுகளுக்கு மூலமாக விளங்கிய இந்தியத் தத்துவஞான தரிசனங்கள் பற்றியும் சிறிதளவு அறிந்துகொள்ள முயல்வோம்.

* * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. "இந்து மதம்", "இந்துசமயம்" என்ற சொற்றொடர்கள்

சைவசமயம் என்ற சைவசித்தாந்தம் பற்றிப்பேசும்போது, **"இந்துமதம்" "இந்துசமயம்"** என்ற தொடர்கள்பற்றியும் பேச வேண்டியிருக்கின்றது. **"இந்துமதம்"** என்ற தொடர் **"இந்துசமயம்"** என்று பொருள்படுமாறு பலர் பேசிக்கொண்டாலும், **"இந்துமதம்"** என்றோ **"இந்துசமயம்"** என்றோ கூறக்கூடிய தனி ஒரு சமயம் உண்டா என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று.

இந்தியா சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் குறிப்பதான ஒரு தொடர்தான் **"இந்துமதம்"** என்பது. இந்தியருக்குரிய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பல்வேறுபட்ட வழிபாட்டு முறைகள், கடவுள் உண்டு என்ற கொள்கைகள், கடவுள் இல்லையென்ற கொள்கைகள், கலைகள், ஆசாரங்கள், உணவுப் பழக்கவழக்கங்கள், இலக்கியங்கள், கண்மூடிப் பழக்கங்கள் என்று அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு தொடர்தான் இந்துமதம் என்ற தொடர். ஆகவேதான் **"இந்துமதம்"** என்ற தொடரை, ஒரு சமயத்தின் பெயராகக் கொள்ளக்கூடாது என்றும், **"இந்துசமயம்"** என்ற தொடரைச் சிவநெறியை (சைவ சமயத்தை) குறிக்கின்ற தொடராக ஆளக்கூடாது என்றும் இலங்கையிலே வாழ்கின்ற அறிஞர் பலர் கூறிவருகின்றார்கள்.

சமயம் என்றால் அதற்கு ஒரு கடவுளர் இருக்கவேண்டும். இந்துமதத்திற்கு என்று தனிப்பட்ட ஒரு கடவுளர் கிடையாது. இதிலிருந்து, இந்துமதம் என்பது பல சமயங்கள், தரிசனங்கள், பல கடவுட்கொள்கைகள், பலவிதப் பழக்கவழக்கங்கள், பலவித உணவுப் பழக்கவழக்கங்கள், பலவித உடைப்பழக்க வழக்கங்கள், பலவித நாட்டிய மரபுகள், பலவித இசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுகள், பலவித மொழிகள், பலவித மொழிமரபுகள் என்பன கலந்த ஒரு கூட்டுத்தொகுதி என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது **"இந்துமதம்"** என்பதை **இந்தியம்** அல்லது **இந்துவம்** அல்லது **இந்துத்துவம்** என்று கூறுவதே பொருத்த மாகும்.

"இந்துமதம்" எனப்படும் இந்தியத்தை ஒரு சமயமாக்கி, அதைப் பின்பற்றுவோரை "இந்துக்கள்" என்று கூறி, அந்த இந்துக்களின் சமயநூல் **பகவத்கீதை** என்று கூறுவது பொருந்துமா? **பகவத்கீதை** என்பது பாரதம் என்ற ஒரு பெருங்காவியத்தின் ஒரு பகுதி. அது விட்டுணுவின் புகழ்பாடிக் கொலையை நியாயப்படுத்திய ஒரு நூல். விட்டுணுவின் துதிபாடும் **பகவத்கீதை** சைவசமயத்தாருக்குச் சமயநூலாவது எங்ஙனம் என்பதைச் சைவத்தமிழர் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

"இந்துமதம்" எனப்படும் இந்தியம் என்ற தொடருக்குள் பலவேறு சமயங்கள் உட்பட்ட வேறு பல சங்கதிகளும் அடங்குகின்றன என்று மேலே கண்டோம். அந்த அடிப்படையில், இந்தியத்தில் உள்ள பல்வேறு தத்துவக் கோட்பாடுகளை அல்லது தத்துவப் பார்வைகளை, அல்லது தத்துவத் தரிசனங் களை இப்போது பார்ப்போம்.

## 11. இந்தியத் தத்துவ ஞானப்பார்வைகள்

இந்தியா என்ற துணைக்கண்டத்தில் நிலவுகின்ற இந்தியச் சமயங்களை இரண்டு பெரிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். சமக்கிருத வேதங்களையும் உபநிடதங்களையும் அதனது பிரமாண நூல்களாக ஏற்றுக்கொள்ளுகின்ற பிரிவு ஓராம் பிரிவு. வேத உபநிடதங்களை அதனது பிரமாண நூல்களாக ஏற்றுக்கொள்ளாத பிரிவு இரண்டாவது பிரிவு.

1) உலகாயதம் 2) சமணம் 3) பவுத்தம் என்ற மூன்றும், வேத உபநிடதங்களை ஏற்றுக்கொள்ளாத இரண்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவைச் சேர்ந்தவை என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

வேத உபநிடதங்களைப் பிரமாண நூல்களாக ஏற்றுக் கொள்ளுகின்ற ஓராம் பிரிவுக்குள் பின்வருவன அடங்கும்:

1) சாங்கியம்
2) யோகம்
3) நியாயம் } வேதத்தை அறிவின் துணைகொண்டு
4) வைசேடிகம் } ஆராய்ந்து ஏற்பவை.
5) பூர்வமீமாம்சை (வேதத்தை அப்படியே ஏற்பது)
6) வேதாந்தம் (உத்தரமீமாம்சை)
7) சைவசித்தாந்தம்.

## 12. ஏழு தரிசனங்கள்

மேற்படி ஏழு பார்வைகளும் (தரிசனங்களும்) வேதத்தையும் உபநிடதங்களையும் ஏற்றுக்கொள்ளுகின்ற பிரிவுக்குள் அடங்கும் என்று மேலே கூறினோம். அவ்வாறு கூறியிருப்பதால், மேற்படி ஏழு தரிசனங்களுக்கிடையில் நெருங்கிய ஒற்றுமை இருப்பதாக நினைத்துவிடக்கூடாது. அவற்றிற்குள்ளேயும் வேறுபாடுகளுண்டு. வேதத்தை ஏற்கின்ற வோதாந்தத்திற்கும், வேதத்தை அடியோடு ஏற்காத மகாயான பவுத்தத்திற்கும் இடையில் இருக்கின்ற நெருங்கிய உறவானது, வேதத்தை ஏற்கின்ற மேற்படி ஏழு தரிசனங்களுள் எல்லாவற்றிற்கும் இடையில் இருப்பதாகச் சொல்லமுடியாது.

இந்த இடத்தில் சைவசித்தாந்தத்தைப் பற்றியும் ஒரு குறிப்புச் சொல்லவேண்டியிருக்கிறது. சைவசித்தாந்தம் வேத உபநிடதங்களை ஏற்கின்றது என்பது உண்மையேயாயினும், அதன் முதன்மையான பிரமாண நூல் வேதமன்று; சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்களே சைவசித்தாந்தத்தின் முதன்மையான பிரமாண நூல்கள்; **அதாவது, வேதக்கருத்துக்களுக்கும் சிவாகமக் கருத்துக் களுக்கும் இடையில் முரண் அல்லது ஒவ்வாமை காணப்படுகின்ற விடத்து, சைவசித்தாந்திகள் வேதத்தை ஒதுக்கிவிட்டுச் சிவாகமக் கருத்தையே ஏற்பார்கள்.** வேத உபநிடதங்களைப் பிரமாண நூல்களில் ஒன்றாகக் கொள்ளுகின்ற சைவசித்தாந்தம், வேத உபநிடதங்களை ஏற்காத உலகாயதத்தையும், பவுத்தத்தையும், சமணத்தையும் புறச்சமயங்கள் என்று குறிசுடுகின்றது.

அதனோடு பல வகைகளில் ஒத்துப்போகின்ற தரிசனங்களை **அகச்சமயங்கள்** என்று குறிசுடுகின்றது சைவசித்தாந்தம். சைவசித்தாந்தத்தோடு குறைந்த ஒற்றுமை கொண்டிருக்கின்ற தரிசனங்களை அகப்புறச்சமயம் என்று சைவசித்தாந்தம் குறிசுடுகின்றது. மேலே வேதங்களை ஏற்றுக்கொள்வனவாகக் குறிப்பிடப்பட்ட ஏழு தரிசனங்களுள் ஒன்றான சாங்கியத்தைப் புறச்சமயம் என்றே குறிப்பிடுகின்றது சைவசித்தாந்தம். சாங்கியம் என்ற தரிசனம், வேத உபநிடதங்களை ஏற்றுக் கொண்டபோதும், சைவசித்தாந்திகள் அந்தத் தரிசனத்தையும், பவுத்தம், சமணம், உலகாயதம் என்ற அவைதிகப் பிரிவுக் குள்ளேயே அடக்குகின்றனர்.

## 13. தத்துவ தரிசனங்களும் அவற்றின் கொள்கைகளும்

மேலே குறிப்பிட்ட ஏழு தரிசனங்களுள் **1) சாங்கியம் 2) யோகம் 3) நியாயம் 4) வைசேடிகம்** போன்ற தரிசனங்களைப் பின்பற்றுவோர் எவருமே இன்றில்லை. இன்று, தத்துவங்கள் என்ற வகையில் அவை வெறும் நூல்களாகவே உள்ளன. **உத்தரமீமாம்சை** எனப்படுகின்ற சங்கர வேதாந்தத்தைப் பின்பற்றுகின்றவர்கள் **சைவசித்தாந்தத்தைப்** பின்பற்றுகின்றவர்கள் என்ற இரண்டு பிரிவினரே இன்று உள்ளனர். **மீமாம்சை** எனப்படுகின்ற **பூர்வமீமாம்சையைப்** பின்பற்றுகின்றவர்களும் இன்று இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே சொல்லலாம்.. எந்தவிதக் கேள்வியும் இன்றி வேத உபநிடதங்களை ஏற்கின்ற கொள்கையைக் கொண்டவர்களே **பூர்வமீமாம்சகர்** என்று அழைக்கப்படுகின்றனர். வேதமேயாயினும் அதனை அறிவின் துணைகொண்டு விளங்கி, விலக்குவன விலக்கி, பின்பற்றவேண்டுமென்ற கொள்கை உடையோரே **உத்தரமீமாம்சகர்** என்று அழைக்கப்படுகின்றனர்.

தரிசனங்கள் பற்றிய மேற்படி சிறிய முன்னுரையோடு முக்கிய தரிசனங்களான, **"சாங்கியம்", "யோகம்", "நியாயம்", "வைசேடிகம்"** என்பன பற்றி மட்டும் இப்போது மேலோட்டமாகப் பார்ப்போம்.

## 14. சாங்கியம்

இறைவன் ஒருவன் உளன் அல்லது பரம்பொருள் ஒன்று உண்டு என்பதை ஏற்காத கூட்டத்தில் சாங்கியரும் அடங்குவர். அதாவது சாங்கியர், கடவுள் உண்டு என்பதை ஏற்காதவர்கள்.

சாங்கியம் என்ற சொல்லுக்கு **முற்றறிவு** அல்லது பூரண அறிவு என்பது பொருள். அதாவது மூலப்பொருள் பற்றிய அல்லது ஆதிப் பொருள்பற்றிய பூரண அறிவைத் தருகின்ற தரிசனத்துக்கு (தத்துவப் பார்வைக்கு) சாங்கியம் என்பது பெயர் என்று சிலர் விளக்கம் தருகின்றார்கள்.

இந்தியாவின் தரிசனங்கள் எல்லாமே இப்பிரபஞ்சத்தின் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் ஆராய முன்வந்திருக்கின்றன. அந்த முயற்சியின் பலனாகத் தாம்தாம் கண்ட காட்சியையே அவை விவரிக்கின்றன. அதாவது, நான் யார்? எங்கிருந்து வந்தேன்? என்னை ஆக்கியது யார்? ஏன் ஆக்கப்பட்டேன்? இந்த உலகம் எங்கிருந்து வந்தது? அதைப் படைத்தது யார்? படைக்கப்பட்டிருந்தால் அது உடைக்கப்படுமா? உடைப்பவர் யார்? என்ற கேள்விகளுக்கு விடைகாண முயன்றதன் பலனாக விளைந்தவைதான் மேலே கூறிய ஏழு தரிசனங்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கியோனே உள்பொருள் என்று வாதிடுகின்றது வேதாந்த தரிசனம். நிலைபேறானது என்று ஒன்றுமேயில்லை; எல்லாமே மாற்றமடைந்து கொண்டிருக்கின்றன என்று வாதிக்கின்றது அவைதிகமான பவுத்தம். வேதாந்த தரிசனம் ஒருகோடியில் நிற்க, பவுத்த தரிசனம் மற்றக்கோடியில் நிற்க, ஏனைய தரிசனங்கள் எல்லாம் இந்த இரண்டு கோடிக்கும் இடையில் நிற்கின்றன; அதாவது நிலைபேறானவையும் உள்ளன, நிலைபேறு அற்றனவும் உள்ளன என்று சாதிக்கின்ற வகுப்பைச் சேர்ந்ததுதான் **சாங்கிய தரிசனம்**.

**மாற்றம் அடைகின்ற பொருள் அறிவுள்ள பொருளாகாது என்றும், அறிவுள்ள பொருள் மாற்றமடையாது என்றும் சாங்கிய தரிசனம் கூறுகின்றது;** அதாவது அறிவுள்ள பொருள், அறிவற்ற பொருள் என்று இரண்டு பொருள்கள் உள்ளன என்று சாங்கிய தரிசனம் வாதிடுகின்றது. இதனாலேதான் மூலப்பொருள்கள் இரண்டு என்ற முடிவுக்குச் சாங்கியர் வந்தனர். அவ்விரண்டில் ஒன்று அறிவே வடிவானது; அதற்குச் சாங்கியர் கொடுத்த பெயர் **புருடன்** என்பது. புருடனைச் சைவசித்தாந்தத்தில் **உயிர்** என்று அழைப்பர். மற்ற மூலப்பொருள் அறிவற்றது. அதற்குச் சாங்கியர் கொடுத்த பெயர் **பிரகிருதி.** உலகம் தோற்றுவதும் பிரகிருதியிலிருந்துதான்; உலகம் பின்னர் போய் ஒடுங்குவதும் பிரகிருதியில்தான். புருடன் மாற்றமடையாத அறிவுப்பொருள். பிரகிருதி, மாற்றம் அடைகின்ற சடப்பொருள். புருடன் காரியமும் அன்று; காரணமுமன்று. காரணம் என்பது பிறவற்றைத் தோற்று விக்கும் ஆற்றல் கொண்டது; காரியம் என்பது பிறபொருளிலிருந்து தோன்றுவது.

பிரகிருதி என்பது புருடன் போன்றதன்று. பிரகிருதி என்பது காரியம் அன்று; அஃதாவது அது வேறொன்றிலிருந்து தோன்றவில்லை; அதாவது, புருடன் போல அஃதும் அநாதி யானது. உலகத் தோற்றத்திற்குப் பிரகிருதிதான் மூலம்; அதாவது, தான் எதிலிருந்தும் தோற்றுவிக்கப்படாதபோதிலும் இவ்வுலகம் தோன்றுவதற்குப் பிரகிருதிதான் காரணம். இவை தான் சாங்கியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள். இந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகளின் அடிப்படையிலேதான் இந்தப் பிரஞ்சம் அனைத்திற்கும் விளக்கம் தர முயல்கின்றது சாங்கியம்.

மூலப்பொருள்கள் எனப்படும் சத்துப்பொருள்கள் எத்தனை என்று கொள்கின்றார்கள் என்பதை அடிப்படையாக வைத்துத் தத்துவக் கோட்பாட்டு அறிஞர்களை ஐந்து வகையினராகப் பிரிக்கின்ற மரபு ஒன்று இந்தியத் தத்துவஞானப்பரப்பில் உண்டு:

1) மூலப்பொருள் என்று ஒன்றுமே கிடையாது

2) மூலப்பொருள் என்று ஒன்றே ஒன்றுதான் உண்டு

3) மூலப்பொருள்கள் இரண்டே இரண்டுதான் உண்டு

4) மூலப்பொருள்கள் மூன்று உள்ளன.

5) மூன்றுக்கும் மேற்பட்ட மூலப்பொருள்கள் உள்ளன.

இவற்றுள்,

அ) புத்தர் முதலாம் பிரிவைச் சேர்ந்தவர்

ஆ) வேதாந்திகள் இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்

இ) சாங்கியர் மூன்றாம் பிரிவைச் சேர்ந்தவர்

ஈ) சைவசித்தாந்திகள் நான்காம் பிரிவைச் சேர்ந்தவர்

உ) நையாயிகர், வைசேடிகர் என்போர் ஐந்தாம் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

**சாங்கியர், இறைவன் என்ற பரம்பொருள் ஒன்று உண்டு என்பதை ஏற்றுக்கொள்வதில்லை.** அப்படியாயின் சடப்பொருளாகிய பிரகிருதி இந்த உலகத்தை எப்படிப் படைக்கின்றது என்பது கேள்வி. புருடன் சித்துள்ளதாயினும் செயலற்ற ஒன்று. பிரகிருதி சத்தானது, ஆயினும் சித்து என்ற அறிவில்லாத ஒன்று. அறிவில்லாத பிரகிருதி, உலகத்தை எப்படித் தன்னிலிருந்து விரிக்கின்றது, பின்னர் எப்படி ஒடுக்குகின்றது என்ற கேள்விக்குச் சாங்கியர் விடை கூறுவது கடினம். பூர்வமீமாம்சகரைப்போலவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாங்கியரும் வேதத்தை ஒப்புக்கொண்டு, கடவுளுண்மையை ஒப்புக்கொள்ளாதவர்களாக இருந்தார்கள்.

## 15. யோக தரிசனம்

சாங்கிய தரிசனத்துக்கும் யோக தரிசனத்துக்கும் இடையே சில ஒற்றுமைகள் இருப்பதால் இந்த இரண்டு தரிசனங்களையும் ஒன்றாகச் சேர்த்துச் **சாங்கிய யோகம்** என்று அழைக்கின்ற வழக்கமும் உண்டு. இவை இரண்டினுடைய குறிக்கோளும் ஒன்றாக இருப்பதாலேயே அவ்வாறு அழைக்கின்றனர் என்று கொள்ளலாம். அதாவது பிரகிருதியில் சிக்குப்பட்டிருக்கின்ற புருடன் அந்தச் சிக்கலில் இருந்து தன்னைப் பிரித்து, அறிவே மயமான தன் உண்மையான இயல்பை அடைவதுதான், **சாங்கியம், யோகம்** என்ற இரண்டு தரிசனங்களும் கூறுகின்ற குறிக்கோள் அல்லது வீடுபேறு.

**யோகம் என்ற தரிசனத்தின்படி யோகம் என்றால் பிரிதல் என்பது பொருள்;** அதாவது, பிரகிருதி ஏற்படுத்திய வலையிலிருந்து புருடன் விடுபட்டுப் பிரிந்து தன் உண்மை நிலையை அடைதல் என்பது பொருள்.

**வேதங்களிலும், உபநிடதங்களிலும் யோகம் என்ற சொல்லுக்குச் சேர்தல் என்பது பொருள்;** அதாவது ஆன்மாவானது மலங்களிலிருந்து பிரிந்துபோய்ப் பரம்பொருளுடன் சேர்தல் அல்லது இணைதல் என்பது பொருள். பரம்பொருள் என்ற சொல்லுக்கு யோகதரிசனத்தில் இடமில்லை; அதனால் சேர்தல் என்ற சொல்லுக்கும் யோகதரிசனத்தில் இடமில்லை.

யோகதரிசனம் எனப்படுகின்ற யோக சமயத்தை முதன் முதலில் முன்மொழிந்து வரையறுத்து விளக்கியவரின் பெயர் **பதஞ்சலி** என்பது. அவர் இயற்றிய நூல் ஒன்று உண்டு. அதன் பெயர் **யோகசூத்திரம்.** இந்த நூல்தான் **யோகம்** பற்றி விவரிக்கின்ற மிகவும் பழமையான நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாங்கிய தரிசனத்துக்கும் யோகதரிசனத்துக்கும் இடையிலுள்ள ஒற்றுமை என்னவென்றால், அவை இரண்டுக்குமான கொள்கைகளையும் குறிக்கோள்களையும் **சாங்கியம்** வகுத்துக்கூற, **யோகதரிசனம்** அந்தக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பது எப்படி என்று கூறுகிறது.

**புருடன், பிரகிருதி** ஆகியவை பற்றிய உண்மையை அறிந்து, ஞானமார்க்கத்தின்மூலம் பிரகிருதியின் பிடியிலிருந்து விடுபடுவதுதான் வீடு என்கிறது சாங்கியம். பிரகிருதியின் பிடியிலிருந்து புருடன் விடுபடவேண்டுமானால், தியானம்தான் அதற்கு மார்க்கம் என்கிறது யோக தரிசனம்.

யோகம் என்ற சொல்லின் பொருள் இன்று சிதைந்து போயிருக்கின்றது; சின்னாபின்னப்பட்டுப் போயிருக்கின்றது.

**மூச்சை அடக்குவதோ, மூக்கு நுனியை நோக்கிக்கொண்டு மவுனமாக உட்காந்திருப்பதோ, சிரசாசனம், சர்வாங்காசனம், பத்மாசனம் என்பன செய்வதோ உண்மையான யோகமன்று. யோகம் என்பது, உடல் சம்பந்தப்பட்டதன்று; அது மனமும், சித்தமும் சம்பந்தப்பட்ட ஒன்று; அதாவது, சித்தம் சுத்தமாகி, நான், எனது என்கின்ற செருக்கு அறுவதுதான் யோகம். இந்தச் சித்தத்தின் சுத்தியை அடைவதற்காகப் படிப்படியாக, வரன்முறையாக மேற்கொள்ளவேண்டிய எட்டு விதிகளை யோக சமயத்தினர் வகுத்தனர். அவற்றுக்கு அட்டாங்கயோகம் என்பது பெயர்.**

உள்ளம் வெள்ளையாகித் தூய்மைப்பட வேண்டுமென்றால் முதலில் உடலையும் உடல் சம்பந்தப்பட்ட இந்திரியங்களையும் கட்டுப்படுத்த வேண்டும். சித்தம் தூய்மைப்படுவதற்காக **இயமம், நியமம்** என இரண்டு விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை மேற்கொள்வதனால் நம்முடைய விழைவுகள் சரியான வழியில் செல்ல வாய்ப்பு ஏற்படும். சென்ற இடத்தால் செல்லவிடாது, தீதை ஒருவி நன்றின்பால் உய்க்கின்ற பணியை **இயமம், நியமம்** என்ற உள்ளப் பயிற்சிகள் செய்யும். அதாவது, கொல்லாதே, பொய் சொல்லாதே, களவெடுக்காதே, பொறாமைப் படாதே என்று தீயன தவிர்க்குமாறு வற்புறுத்துவது இயமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்பாட்டு முறையில், இது நல்லது; இது விரும்பத்தக்கது என்று வழிகாட்டுவது **நியமம்.** அதாவது தூயவனாக இரு; போதுமென்று திருப்திப்படு; நல்ல உரையாடல்களைக் கேள், நல்ல நூல்களைக் கல் என்று ஊக்கமூட்டுவது நியமம் எனப்படும்.

மேற்கூறிய இரண்டும் கைவரப்பெற்ற நிலையில் மேற் கொள்ளப்படவேண்டியவை **ஆசனமும் பிரணாயாமமும்** ஆகும்.

**ஆசனம்** என்பது மன அடக்கம் பெறுவதற்காக ஒருவன் எவ்வாறு அமரவேண்டும் என்று கூறுவது. **பிரணாயாமம்** என்பது மூச்சை அடக்குகின்ற முறையைக் கூறுவது. பிரணாயாமத்தின் மூலம், குரங்குபோலக் கிளைவிட்டுக் கிளை தாவுகின்ற புலன்களின் அட்டகாசத்தைக் குறைத்து அவற்றை அமைதிப் படுத்தலாம். இவ்வாறு அமைதிப்படுத்தும் முறையைப் **பிரத்தியாகாரம்** என்று யோகர்கள் சொல்வார்கள். மனம் ஒரு நிலைப்பட்டு இருக்கின்ற நிலை **தாரணம்** அல்லது **தாரணை** எனப்படும். மனம் ஒருநிலைப்பட்டால்தான், சாங்கிய-யோக உண்மைகள் வெளிப்படையாகப் புலப்படும். ஒருநிலைப்பட்ட மனத்தின் தியானத்தால் உணரப்படுகின்ற உண்மை அறியப் பட்டவுடனும், யோகமார்க்கத்தைக் கடைப்பிடிப்பவர் **சமாதி நிலையை** எய்துவர் என்று யோகதரிசனம் அறிவுறுத்துகிறது. இந்தச் சமாதி நிலை, **நான், எனது** என்ற உணர்வு அற்ற நிலை. இந்த நிலையிலேதான் **சாங்கிய-யோகத்தினர்** கூறும் புருடன், பிரகிருதிச் சிக்கலிலிருந்து விடுபட்டுத் தனது உண்மையான கட்டற்ற நிலையை எய்துகின்றது.

**நான் எனது** என்ற செருக்கறுந்த நிலையை எய்துவதற்கு யோகப் பயிற்சியும், மந்திரங்களைக் கொண்டிருக்கின்ற யந்திரப் பயிற்சிமூலமான தியானமும் (concentration and meditation) வேண்டுமென்று திருமூலர் தமது திருமந்திரத்தில் வற்புறுத்துகின்றார்.

சாங்கியமும் யோகமும் மாறுபடுகின்ற இடங்களும் உண்டு என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகிருதி கண்ணுக்குப் புலனாகாத ஒன்று என்பதையும், கண்ணுக்கு புலனாகின்ற இந்த உலகம், கண்ணுக்குப் புலனாகாத பிரகிருதியிலிருந்து தோன்றுகிறது என்பதையும், உலகத்தைப் பார்க்கின்ற கண்கள்கூடப் பிரகிருதியிலிருந்து தோன்றுகின்றன என்பதையும், காண்பதற்குத் துணைசெய்யும் மனங்கூடப் பிரகிருதியிலிருந்து தான் தோன்றுகின்றது என்பதையும் சாங்கியரும் யோகமதத்தினரும் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

**ஆனால், இந்த உலகை உற்பத்தி செய்யுமாறு, புருடனையும், அத்துடன் அறிவற்ற பிரகிருதியையும் இயக்குபவர்கள் யார்? என்ற ஒரு கேள்வியும் எழுவது இயல்பானதே. இயக்குவதற்கு ஒருவரும் தேவையில்லை என்பதே கடவுளுண்மையை ஏற்காத சாங்கியரின் மறுமொழி.**

சாங்கியரின் மறுமொழியிலிருந்த குறைபாட்டை யோக தரிசனத்தினர் உணர்ந்தார்கள் என்று எண்ணத்தோன்றுகின்றது. அதன் பலனாகச் சாங்கியக் குறைபாட்டை நீக்க யோகமதத்தினர் முயன்றார்கள்.

**சாங்கியர் கடவுள் உண்டு என்பதை ஒப்புக்கொள்ளவில்லை. யோக மதத்தினர் "கடவுள்" உண்டு என்பதை ஒப்புக்கொள்கின்றனர். இதுதான் சாங்கியத்துக்கும் யோகமதத்தினருக்கும் இடையிலான வேறுபாடு. இந்த வேறுபாட்டினாலேதான், சாங்கியத்தை நிரீசுவர சாங்கியம் என்றும், யோகமதத்தைச் சேசுவர சாங்கியம் என்றும் அழைக்கின்ற வழக்கம் ஏற்பட்டது.**

யோகமதத்தினர் கூறுகின்ற **"கடவுளும்"**, சைவசித்தாந்தம் கூறுகின்ற **"கடவுளும்"** வெவ்வேறு பண்புகள் கொண்டவர்கள் என்பதை நாம் நினைவில் வைத்திருத்தல் வேண்டும். சாங்கியத்தின்படி, உலகம் பிரகிருதியிலிருந்து தோன்றுகின்றது என்று குறிப்பிட்டோம். இப்படிப்பட்ட உலகப்படைப்புக்குக் கடவுளும் காரணமாவான் என்கிறது யோகதரிசனம். ஆனால் அவர்களின் கருத்துப்படி, கடவுள் படைப்பவன் அல்லன்; படைப்புக்குத் துணைபுரிபவன் என்பதே யோகதரிசனத்தாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதம். கடவுளை ஒப்புக்கொள்ளாத சமயங்கள் எல்லாம் ஞானமார்க்கத்தையே விடுதலைக்கான வழி என்று வற்புறுத்து கின்றன. யோகதரிசனம், ஞானத்தை வற்புறுத்தாமல், பக்திக்கே இடம் தருகின்றது.

யோகமதத்தினரின் கொள்கையின்படி கடவுள் எங்கும் உள்ளவர்தான்; எல்லாம் அறிபவர்தான். ஆனால் எல்லாவற்றையும் தமக்குள் அடக்குகின்ற ஆற்றல் அவர்கள் கூறுகின்ற கடவுளுக்குக் கிடையாது. மேலே கூறியபடி, கடவுளுக்குப் படைக்கும் ஆற்றல் கிடையாது; துணைபுரிகின்ற ஆற்றல் மட்டுமே உண்டு.

## 16. வைசேடிகம்

உண்மையில் உள்ள பொருள் மனமா? புற உலகமா? அல்லது அந்த இரண்டுமா? என்ற கேள்விக்கு இரண்டுமே உள்பொருள்கள் தாம் என்று கூறுகின்ற சமயத்துக்கு **வைசேடிகம்** என்று பெயர்.

பல்வேறு இயல்புகள் உள்ள இந்த உலகத்தின் தோற்றத் துக்குக் காரணமான மூலப்பொருள் ஒன்றா, பலவா என்று கேட்கப்படுகின்ற கேள்விக்குப் பல, என்று மறுமொழி கூறுகின்றவர்களும் **வைசேடிகர்கள்தான்**.

இந்த வைசேடிகரின் அடிப்படைக் கருத்துக்களோடு பெருமளவு ஒத்துப்போகின்ற சமயத்தினருக்கு **நையாயிகர்** என்பது பெயர். இந்தக் கருத்தொற்றுமை காரணமாக இந்த இரண்டு சமயத்தினரையும் ஒன்று சேர்த்து **நியாய வைசேடிகர்** என்று அழைக்கின்ற வழக்கம் ஒன்றுண்டு.

வைசேடிகரின் தத்துவத்தை விளக்குகின்ற நூல்கள் பல உண்டு. அவற்றுள் மிகப்பழைய நூலின் பெயர் **வைசேடிக சூத்திரம்** என்பது. இதனை இயற்றியவரின் பெயர் **கணாதை முதலியார்**.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத் தோற்றத்துக்குக் காரணமாக இருப்பது இனிமேற்கொண்டு பிரிக்கப்பட முடியாத அணுக்கள் தாம் (irreducible category) என்று கூறுகின்ற சமயத்துக்கு **வைசேடிகம்** என்பது பெயர்.

சமணரும், குறிப்பிட்ட சில பவுத்தசமயக் கூட்டத்தினரும் உலகத் தோற்றத்திற்கு அணுக்கள் தாம் காரணம் என்கின்றனர்.

கிரேக்க நாட்டுத் தத்துவஞானிகளான **எப்பிக்கியூரசு** (Epicurus) **தெமோக்கிறிற்றசு** (Democritus) போன்றோரும் அணுக்களே உலக உற்பத்திக்குக் காரணம் என்று சொல்லியிருக் கிறார்கள். இவ்வாறு இருப்பதால், **வைசேடிகர் தமது அணுக் கொள்கையைக் கிரேக்கரிடமிருந்துதான் பெற்றார்கள் என்று கூறுகின்ற இந்திய அறிஞரும் உள்ளனர்.** இந்தக் கருத்தை முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவரும் தத்துவஞானியுமான **சர்வபள்ளி இராதா கிருட்டினன்** அவர்கள் கடுமையாக எதிர்த்து மறுத்திருக்கின்றார்.

கண்ணுக்குப் புலனாகாத தனித்தனி அணுக்கள், ஒன்றோ டொன்று கூடிப், பெரிய பொருளாக ஆகும். அந்த நிலையிலே அந்தப் பொருள் கண்ணுக்குப் புலனாகும் என்பது வைசேடிகரின் கருத்து. ஆனால் இங்கே கேள்வி ஒன்று எழுகின்றது. தனியனாக இருக்கின்ற அணு, மற்ற அணுவோடு சேருவதை இயக்குவதற்கு ஒரு கருத்தா அல்லது கருவி வேண்டுமே! அது யார்? அல்லது எது? என்பதுதான் அந்தக்கேள்வி. அணுவுக்குள் அந்த இயக்கு சக்தி இயல்பாக உண்டா? அல்லது வேறொன்றுதான் அதை இயக்க வேண்டுமா?

உலக உற்பத்திக்கு மூலகாரணம் அணுக்களே என்று கூறுகின்ற புத்தமதத்தினரின் ஒரு பிரிவினரும், சமணரும் அணுக்களை இயக்குவது உயிர்களின் கன்மங்களே என்பார்கள். புத்தரும் சமணரும் கடவுள் உண்டென்பதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்பது நமக்குத் தெரியும். கன்மம் என்பதை ஏற்றுக்கொள்ளாத கிரேக்க தத்துவஞானிகள் கூட, அணுக்களுக்கு இயக்க சக்தி இயல்பாகவே அமைந்திருப்பதாகக் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மேற்படி கூற்றுக்களை ஏற்றுக்கொள்வது கடினமாக உள்ளது. அறிவற்ற அணுவோ, கன்மமோ உற்பத்தி செய்யவும் அழிக்கவும் ஆற்றல் கொண்டிருக்கிறது என்பதை நம்பமுடிய வில்லை.

**வைசேடிகர் வேதத்தை ஒப்புக்கொண்டபோதும், கடவுள் உண்மையை ஒப்புக்கொள்ள வில்லை.**

## 17. நியாயம் என்ற நியாய தரிசனம்

இந்தியரின் ஏழு தரிசனங்களில் நியாயம் என்பதும் ஒன்று. இந்தத் தரிசனத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்வோர் **நையாயிகர்** என்று அழைக்கப்படுவர்.

மெய்ம்மை வாதிகளுள் மிக முன்னணியில் நிற்பவர்கள்தான் நையாயிகர். நியாயத்துக்கு, அதாவது **காரண-காரிய** வாதத்துக்கு முதலிடம் கொடுத்தமையால் இவர்கள் நையாயிகர் எனப்பட்டனர் எனலாம். இந்தத் தரிசனத்தை ஏற்றுக்கொள்வோர் **1) பிரத்தியட்சம் 2) அநுமானம் 3) ஆப்த வாக்கியம் 4) உபமானம்** ஆகிய நான்கு பிரமாணங்களையும் ஏற்றுக்கொள்கின்றவர்கள். அறிவைத் தருகின்ற வழிகளையே **பிரமாணங்கள் அல்லது அளவைகள்** என்று கூறுவர் என்று முன்னரே குறிப்பிட்டிருந்தோம். மேற்படி பிரமாணங்களின்மூலம் நாம் பெறுகின்ற அறிவு சரியானதா அல்லது பிழையானதா என்பதை அறிவதற்கும் பிரமாணம் ஏதும் உண்டா என்ற ஒரு கேள்வியும் எழுகின்றது என்பது வெளிப்படை.

பிரமாணம் சரியாக இருந்தால்தான் அந்தப் பிரமாணமாகிய அளவையைக் கொண்டு நாம் பெறுகின்ற அறிவும் சரியான அறிவாக இருக்கும் என்பது நையாயிகரது கொள்கை. இதையே **செட்டுக் கிருட்டினமூர்த்தி** அவர்கள் From the known the unknown cannot be known. If the known is not correct, then it cannot know or measure the unknown correctly. பிரமாணம் பிழையானதாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பின் பிரமாணத்தின்மூலம் பெறப்பட்ட அறிவும் பிழையான தாகவே இருக்கும். பிரமாணத்துக்கு முதன்மை கொடுத்து அந்தப் பிரமாணத்தை முற்றாக ஆராய்ந்த காரணத்தினால், நியாய தரிசனத்தைப் **பிரமாண தரிசனம்** அல்லது **பிரமாண சமயம்** என்று அழைக்கின்ற மரபும் உண்டு. இந்தப் பிற்புலச் செய்திகளோடு அடுத்த பாகமான திருமந்திரக் கடலுக்குள் இறங்குவோம்.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. நுழைவாயில்

சமய இலக்கியங்களைத் தோத்திரங்கள் (Doxology) என்றும், சாத்திரங்கள் (Theoretical Philosophy) என்றும் வகுப்பது மரபு. தேவார திருவாசகங்கள் தோத்திரங்கள் எனப்படும். தோத்திரங்கள் என்றால் வணக்கப்பாடல்கள், புகழ்ப்பாடல்கள், துதிப்பாடல்கள் என்பது பொருள். ஆங்கிலத்தில் சொல்வ தானால், தோத்திரங்களை Words of Salutation and Prayer அல்லது Panegyric என்று சொல்லலாம். இறையை நோக்கிப் போற்றிப் புகழ்ந்து வேண்டுதல் செய்கின்ற பாடல்கள், கவிதைகள் என்பன தோத்திரம் என்ற சொல்லில் அடங்கும். இந்த வகையில் பார்க்கின்றபோது, மந்திரங்கள் என்று சொல்லப்படுகின்றவையும் தோத்திரங்களே. **இருக்கு** வேதத்தில் அல்லது **யசுர்** வேதத்தில் அல்லது **சாம** வேதத்தில் அடங்கிய தோத்திரப் பாடல்கள் வேள்வி வாய்ப்பாடுகள், **திருவிராகத் தேவாரங்கள்** என்பன மந்திரங்கள் என்று மதிக்கக்கூடிய தோத்திரங்கள். மறுதலையாக, ஒரு சமயத்தின் தத்துவங்களை, அதாவது இறைக்கும் உயிர்களுக்கும் இடையிலான உறவினையும், இறையின் இயல்பையும், உயிர்களின் இயல்பையும், பிறப்பின் நோக்கத்தையும், இறப்பின் காரணத்தையும், இன்பத்தின் காரணத்தையும், துன்பத்தின் காரணத்தையும் விளக்குகின்ற அல்லது விளக்க முயல்கின்ற ஆராய்ச்சிகளைக் கொண்டிருக் கின்ற எழுத்துக்கள் எல்லாம் சாத்திரங்கள் எனப்படும். வேதாந்தம் என்ற உபநிடதங்களும், தர்க்க நூல்களும் யோக நூல்களும் சாத்திரங்கள் எனப்படும்.

திருமூலநாயனாரால் இயற்றப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற திருமந்திரம் பற்றித் தெரிய முயலும்போது, மேற்கண்ட வரைவிலக்கணங்களை மனதில் வைத்திருத்தல் பயன் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. மந்திரம் என்றால் என்ன?

மந்திரம் என்ற சொல்லுக்குப் பலபொருள்கள் உண்டு; பொதுவான கருத்தும் உண்டு, சிறப்பான கருத்தும் உண்டு. **மதுரைப் பேரகராதி**யின்படி **"மந்திரம்"** என்ற சொல்லுக்கு 1. ஆலோசனை, 2. அரண்மனை, 3. உபநிடதங்களில் ஒன்று, 4. எண்ணுதல், 5. ஒருதேயம், 6. கடல், 7. கள்ளு, 8. குகை, 9. குதிரைக்கூட்டம், 10. குதிரைப்பந்தி, 11. கோயில், 12. பொருப்பு, 13. வீடு, 14. வேதம், 15. அதிரொலி என்று பதினைந்து கருத்துக்கள் உண்டு.

சென்னைப் பேரகராதி **"மந்திரம்"** என்றால் ஆலோசனை, மந்திரிகள் சபை, எண்ணம், அபிப்பிராயம், வேதமந்திரம், பஞ்சாட்சரம், அட்டாட்சரம், சாத்திரநூல் என்று எட்டுக்கும் மேற்பட்ட கருத்துக்களைக் கொடுக்கின்றது.

மேற்கூறியவற்றை நோக்குகின்றபோது "மந்திரம்" என்ற சொல்லின் சாதாரண பொருள், சிந்தனை, எண்ணம், ஆலோசனை, கருத்து, சாத்திரம் என்பனவற்றில் ஏதோ ஒன்றோ, பலவோ ஆகலாம். சிறப்பான பொருள், **ஆற்றல் செறிந்த ஒலி** என்பது; அதாவது எழுத்துக்களின் சிறப்பான சேர்க்கையால் ஏற்படுகின்ற தெய்வீக ஓசை என்பது பொருள். **அஃதாவது நினைத்ததை எய்தவைக்கின்ற சிறப்போசை என்பது பொருள்.**

இறையுணர்வோடு அல்லது இறை அறிவோடு சம்பந்தப்பட்ட சொல்லான **'மந்திரம்'** என்பதற்கான வரைவிலக்கணத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து, **தொல்காப்பியம்** என்ற இலக்கண நூலைத் தமிழருக்கு வழங்கிய **தொல்காப்பியர்** பின்வருமாறு கூறுகின்றார்:

**"நிறைமொழி மாந்தர்தம் ஆணையில் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப"**

மனமாசுகள் அற்றுப்போன ஒழுக்கசீலர்கள் தமது ஆணையாகக் கூறிய சொற்களே மந்திரங்கள். இந்த மந்திரங்கள் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுபெரும் தமிழறிஞராகிய **அ.ச. ஞானசம்பந்தன்** அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் ஆழமான, உருக்கமான கருத்துக்கள். அந்தக் கருத்துக்களை அவருடைய சொற்களில் கீழே தருகிறோம். அவருடைய விளக்கத்தை விட அழகான விளக்கத்தை நாம் வரையமுடியாது என்பதாலேயே ஆன்மிக முன்னேற்றமும், ஆழ்ந்த தத்துவஞானமும், ஆங்கில இலக்கண இலக்கியப் புலமையும் கொண்ட ஞானசம்பந்தன் ஐயா அவர்களின் சொற்களை அப்படியே கீழே தருகின்றோம்:

"நம்முடைய முன்னோர்கள், பெரியவர்கள், ஞானிகள், தபசிகள், ரிஷிகள் முதலானவர்கள் நிறைமொழி பேசுபவர்களாக இருந்தார்கள். தொல்காப்பியனார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மந்திரங்களைப் பற்றி ஆராய்ந்து மிகச் சிறந்த கருத்து ஒன்றை வெளியிடுகின்றார். **"நிறைமொழி மாந்தர்"** என்று இந்தப் பெரியவர்களுக்குப் பெயர் வைக்கின்றார்.

"நிறைமொழி மாந்தர்கள்" என்றால் என்ன? நாம் பேசுகின்ற குறைமொழிகளையே எடுத்துக் கொண்டு, அந்தக் குறைமொழி களை நிறைமொழிகளாக மாற்றுகின்ற பேராற்றல் வாய்ந்தவர்கள் அவர்கள். அப்படியானால் இந்த ஆற்றல் எங்கே இருக்கிறது? இந்தச் சொற்களிலா? இல்லை.

சாதாரண சொற்களைத்தான் அவர்கள் எடுத்துக் கொள்கிறார் கள். ஆனால் சொற்களை எடுத்துக்கொண்டு அவர்கள் தம்முடைய ஆற்றல் காரணமாகத் தம்முடைய நிறைகுணச் சக்தி முழுவதையும் அந்தச் சொற்களில் ஏற்றி, 'இவை மந்திரங்களாக ஆகக் கடவன' என்று ஆணையிடுவதன் மூலம், அவற்றை மந்திரங்களாக மாற்றுகிறார்கள். இதனைத்தான் தொல்காப்பியனார்

**"நிறைமொழி மாந்தர்தம் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி"**

என்று சொல்கிறார். இந்த ஆணையிடுதல் என்பது, குறைமொழியாக உள்ள எழுத்துக் கோவைகளை, சொற் கோவைகளை, சக்தி பெற்ற மந்திரங்களாக மாற்றுவதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானால் இந்தச் சொற்கள் எப்படி இந்த ஆற்றலைப் பெறுகின்றன என்று சிந்திக்கவேண்டும். எல்லாச் சொற்களுக்கும், எழுத்துக்களுக்கும் Frequencies என்று சொல்லப் படுகின்ற அதிர்வுகள் உண்டு. இந்த அதிர்வுகள் ஒலிச்சக்திகளாகும். இந்த அதிர்வுகளை எல்லா எழுத்துக்களும், சொற்களும் பெற்றிருந்தாலும், எந்தெந்த அதிர்வுகளோடு எந்தெந்த அதிர்வுகளைச் சேர்த்தால் அவை பயன்படும் என்பதை ஆராய்ந்து அவர்கள் அறிந்திருந்தார்கள். அப்படி அறிந்திருந்த காரணத்தினாலேதான், இந்தப் பல்வேறு எழுத்துக்களை ஒன்று சேர்ப்பதன்மூலம் பல்வேறு அதிர்வுகளை ஒன்று சேர்த்துப் புதியதொரு ஆற்றலை அவை பெறுமாறு செய்கின்றார்கள். அப்படி ஆற்றலைப் பெறுமாறு அவற்றைச் செய்துவிட்ட பிறகு அவை மந்திரங்களாக மாறிவிடுகின்றன.

பல சமயங்களில் அட்சரங்கள் என்று சொல்லப்படுகின்ற மந்திரங்களுக்குப் பொருளே இருப்பதில்லை. ஐம், ஹ்ரீம், க்லீம், பீஜ என்ற பீஜாட்சரங்கள் எவ்விதமான பொருளை யும் தருவதில்லை. பொருளில்லாமல் சொற்கள் உண்டா என்று சிந்திக்க வேண்டும். பொருளில்லாமலும் சொற்கள் இருக்கலாம். ஆனால் அவை குறைமொழி மாந்தர்களால் பேசப்படும்போது அர்த்தமற்ற ஒலிக்கூட்டங்களாக மாறி விடுகின்றன. ஆனால் நிறைமொழி மாந்தர், வேண்டுமென்றே குறிப்பிட்ட அதிர்வுகளை ஒன்று சேர்க்கவேண்டுமென்று நினைக்கும்பொழுது, அந்த அதிர்வுகளையுடைய எழுத்துக் களை ஒன்று சேர்க்கின்றார்கள். அப்படி ஒன்று சேர்த்த பிறகு, ஹ்ரீம் என்ற மந்திரத்தை உண்டாக்கிவிட்ட பிறகு, அது அன்னையின் பூரண சக்தியைப் பெற்ற மந்திரமாக இருக்கிறதே தவிர, அதற்குமேல் பொருள் ஒன்றும் அதற்குத் தேவையில்லை.

இந்த ஆற்றலைப் பெற்ற அந்த மந்திரங்களை ஓயாமல் திருப்பித் திருப்பிச் சொல்கின்றவர்கள், ஜபிக்கின்றவர்கள் இந்த ஆற்றலைத் தம்முள் பெற்று விடுகிறார்கள். ஆகவே பரம கருணையுடையவர்களாகிய நம் முன்னோர்கள், தம்முடைய பேராற்றலை இந்த ஒலிக்கூட்டங்களில் செலுத்தி, செல்லுமாறு ஆணையிட்டுப் பிறகு அவற்றை நமக்குத் தந்திருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மந்திரங்களைத் தொல்காப்பியனார் 'மறைமொழி' என்று சொல்லுகிறார். ஏன் மறைமொழி என்று சொல்ல வேண்டும்? சாதாரணமாகப் பார்க்கும்போது அவற்றிலுள்ள ஆற்றல் நமக்குத் தெரிவதேயில்லை. 'ஹ்ரீம்' என்ற சொல்லை யாரும் உச்சரிக்கலாம். ஆனால் அதன் உள்ளே இருக்கின்ற ஆற்றலை நாம் புரிந்து கொள்வதேயில்லை. ஆகையினால்தான் அது மறைமொழி. அப்படியானால், மறைமொழி என்றால் அதனைப் புரிந்து கொள்ளக்கூடிய தகுதியை நாம் பெறவேண்டும். புரிந்து கொள்ளக்கூடிய சக்தியைப் பெறவேண்டும். அப்பொழுது அந்த மந்திரங்கள் பேராற்றலைப் பெற்றவையாக நமக்குத் தெரியும். இப்படிப்பட்ட சொற்களை ஒன்று சேர்ப்பதன் மூலம் மந்திரங்களைக் காண்கிறார்கள். இப்படிக் கண்ட மந்திரங்களை அவர்கள் சொற்கோவைகளாக, அதிர்வுகளின் கோவைகளாக வெளிப்படுத்தி, எங்கே எங்கே எப்போது எப்போது தேவையோ, அங்கே அங்கே அவ்வப்போது பயன்படுத்திக் கொள்ளுமாறு நமக்கு வழங்கியிருக்கிறார்கள்."

## 20 திருமந்திரம் தோத்திரமா? சாத்திரமா?

மேற்படி விளக்கத்தின் அடிப்படையில் திருமந்திரத்தை ஆராய்ந்தால், அதனை ஒரு தோத்திர நூலாகவும் கொள்ளலாம், சாத்திர நூலாகவும் கொள்ளலாம். திருமந்திரத்தின் எந்தப் பகுதி சாத்திரப் பகுதி, எந்தப்பகுதி தோத்திரப்பகுதி என்பது நூலின் உள்ளே புகுந்து படிக்கும் போது புரியும்.

திருமந்திரத்தில் வேதக்கருத்துக்களும் உள்ளன, ஆகமக் கருத்துக்களும் உள்ளன. **வேதங்களும் ஆகமங்களும் இறைவனால் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் வழங்கப்பட்டன என்பது திருமூலரின் கருத்து.** வேதக் கருத்துக்களையும் ஆகமக்கருத்துக்களையும் நன்குணர்ந்த திருமூலர், திருமந்திரத்தில் சமரச சன்மார்க்கமே பேசுகின்றார். சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்திகள் வேதம் பொது என்றும், ஆகமம் சிறப்பென்றும் சொல்வார்கள். ஒன்றை விலக்கி மற்றொன்றை விளக்க முடியாது என்பது திருமூலர் கருத்து. இதனாற்றான் அவர் வேதத்தைச்சுட்டும் வண்ணம் நூற்பெயரை **"மந்திரம்"** என்றும் ஆகமங்களைச் சுட்டும் வண்ணம் உள்ளடக்கங்களைத் **தந்திரங்கள்** என்றும் குறித்தார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

## 21. சேக்கிழாரும் திருமூலரும்

சேக்கிழார் படைத்த **பெரிய புராணம்** எனப்படுகின்ற **திருத்தொண்டர் புராணம்** என்ற நூலிலே திருமூலர் ஒரு நாயனாராகக் குறிக்கப்பட்டிருக்கிறார். சேக்கிழாரின் பெரியபுராணம் 63 சிவனடியார்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்றது. அந்த நூலிலே திருமூலர் நாற்பதாவது நாயனாராக வரிசைப் படுத்தப்பட்டிருக்கின்றார். திருமூலரின் வரலாற்றைச் சேக்கிழார் 28 பாடல்களிலே விவரித்திருக்கிறார். திருக்கயிலையிலே பிறந்த முனிவர் ஒருவர் ஏன், எதற்காக, எப்படித் தமிழ் நாட்டிலுள்ள பொதியமலைக்கு வந்தார் என்ற செய்தி பெரியபுராணத்திலேதான் வரையப்பட்டிருக்கிறது. அப்படி வந்தவரின் பிறப்புப்பெயர் என்ன என்பதைப் பெரியபுராணம் கூறவில்லை என்பது மனம் கொள்ளத்தக்கது. **மூலன்** என்ற இடையன் ஆநிரை மேய்த்துக்கொண்டு இருக்கும்போது நிலத்தில் வீழ்ந்து இறந்தான் என்ற கதை பெரியபுராணம் தருகின்ற செய்தியே. இறந்த மூலனைக் கண்ட ஆவினங்கள் கதறியழ, அவற்றின் துன்பத்தை நீக்குவதற்காகக் கயிலை யிலிருந்து பொதிகைக்கு வந்த யோகியான ஒரு முனிவர் உயிர் நீங்கிய மூலனின் உடலுக்குள் புகுந்து திருமூலராக எழுந்து பசுக்களின் துயர் போக்கினார் என்பதும் பெரியபுராணச் செய்தியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. சுந்தரமூர்த்தி நாயனாரும் திருமூலரும்

தேவார முதலிகளில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் எட்டாம் நூற்றாண்டில் பிறந்தவர் என்று வரலாற்று அறிஞர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். திருமுறைகள் பன்னிரண்டில், ஏழாம் திருமுறையாக அமைந்தவை சுந்தரமூர்த்திநாயனாரின் தேவாரங்கள். ஏழாம் திருமுறையில் நூறு பதிகங்கள் உள்ளன. நூறு பதிகங்களில் 1025 பாடல்கள் அடங்கியுள்ளன. மூவரது தேவாரங்களின் எண்ணிக்கை 8250. இவற்றுள் 7225 ஆம் தேவாரம் தொடங்கி 8250 ஆம் தேவாரம் வரையுள்ள தேவாரங்கள் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியவை. 7617 ஆம் பாடல் தொடங்கி 7627 ஆம் தேவாரம் வரையுள்ள சுந்தரர் தேவாரங்களைத் **திருத்தொண்டத்தொகை** என்று அழைப்பர். 7621 ஆம் தேவாரம் திருமூலர் பற்றிக் குறிப்பிடுகின்றது. அந்தத் தேவாரம் பின்வருமாறு:

**"வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்**
**மதுமலர்ந்த கொன்றையான் அடியலாற் பேணா**
**எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்**
**ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்**
**நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்**
**நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கருக்கும் அடியேன்**
**அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்**
**ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே"**

சுந்தரரின் காலம் எட்டாம் நூற்றாண்டு. ஆகவே திருமூலர் எட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவராதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. நம்பியாண்டார் நம்பியும் திருமூலரும்

**திருத்தொண்டர் திருவந்தாதி** என்று ஒரு நூல் உண்டு. அதனை இயற்றியவர் **நம்பியாண்டார் நம்பி** என்பவர். சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய பதினொரு திருத்தொண்டத் தொகைப் பாடல்களை ஆதாரமாக வைத்தே நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடினார். இவர் பதினோராம் திருமுறையிலும் சில பாடல்களைப் பாடியிருக்கிறார். **எங்கோ பலகாலமாக மறைந்திருந்த தேவார ஏடுகளைக் கண்டுபிடித்தவர் இவர்தான் என்று சிலர் கூறுவர். பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் இந்தக் கதைகளை மறுத்துப் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.**

நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி அறுபத்து மூன்று நாயன்மார் பற்றியும் வேறு சில அடியார்கள் பற்றியும் விரிவாகக் கூறுகின்றது. நம்பியாண்டார் தமது திருவந்தாதியிலே 35 அடியார்களின் மரபைக் குறிக் கின்றார். ஆனால் **எறிபத்தர், குலச்சிறையார், திருமூலர், கணம்புல்லர், காரிநாயனார்** ஆகிய ஐவரின் மரபைக் குறிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் திருவந்தாதியை, அமரரும் என் நண்பருமான Rev Robin McGlashan என்ற ஆங்கிலேயர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

திருத்தொண்டர் திருவந்தாதியில் எண்பத்தொன்பது பாடல்கள் உள்ளன. இந்த அந்தாதியில் உள்ள 86ஆம் பாடல் திருமூலநாயனார் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது:

**'குழமன்னு சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்போன் குரம்பை புக்கு**
**முழமன்னு கூனற் பிறையான் தன்னை முழுத்தமிழின்**
**பழமன்னு வேதத்தின் சொற்படி யேபரவ விட்டேன் உச்சி**
**அழமன்ன வைத்த பிரான்மூலன் ஆகின்ற அங்கணனே'**

மேற்படி பாடலிலே **"மூலன்"** என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருக் கின்றது.

நம்பியாண்டாரின் காலம் என்ன என்பது தெரியவில்லை. சுந்தரமூர்த்திநாயனார் எட்டாம் நூற்றாண்டுக்கு உரியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதாலும், நம்பியாண்டார் நம்பியைப் பதினோராம் திருமுறையில் சேர்த்த சேக்கிழார் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதாலும், நம்பியாண்டார் நம்பியின் காலம் எட்டாம் நூற்றாண்டுக்கும் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமாக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு.

## 24. திருமுறைகளைத் தேடி எடுத்தவர் யார்?

இந்த இடத்தில் திருமுறைகள் பற்றிய ஒரு குறிப்பையும் முன்வைத்தல் பொருத்தம் என்று நினைக்கிறேன். மூவர் முதலிகள் பாடி அளித்த தேவாரங்கள் சுந்தரரின் காலத்துக்குப் பின்னர் எப்படியோ வழக்கிழந்தோ மறைந்தோ போயின என்றும், அதனைக் கண்டெடுத்துப் போற்றி மீண்டும் கோயில் களில் ஓதுமாறு ஏற்பாடு செய்தவன் **இராசராச சோழன்** என்றும் பலரால் நம்பப்படுகிறது. இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாக இருப்பது **திருமுறை கண்ட புராணம்** என்ற ஒரு புராணம். இந்தப் புராணத்தை இயற்றியவரின் பெயர் **உமாபதி சிவாசாரியார்** என்று சொல்லப்படுகின்றது. இந்தத் திருமுறை கண்ட புராணம்தான் இராசராச சோழனைத் **திருமுறை கண்ட சோழன்** என்று குறிப்பிடுகின்றது. இந்தப் புராணம் **கி.பி. பதினான்காம் நூற்றாண்டளவில்** இயற்றப்பட்டதாகச் சொல்லப் படுகின்றது. ஆனால் அதை உறுதியாகச் சொல்ல முடியவில்லை. அதை எழுதிய உமாபதி சிவாசாரியாரும், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களில் எட்டுச் சாத்திரங்களை எழுதிய உமாபதி சிவாசாரியாரும் ஒருவரே என்று **சிலர் நம்புகிறார்கள்; பலர் நம்ப மறுக்கிறார்கள்.** அவ்வாறு ஆதாரத்தோடு மறுக் கின்றவர்களில் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் முதன்மை வகிக்கின்றார். **மறக்கப்பட்டோ, மறைக்கப்பட்டோ மறைந்து போன தேவார திருவாசகங்களைக் கண்டெடுத்துக் கொண்டுவந்தவன் இராசராச சோழன்தான் என்று கூறுவது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாற்று உண்மைக்கு மாறானது என்றும், திருமுறை கண்ட புராணச் செய்தி வெறும் புரளி என்றும் அவர் கூறுகின்றார்.** அவரது கூற்றின் சாரத்தைக் கீழே காண்க:

1. "இராசராசனுக்கு நூற்றுச்சொச்சம் வருடங்களுக்கு முன்னாலேயே, அதாவது 750ஆம் ஆண்டளவில் **நந்திவர்மன்** என்பவன் ஒருகல்வெட்டைப் பொறித் திருக்கிறான். அதற்குத் **'திருவல்லம் கல்வெட்டு'** என்பது பெயர். அந்தக் கல்வெட்டு "தேவாரப் பதிகம் பாடுவார் உள்ளிட்ட" என்று தொடங்கி நாற்பது ஓதுவார்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தருகிறது.

2. முதலாம் ஆதித்தன் **"திருவெறும்பூர்க் கல்வெட்டு"** என்று வழங்கப்படும் கல்வெட்டு ஒன்றை 873 ஆம் ஆண்டளவில் பொறித்தான்.

3. முதலாம் பராந்தகன் 910 ஆம் ஆண்டில் ஒரு கல்வெட்டைப் பொறித்தான். இதன் பெயர் **"திருஆவடுதுறைக் கல்வெட்டு"**.

4. உத்தமசோழன் என்பவன் 977ஆம் ஆண்டில் ஒரு கல்வெட் டைப் பொறிப்பித்தான். இதன் பெயர் **'திருத்தவத்துறைக் கல்வெட்டு'**.

மேற்படி கல்வெட்டுக்கள் நான்கும் அவ்வக்காலங்களில் தேவாரம் பாடியவர்களின் பெயர்ப்பட்டியலைக் குறிப்பிடு கின்றன. அதாவது கி.பி. 750ஆம் ஆண்டு தொடங்கிக் கோயில்களில் தேவாரம் ஓதுகின்ற பழக்கமும் வழக்கமும் இருந்தன என்பதையே மேற்படி கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. அதாவது, இராசராசன் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே பல மன்னர்கள், தேவாரப்பதிகம் பாடுகின்றவர் களின் பட்டியலைக் காட்டுகின்ற கல்வெட்டுக்களைப் பொறித் திருக்கிறார்கள். அதாவது, தேவாரப்பதிகத்தைக் கோயிலில் ஓதுகின்ற மரபை இராசராசனுக்கு முன்னர் வாழ்ந்த மன்னர் பலர் ஏற்படுத்திப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். நிலைமை இவ்வாறாக, கி.பி. **985ஆம் ஆண்டளவில்** ஆட்சிக்குவந்த இராசராசன்தான் மறைந்தும், மறக்கப்பட்டுமிருந்த திருமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கண்டெடுத்துத் தேவாரப் பதிகங்களைப் பாடுகின்ற மரபை ஏற்படுத்தினானென்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? தேவாரம் பாடிய இவர்களுக்கு இவ்வளவு சிறப்புக் கொடுத்துக் கல்வெட்டில் பட்டயம் எழுதிய இராசராசன்தான் தேவாரத்தையே கண்டெடுத்திருப்பானேல், அந்தச் செய்தியைத் தன்னுடைய புகழ்பாடும் கல்வெட்டிலே பொறித்திருக்கமாட்டானா? சின்னச் சின்னச் சமாசாரங்களுக்கெல்லாம் கல்வெட்டுப் பொறிப்பிக் கின்றவன், திருமுறை கண்டெடுத்த செய்தியைத் தனது கல்வெட்டில் பொறிக்க மறந்திருப்பானா? இதை நாம் சிந்திக்கவேண்டும். அப்படியாயின் உமாபதி சிவாசாரியாரால் படைக்கப்பட்டதாக நம்பப்பட்டு வருகின்ற **'திருமுறை கண்ட புராணம்'** கூறுகின்ற செய்தி தவறா? என்று வாசகர்கள் கேட்கக்கூடும். தவறு என்று கூறினால் வாசகர்கள் முகம் சுழிக்கவுங்கூடும். என் தந்தையார் சரவணமுதலியார் பெரிய புராணத்தின் பிரதிகள் சேகரிப்பதில் சூரர். ஆறுமுகநாவலர் பதிப்பித்த பெரியபுராணத்திலே, திருமுறை கண்டபுராணம் என்று எழுதி, ஒரு நட்சத்திரக் குறிபோட்டு (*) அதன் அடியில், **"இதை இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை; உமாபதி சிவம்' என்று சிலர் கூறுவர்"** என்று இருக்கிறது. அந்தப் பெரிய புராணத்தின் அடுத்த பதிப்பு வரும்போது ஆறுமுகநாவலர் காலமாகிவிட்டார். இரண்டாம் பதிப்பு வந்தபோது, நாவலரின் நட்சத்திரக் குறியும் அவரது ஆசங்கைக்குறிப்பும் நீக்கப்பட்டு விட்டன. 'திருமுறைகண்ட புராணம்' என்ற தலைப்பின் கீழே 'உமாபதிசிவம்' என்றுபோட்டு அந்தப் பதிப்பு வெளிவந்தது. அதற்குப் பின்னர் வந்தவர்கள், அதிலே கண்ட **உமாபதி** என்ற பெயரை **உமாபதி சிவாசாரியார்** என்று நீட்டி, அவரும் மெய்கண்ட சாத்திர நூல் செய்த உமாபதிசிவாசாரியாரும் ஒருவரேயென்று கதையைக் கட்டிவிட்டார்கள். ஆகவே திருமுறைகண்ட புராணத்தை எழுதியவர் உமாபதி சிவாசாரியார் தானென்று கூறுவதற்கு நம்பகமான ஆதாரம் இல்லை" என்று எழுதியிருக்கிறார் பேரறிஞரும் பேராசிரியருமான அமரர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள். மேற்படி பேராசிரியரின் கருத்தைச் சிந்தித்துப் பார்த்தல் அறிஞர் கடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. அப்பரும் சம்பந்தரும் திருமூலரை மதிக்கவில்லையா?

சுந்தரர், நம்பியாண்டார்நம்பி, சேக்கிழார் ஆகிய மூவருமே திருமூலர் பற்றிய செய்தியை ஓரளவுக்கேனும் நமக்குத் தருகின்றார்கள். சுந்தரர் இவரைப்பற்றித் திருத்தொண்டத் தொகையில் எட்டாம் நூற்றாண்டளவில் குறிப்பிடுவதால், திருமூலர் எனப்பட்டவர் எட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பது தெளிவு.

ஆனால், ஐந்தாம் நூற்றாண்டுக்குரியவர் என்று கூறப் படுகின்ற இவரை, ஆறாம் ஏழாம் நூற்றாண்டினரான ஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் குறிப்பிடாமல்விட்டது ஏன்? காரணம் ஏதேனும் இருக்கக்கூடுமோ? சம்பந்தரும் அப்பரும் சமணத்தையும் பவுத்தத்தையும் எதிர்த்துச் சைவத்தை நிலைநாட்டவெனப் புறப்பட்டவர்கள். திருமூலருக்கு அத்தகைய சமயம் பரப்பும் பிரசாரநோக்கம் இருக்கவில்லை. **வேதத்தை ஏற்றுப் பதஞ்சலி யோகத்தைப் பற்றிக்கொண்டு, சமரச சன்மார்க்கப் பாங்கில் இறையநுபவத்துக்கு வழிகாட்ட முனைந்தவர் திருமூலர். சைவத்தை முன்னிறுத்தாமல் சக்தி வழிபாட்டையும் தந்திர வழி முறைகளையும் வற்புறுத்தியவர் திருமூலர்.** சிவன் என்ற கடவுளரை முன்னிறுத்தாமல் தத்துவத்தை மட்டும் வற்புறுத்தி யதால் சைவத்தை நிலைநாட்டக் கிளம்பிய சம்பந்தரும் அப்பரும் திருமூலரைப்பற்றித் தெரிந்திருந்தும் அவரைப்பற்றிக் குறிப்பிடாமல் விட்டிருக்கிறார்கள் என்றும் எண்ணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. திருமந்திரம் என்ற பெயர்க்காரணம்

'திருமந்திரம்' என்ற தொடர் முதன்முதலில் எந்த இலக்கியத்தில் வருகின்றது என்பது அடுத்ததாக ஆராயப்படவேண்டிய ஒன்று.

**திருமந்திரம்** என்ற சொல்லைச் சென்னைப் பேரகராதி என்று வழங்கப்படுகின்ற Madras Tamil Lexicon தருகின்றது. அந்தத் தொடருக்கு அது இரண்டு விளக்கங்கள் தருகின்றது. முதலாவது விளக்கம் 'Mystic formulae sacred to Siva and Vishnu. சிவன், திருமால் இவர்களுக்கான பஞ்சாட்சர, அட்டாட்சரங்கள்' என்பது; இரண்டாவது விளக்கம் 'A Treatise on Saiva Siddhanta Philosophy by Tirumula Nayanar; திருமூல நாயனார் அருளிச்செய்த ஒரு சைவத்திருமுறை' என்பது. இவற்றுக்குமேல் வேறெந்த விளக்கத்தையும் சென்னைப் பேரகராதி தரவில்லை.

சென்னைத் தமிழ்ப் பேரகராதியின் தாயென்று சொல்லப் படுகின்ற **உவின்சுலோவின்** அகராதியில் (Winslow's Dictionary) திருமந்திரம் என்ற சொல்லோ, திருமூலர் என்ற சொல்லோ காணப்படவில்லை. இது விந்தையாக உள்ளது.

திருமந்திரம் என்ற சொல்லைச் சுந்தரரும் கூறவில்லை; நம்பியாண்டார் நம்பியும் குறிப்பிடவில்லை. திருமூலரை அறுபத்துமூன்று நாயன்மர்களில் ஒருவராகத் திருநிலைப்படுத்தி அவருடைய வாழ்க்கை வரலாற்றை இருபத்தெட்டுப் பாடல்களில் விளக்கிய சேக்கிழார், திருமூலர் பற்றிய இருபத்தாறாம் பாடலில், **திருமந்திரமாலை** என்ற தொடரைப் பயன்படுத்து கின்றார். இருபத்தேழாம் பாடலில் **தமிழ் மூவாயிரம்** என்ற தொடரைப் பயன்படுத்துகின்றார். அந்த இரு பாடல்களையும் கீழே காண்க:

**ஊனுடம்பில் பிறவிவிடம் தீர்ந்து உலகத்தோர் உய்ய**
**ஞானமுதல் நான்குமலர் நற்றிரு மந்திர மாலை**
**பான்மை முறை ஓராண்டுக் கொன்றாகப் பரம் பொருளாம்**
**ஏனஎயி றணிந்தாரை "ஒன்றவன் தான்" என்றெடுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன்னிய அப்பொருள் மாலைத் தமிழ் மூவாயிரம் சாத்தி**
**மன்னிய மூவாயிரத் தாண்டிப் புவிமேல் மகிழ்ந்திருந்து**
**சென்னிமதி அணிந்தார் தம் திருவருளால் திருக்கயிலை**
**தன்னில் அணைந்து ஒருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்**

இவ்வாறாகத் திருமந்திரம் என்ற பெயரைச் சேக்கிழார்தான் முதன்முதலிற் குறிப்பிடுகின்றார். அவரும் **'திருமந்திரம்'** என்று குறிப்பிடாமல் **'திருமந்திரமாலை'** என்றே குறிப்பிடுகின்றார். **திருமந்திர மாலை** என்ற தொடர், காலப்போக்கில் சுருக்கம்பெற்று **'திருமந்திரம்'** என்று ஆயிற்று என்று கொள்ளலாம்.

திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார் என்ற செய்தியையும் சேக்கிழார்தான் தருகிறார். ஓராண்டுக்கு ஒரு பாட்டுத்தான் பாடினார் என்ற செய்தியையும் சேக்கிழார்தான் தருகிறார். திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார் என்ற செய்தியையும், அவர் ஆண்டொன்றுக்கு ஒரு பாடல்தான் பாடினார் என்ற செய்தியையும் நாம் அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். ஏனென்றால், திருத்தொண்டர் புராணம் ஒரு சமய இலக்கியம்; வரலாற்று நூல் அன்று.

திருமூலர் அருளிய திருமந்திரத்தின் முதலாவது பாடல் **ஒன்றவன்தான்** என்று தொடங்குவதாகச் சேக்கிழார் குறிப்பிடு கிறார். உண்மையிலும் திருமந்திர மாலையின் முதலாவது பாடல் **ஒன்றவன்தானே** என்றுதான் தொடங்குகின்றது. ஆகை யினால், சேக்கிழார் திருமந்திர மாலையைப் பார்த்தாரென்றும் படித்திருந்தாரென்றும் நம்பலாம். அந்த முதலாவது பாடல் முக்கியமான பாடல் என்பதால் அதனைக் கீழே கொடுத்திருக் கிறேன்:

**ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தானைந்து**
**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்**
**சென்றனன் தானிருந் தானுணர்ந்து எட்டே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. திருமந்திரமும் திருக்குறளும்

திருவள்ளுவர் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்கு உரியவர் என்பது அறிஞர் துணிபு. திருமூலர் தமது நூலில் திருவள்ளுவர் பற்றி எதையும் குறிப்பிடவில்லை. ஆனாலும் திருவள்ளுவரின் கருத்துக்கள் பலவற்றை உள்வாங்கித் தமது நூலில் உள்ளடக்கியிருக்கிறார் என்பது தெளிவு. திருவள்ளுவரின் குறள்களின் தலைப்புக்கள் பலவற்றைத் திருமூலர் கடன்வாங்கியிருக்கிறார் என்று எண்ணுவதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. பின்வரும் தலைப்புக்களைக் குறிப்பிடலாம்:-

| | | |
|---|---|---|
| 1. | யாக்கை நிலையாமை | (பாடல்கள் 143 - 167) |
| 2. | செல்வம் நிலையாமை | (168 - 176) |
| 3. | இளமை நிலையாமை | (177 - 186) |
| 4. | உயிர் நிலையாமை | (187 - 196) |
| 5. | கொல்லாமை | (197 & 198) |
| 6. | புலான்மறுத்தல் | (199 & 200) |
| 7. | பிறன்மனை நயவாமை | (201 - 203) |
| 8. | மகளிர் இழிவு | (204 - 208) |
| 9. | நல்குரவு | (209 - 213) |
| 10. | அரசாட்சி முறை | (238 - 247) |
| 11. | வானச்சிறப்பு | (248 & 249) |
| 12. | அறம் செய்வான் திறம் | (251 - 259) |
| 13. | அறம் செய்யான் திறம் | (260 - 269) |
| 14. | அன்புடைமை | (270 - 279) |
| 15. | கல்வி | (290 - 299) |
| 16. | கேள்வி | (300 - 309) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. கல்லாமை (310 - 319)

18. நடுவுநிலைமை (320 - 323)

19. கள்ளுண்ணாமை (324 - 336)

மேற்படி பத்தொன்பது தலைப்புக்களும் திருமந்திரத்தின் முதலாம் தந்திரத்தில் காணப்படுகின்ற தலைப்புக்கள். தலைப்புக்களைப் பார்க்கும்போது அவை திருக்குறளைப் பின்பற்றி அமைந்த தலைப்புக்கள் என்பது புலனாகும். வள்ளுவர் சொன்னவற்றைத்தான் திருமூலரும் சொல்லியிருக்கிறார். ஆனால் மூலர் சொல்லியிருக்கின்ற முறை சற்று வேறானது. மூலர் கையாண்ட யாப்பு நாலடிகள் கொண்ட **கலிவிருத்தம்** என்ற யாப்பாக இருப்பதால், மூலர் தாம் சொல்ல வந்தவற்றைச் சற்று விரிவாகவே சொல்லியிருக்கிறார் என்று கொள்ளலாம்.

திருமந்திரத்தின் ஆறாம் தந்திரத்திலும் திருக்குறளின் வாடை சற்றே வீசுவதாகக் கருதலாம். பின்வரும் தலைப்புக்கள் மேற்படி வாடையை வெளிக்காட்டுகின்றன:

1. துறவு (1614 - 1623)
2. தவம் (1624 - 1632)
3. அவவேடம் (1655 - 1660)
4. தவவேடம் (1661 - 1667)

திருமந்திரத்தின் எட்டாம் தந்திரத்தில் வருகின்ற இரண்டு தலைப்புக்களை நோக்கும்போதும் திருமூலர், திருவள்ளுவரை அடியொற்றிச் செல்கிறார் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது. அந்தத் தலைப்புக்களும் பாடல் எண்களும் பின்வருமாறு:

1. அவா அறுத்தல் (2613 - 2622)
2. ஊழ் (2847 - 2852)

அவா அறுத்தல் என்ற தலைப்பில் வருகின்ற முதலாம் பாடலும் இரண்டாம் பாடலும் பிறப்பறுக்க வழி சொல்லுகின்ற யதார்த்தமான பாடல்கள் என்பதால் அவற்றைக் கீழே தருவது பொருத்தமென நினைக்கிறேன்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசியும் மூசியும் பேசி வகையினால்**
**பேசி இருந்து பிதற்றிப் பயனில்லை**
**ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்**
**ஈசன் இருந்த இடம் எளிதாமே (2613)**

**மாடத்து உளான்அலன் மண்டபத்தான் அலன்**
**கூடத்துள் உளான்அலன் கோயிலுள் உளான்அலன்**
**வேடத்துள் உளான் அலன் வேட்கை விட்டார் நெஞ்சில்**
**மூடத்துளே நின்று முத்தி தந்தானே (2614)**

திருவள்ளுவரின் திருக்குறள் சமயச்சார்புள்ள நூலன்றாயினும், திருக்குறளின் பாயிரப் பகுதியில் வருகின்ற **நீத்தார் பெருமை** என்ற அதிகாரமும் அறத்துப்பாலில் வருகின்ற **மெய் உணர்தல்** என்ற அதிகாரமும் அதனை அடுத்துவருகின்ற **அவா அறுத்தல்** என்ற அதிகாரமும் இறையியல் பேசுகின்ற, வீடுபேறு பேசுகின்ற அதிகாரங்கள் என்று கூறத்தக்கன.

## 28. திருமந்திரம் மூலநூலா? மொழிபெயர்ப்பு நூலா?

திருமந்திரம் கூறுகின்ற செய்தி ஆகமப்பொருள் என்று கொள்ள வேண்டியுள்ளது. அகச்சான்றுகளைப் பார்க்கின்றபோது அப்படித்தான் எண்ணவேண்டியிருக்கிறது. திருமந்திரத்தின் 73ஆம் பாடல் பின்வருமாறு:

**நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு**
**புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்து**
**அந்தி மதிபுனை அரனடி நாள்தொறும்**
**சிந்தைசெய்து ஆகமம் செப்பலுற் றேனே**

மேற்படி பாடலைப் பார்க்கின்றபோது, திருமந்திரத்தின்மூலம் திருமூலர் செப்பியது ஆகமப்பொருள்தான் என்பது தெளிவாகின்றது. ஆகமம் என்ற சொல்லுக்குப் பலர் பல்வேறு விளக்கங்களைத் தருவார்கள். **ஆ** என்பது இன்னது என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க** என்பது இன்னது என்றும் **ம** என்றால் இன்னது என்றும் கூறி, வெவ்வேறு விளக்கங்கள் தருவார்கள். எனினும் ஆகமம் என்றால் இறைவன் நூல் என்று பொருள்கொள்வதே ஏற்புடைத்து என்று இன்றைய அறிஞர்கள் கூறுகின்றார்கள். **ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க** என்று மணிவாசகர் சிவபுராணத்திலே பாடுகிறார். சிவவழிபாட்டைக் கூறுவது சிவாகமம்; விட்டுணு வழிபாட்டைக் கூறுவது வைணவாகமம்; சக்தி வழிபாட்டைக் கூறுவது சாக்தாகமம்.

ஆகமங்களைக் குறிப்பிடுகின்ற மிகப் பழைமையான நூல் சாத்தனாரின் **மணிமேகலை** என்ற பவுத்த காப்பியந்தான். இருப்பினும் ஆகமங்களைப்பற்றிய மிகத் தெளிவான விளக்கத்தை முதலில் கூறுகின்றவர் திருமூலர்தான். திருமந்திரத்தின் பொதுப்பாயிரத்தில் வருகின்ற ஒரு பகுதிக்கு **"ஆகமச்சிறப்பு"** என்பது பெயர். அதிலே வருகின்ற பத்துப் பாடல்கள் ஆகமத்தைப்பற்றிப் பறைகின்றன. அதில் வரும் 58ஆம் பாடல் பின்வருமாறு:

> **அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்**
> **எண்ணில் இருபத்தெண் கோடி நூறாயிரம்**
> **விண்ணவர் ஈசர் விழுப்பம் உரைத்தனர்**
> **எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே**

"சிவன் அருளிய ஆகமங்களை ஏற்றிப் போற்றி விளக்கம் அளித்தவர்கள் விண்ணவர் முதலான மிகமிகப் பலர். அவர்கள் வழிநின்று நானும் ஆகமப்பொருளைப் பாடிப் பரவுவேன்" என்பது பாடலின் பொருள்.

சிவன் அருளிய மேற்படி ஆகமத்தை விண்ணில் உள்ள அமரர்களும் விளங்கிக்கொள்வது அரிது. எழுபதுகோடி நூறாயிரம் விண்ணவர்கள் இந்த ஆகமத்தை விளங்கிக்கொள்ள முயன்றார்கள். அவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்களுடைய முயற்சிகள் எல்லாம் வீணாயின. நீர்மேல் எழுத்துப்போல் ஆயின என்று திருமூலர் தமது அறுபதாம் பாடலில் குறிப்பிடுகின்றார். இதோ அந்தப் பாடல்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அண்ணல் அருளால் அருளியதிவ் வாகமம்**
**விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரிது**
**எண்ணில் எழுபது கோடிநூ றாயிரம்**
**எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே**

சிவாகமத்தை விண்ணவர்களே விளங்கிக்கொள்ள முயன்றும் இயலாதுபோனார்கள் என்று திருமூலரே சொல்கிறார். அப்படியான சிவ ஆகமங்களின் பிழிவான திருமந்திரத்தைச் சாதாரணர்கள் ஆகிய நாங்கள் விளங்கிக்கொள்வதும் இயலாதுதான் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

சிவன் அருளிய ஆகமங்களின் எண்ணிக்கையைக் கூறவந்த திருமூலர், அவை இருபத்தெட்டு என்று கூறுகிறார். அந்தக் கூற்றைக்கொண்ட ஐம்பத்தேழாம் பாடல் பின்வருமாறு:

**அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்**
**அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்**
**அஞ்சலி கூப்பி அறுபத்து அறுவரும்**
**அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே**

மேற்படி இருபத்தெட்டு ஆகமங்களுள் திருமூலர் ஒன்பது ஆகமங்களின் பெயர்களையே குறிப்பிடுகின்றார்.

திருமூலரின் திருமந்திரத்தின் 62ஆம் பாடல், சிவனிடமிருந்து சக்தியும், சக்தியிடமிருந்து சதாசிவமும், சதாசிவத்திடமிருந்து மகாதேவனும், மகாதேவனிடமிருந்து உருத்திரன் முதலான தேவர்களும் திருமாலும், பிரமதேவனும் பெற்ற ஆகமங்களின் எண்ணிக்கை ஒன்பது மட்டுமே என்று கூறுகின்றது. இந்தப் பாடல் பின்வருமாறு:

**சிவமாம் பரத்தினில் சக்தி சதாசிவம்**
**உவமா மகேசர் உருத்திர தேவர்**
**தவமால் பிரமீசர் தம்மில் தாம்பெற்ற**
**நவஆகமம் எங்கள் நந்திபெற் றானே**

நந்தி பெற்ற இந்த ஒன்பது ஆகமங்கள் என்ன என்பதை 63ஆம் பாடல் பட்டியலிட்டுக் காட்டுகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்**
**உற்றநல் வீரம் உயர்சித்தம் வாதுளம்**
**மற்றுஅவ் வியாமனம் ஆகும் காலோத்தரம்**
**துற்றநல் சுப்பிரம் சொல்லும் மகுடமே**

அந்த ஆகமங்கள் பின்வருமாறு:

**1. காரணஆகமம், 2. காமிக ஆகமம், 3. வீரஆகமம், 4. சிந்தாகமம், 5. வாதுளம் ஆகமம், 6. வியாமனம் ஆகமம், 7. காலோத்தரம் ஆகமம், 8. சுப்பிரம் ஆகமம், 9. மகுடம் ஆகமம்** என்பன.

ஆகவே திருமூலர் இருபத்தெட்டுச் சிவாகமங்களுள் 9 ஆகமங்களையே தமது நூலுக்குத் தேவையான ஆகமங்களாகத் தேர்ந்தெடுத்தார் என்று எண்ணத்தோன்றுகின்றது. திருமூலர் தமது திருமந்திர மாலையை ஒன்பது தந்திரங்களாகப் பிரித்ததும் அதனால்தான்போலும்! ஒன்பது தந்திரங்களும் இந்த ஒன்பது ஆகமங்களின் அடிப்படையில் மட்டுமா அமைந்திருக்கின்றன என்பதும் ஆராயப்படவேண்டிய ஒன்று. அதாவது, திருமந்திரத்தில் இருபத்தெட்டு ஆகமங்களின் உட்பொருளும் அடங்கியிருக்கக் கூடாதா என்பதும் ஆராயப்படவேண்டிய ஒன்று.

இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது, திருமூலரின் திருமந்திரம் மொழிபெயர்ப்பு நூல்தான் என்பது தெளிவாகின்றது. 81ஆம் பாடல் மேற்படி எண்ணத்தை அரண் செய்கின்றது:

**பின்னை நின்று என்னே பிறவிபெறுவது**
**முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்**
**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. திருமந்திரத்தில் எத்தனை பாடல்கள் உள்ளன?

திருமூலரின் வாக்குப்படி **திருமந்திரமாலை** என்ற நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது என்றும், அவை ஆண்டுக்கொன்றாக மூவாயிரம் ஆண்டுகளில் பாடப்பட்டனவாகக் கொள்ளப்படுகின்றன என்றும், அவை ஒன்பது தந்திரங்களாகப் (பெரும்பிரிவுகளாகப்) பிரிக்கப்பட்டுள்ளன என்றும், அவற்றின் உள்ளடக்கம் ஒன்பது ஆகமங்களின் சாரமாக இல்லாமல் இருபத்தெட்டு ஆகமங்களின் சாரமாக இருக்கவுங்கூடும் என்றும் மேலே கருத்து உரைத்தோம்.

திருமந்திரத்தில் மூவாயிரம் பாடல்கள்தான் இருந்தன என்பதற்கு அகச் சான்றுகள் இருந்தாலும் இப்போது வெளி வருகின்ற திருமந்திரப் பதிப்புக்களில், பதிப்புக்குப் பதிப்பு இந்த எண்ணிக்கை வேறுபடுகின்றது. **திரு வி. கல்யாணசுந்தர முதலியார்** பதிப்பித்த பதிப்பில் **3047** பாடல்கள் காணப்படுகின்றன. அதற்குப் பின்னர் வந்த அவருடைய பதிப்பில் **3069** பாடல்கள் காணப்படுகின்றன. **திருப்பனந்தாள் மடத்தினர்** பதிப்பித்த பதிப்பில் 3108 பாடல்கள் காணப்படுகின்றன. **சைவசித்தாந்தக் கழகப் பதிப்பிலும், சிதம்பரனார் பதிப்பிலும் 3000** பாடல்கள் மட்டும் காணப்படுகின்றன. எண்ணிக்கையில் இந்த வேறுபாடுகள் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதில் தெளிவான விளக்கம் எதுவுமில்லை. காலப்போக்கில் ஏற்பட்ட இடைச்செருகல்கள் (Interpolations) இந்த வேறுபாடுகளுக்குக் காரணம் ஆகலா மென்று சொல்லிக்கொள்கிறார்கள்.

இடையிலே செருகப்பட்ட பாடல்கள் எவை எவை என்பதை யிட்டும் தெளிவான விளக்கம் இல்லை. ஏறத்தாழ நாற்பத்துமூன்று பாடல்கள் திருமந்திர நூலிலே இரட்டித்து இடம்பெற்றிருக்கின்றன.

இப்போதுள்ள பதிப்புக்களில் **ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை** என்று தொடங்குகின்ற பாடல் முதலாவது பாடலாக உள்ளது. விநாயகர் வணக்கமாக அமைந்த இந்தப் பாடல் இடைச்செருகல் என்றே அறிஞர்கள் பலரும் கருதுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரம் என்ற நூல் (1) சிறப்புப்பாயிரம், (2) பொதுப் பாயிரம், (3) தற்சிறப்புப் பாயிரம் என மூன்று பாயிரங்களையும் ஒன்பது தந்திரங்களையும் கொண்டதாய் உள்ளது. மூவாயிரம் பாடல்கள் பாடினார் என்பதற்கு அகச்சான்றும் புறச்சான்றும் உள்ளன. ஆனால் அந்த மூவாயிரம் பாடல்களையும் அவர் ஒன்பது தந்திரங்களாக வகுத்து எழுதினார் என்பதற்கு அகச் சான்றோ புறச்சான்றோ கிடையாது என்பதை மனங்கொளல் வேண்டும். திருமந்திரத்தைத் தொகுத்தவர்கள் திருமந்திரப் பாடல்களை ஏதோ ஒன்றன் அடிப்படையில் ஒன்பது தந்திரங் களாக வகுத்தார்கள் என்று நம்ப இடமுண்டு.

## 30. திருமந்திரம் என்பதா? திருமந்திரமாலை என்பதா?

இன்று நாம் திருமந்திரமென்று அழைக்கின்ற நூல் தொடக்க காலங்களில் திருமந்திரமாலை என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். பெரியபுராணம் என்ற திருத்தொண்டர் புராணத்தை இயற்றிய சேக்கிழார் **"ஞானமுதல் நான்குமலர் நற்றிரு மந்திர மாலை"** என்றே குறிக்கின்றார். திருமந்திரத்தின் எண்பத்தாறாம் பாடலில் திருமூலர் **"மந்திரமாலை"** என்றே குறிக்கின்றார். அந்தப் பாடலைக் கீழே காண்க:

**பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்**
**சிறப்பொடு வானவர் சென்று கைகூப்பி**
**மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை**
**உறைப்பொடு கூடிநின் றோதலு மாமே**

மேற்படி சான்றுகளை வைத்துப் பார்க்கின்றபோது, இந் நூல் அந்நாளில் திருமந்திரமாலை என்றே அழைக்கப்பட்டது என்பது தெளிவு.

தொடக்கத்தில் திருமந்திரத்திலிருந்த மூவாயிரம் பாடல்களும் அந்தாதிப் பாடல்களாகவே இருந்திருக்கவேண்டும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் நம்புகிறார்கள். **"திருமந்திரமாலை"** என்று அது அழைக்கப் பட்டதற்கு அதுதான் காரணமென்று அவர்கள் நம்புகிறார்கள். இன்றுள்ள நிலையில், **மூவாயிரம் திருமந்திரப் பாடல்களில் 716 பாடல்கள் மட்டுமே அந்தாதிப் பாடல்களாக அமைந்திருக்கின்றன.** அந்தாதி அமைப்புக் கெட்டுப்போனதற்கு இடைச்செருகல்களே காரணம். எல்லா இலக்கியங்களிலும் போல, திருமந்திரத்திலும் இடைச்செருகல்கள் பெருவாரியாக நுழைந்திருப்பதாகத் திருமந்திரம் வல்லார் சொல்லுகின்றார்கள். இந்த இடைச் செருகல்கள் காரணமாகவே திருமந்திரமாலையின் அந்தாதி அமைப்புச் சீர்குலைந்து இருப்பதாகவும் அவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். திருமூலரின் காலமாகிய ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பொருந்தாத சொற்கள் சில இன்றைய திருமந்திர நூலில் இருப்பதற்கு இந்த இடைச் செருகல்களே காரணமென்கிறார்கள். பின்வரும் சொற்கள் சான்றாக உள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | ஆயிட்டு | 2017 |
| 2. | அதுக்கென்று | 2950 |
| 3. | சுட்டிட்டு | 145 |
| 4. | செத்திட்டு | 121 |
| 5. | அப்புறம் | 55 |
| 6. | கிரீம் | 1344 |
| 7. | ரூபம் | 1305 |
| 8. | சடகோணம் | 1311 |
| 9. | ரீங்காரம் | 1314 |
| 10. | பன்னிரெண்டு | 579 |
| 11. | யாசுவாகா | 1317 |
| 12. | அர்ச்சனை | 1369 |
| 13. | அதாயிடும் | 1330 |
| 14. | அறுத்திட்டு | 1383 |
| 15. | போயிடும் | 1413 |
| 16. | அடைத்திட்டு | 1812 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. புணர்ந்திட்டு *1812*
18. துடக்கு *121*
19. முடிந்திட்டு *673*
20. மடிந்திட்டு *2876*
21. அழுதிட்டு *145*

மேற்படி சொற்கள் மட்டுமல்ல, அவற்றைக் கொண்டிருக்கின்ற பாடல்களும் இடைச் செருகல்களாக இருக்கக்கூடுமோ என்று எண்ணவேண்டியுள்ளது.

910; 1311; 1312; 1313; 1314; 1320; 1329; 1349; 1354; 1355; 1359; 1384 ஆகிய பாடல்களில் கிரந்த எழுத்துக்கள் பல உள்ளன. "சந்தோஷம்" என்பதைச் "சந்தோடம்" (557) என்றும் "பீஜ" என்பதைப் "பீசம்" (105) என்றும் "ரேகை" என்பதை "இரேகை" (920) என்றும் வடசொற்கிளவி வடஎழுத்து ஒருவி எழுதிய திருமூலர், மேற்குறித்த பாடல்களில் கிரந்த எழுத்துக்களைச் சேர்த்திருப்பாரா என்பதும் ஆராயப்படவேண்டியதே.

சிவஆகமங்கள் பொதுவாக, தந்திரம், மந்திரம், உபதேசம் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும். இந்த மூன்றையும் முறையே (1) கருமகாண்டம், (2) உபாசனாகாண்டம், (3) ஞானகாண்டம் என்றும் சொல்வார்கள்.

அ) இவற்றுள் தந்திரகலை என்ற கருமகாண்டம் நாள்தோறும் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியது.

ஆ) மந்திரகலை என்ற உபாசனாகாண்டம், கருமகாண்டத்தில் விதிக்கப்பட்டிருக்கின்ற கடமைகளை மேற்கொண்டு, மனம் முதலியவற்றை அடக்கித் தெய்வவழிபாடு செய்வதைப் பற்றியது.

இ) உபதேசகலையென்ற ஞானகாண்டம் இறைவனது இயல்பு களையும், உயிர்களின் இயல்புகளையும், பாசம் முதலிய வற்றின் இயல்புகளையும் கூறுவது. இந்த உபதேசக் கலைபற்றி அருள் நந்தி சிவாசாரியார் தமது **சிவஞான சித்தியாரில்** குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தந்திரம், மந்திரம், உபதேசம் என்ற மூன்றில், நடுவிலே நிற்கின்ற மந்திரம் என்பது அதற்குமுன்னேயுள்ள தந்திரத்தோடும் அதற்குப் பின்னேயுள்ள உபதேசத்தோடும் பின்னிப் பிணைந்து தொடர்புகொண்டதாக விளங்குவதால், திருமந்திரத்துக்குத் திருமூலர் "திருமந்திரமாலை" என்று பெயரிட்டார் என்று கூறுவதும் பொருத்தம்போலத் தெரிகிறது.

## 31. திருமந்திரமும் மெய்கண்டசாத்திரங்களும்

மெய்கண்டசாத்திரங்கள் பதினான்கு என்பதும் அவற்றை இயற்றியோர் **சந்தானகுரவர்** எனப்படுகின்ற நால்வர் என்பதும் வாசகர்களுக்குத் தெரியும். தேவார திருவாசகங்களை அருளிய திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்கின்ற நால்வரைச் **சமயகுரவர்கள்** என்று அழைக்கின்றோம். மெய்கண்டசாத்திரங்களைப் படைத்தருளிய மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியார் என்ற நால்வரையும் **சந்தானகுரவர்** என்று போற்றுகிறோம். சந்தானகுரவர் நால்வரும் திருமூலருக்கும், சமயகுரவருக்கும் நன்றிக்கடன்பட்டவர்கள். தேவார, திருவாசகங்கள் ஆகிய தோத்திரப்பாடல்களும் திருமூலநாயனார் இயற்றிய தோத்திரசாத்திர நூலாகிய திருமந்திரமும்தான் மெய்கண்டசாத்திரங்களுக்கு அடித்தளமாயும், ஆதாரநூல் களாயும் அமைந்தன என்றால் அது மிகையன்று. **ஆயினும் சந்தான குரவர்களில் ஒருவர்தானும் தமது நன்றி உணர்வினைத் தமது படைப்புக்களில் வெளிப்படுத்தவில்லை. ஏனென்று புரிய வில்லை.** மூவர் முதலிகள் படைத்தருளிய தேவாரப்பாடல்களின் எண்ணிக்கை எண்ணாயிரத்து இருநூற்றைம்பது (8250). மணிவாசகர் பாடியருளிய திருவாசகப் பதிகங்களின் எண்ணிக்கை ஐம்பத்தொன்று; திருவாசகப்பாடல்களின் எண்ணிக்கை அறுநூற்று ஐம்பத்தெட்டு (658).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலருக்கு முன்னர் வாழ்ந்தவர் என்று அறியப்பட்ட **காரைக்கால் அம்மையார்** அருளிய **கோயில்மூத்த திருப்பதிகங்கள் இரண்டும், திருவிரட்டைமணிமாலையும், அற்புதத்திருவந்தாதியும்** சைவ சித்தாந்தத்தைப் புரிந்துகொள்ள உதவுகின்ற திருவருட் பனுவல்கள். மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் உருப் பெறுவதற்கு அம்மையாரின் பதிகங்களும் உதவின என்றால் மிகையாகாது.

## 32. மெய்கண்டசாத்திரச் சொல்லாட்சியும் திருமந்திரச் சொல்லாட்சியும்

திருமந்திரமென்ற அருள் நூல், தோத்திரமும் சாத்திரமும் கலந்த நூலென்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். மெய்கண்டசாத்திரங்கள் பதினான்கும் முழுக்க முழுக்கச் சைவசித்தாந்தத்தை விளக்குகின்ற நூல்கள் என்றும் முன்னர்க் குறித்திருக்கிறோம். திருமந்திரம் **திருவருட்பால்** என்றால், மெய்கண்டசாத்திரங்கள் அந்தத் திருவருட் பாலிலிருந்து பெறப்பட்ட **திருவருள் நெய்**. தேவார, திருவாசக, திருமந்திரப் பால்களிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட நெய்தான் மெய்கண்ட சாத்திரங்கள். மெய்கண்டசாத்திரமென்ற தத்துவத்தைப் பயில்கின்றவர்கள், அந்தத் தத்துவங்களை முழுதாக விளங்கிக் கொள்வதற்குத் தேவார, திருவாசகக் கடல்களுக்குள் சுழியோட வேண்டும். குறிப்பாகத் திருமந்திரம் என்ற வேதாகமக் கடலுக்குள் நீச்சலிடவேண்டும். இதை இன்னொரு விதமாகச் சொன்னால், திருமந்திரத்தைப் படித்துச் சுவைக்க விரும்பு கின்றவர்கள், சைவசித்தாந்தத்தின் அடிப்படைக்கோட்பாடுகளைத் தெரிந்திருக்கவும் புரிந்திருக்கவும் வேண்டும். அதாவது சைவசித்தாந்தம் கூறுகின்ற முப்பொருள்கள் பற்றியும் அவற்றின் இயல்புகள் பற்றியும் முன்கூட்டியே ஓரளவேனும் அறிந்திருத்தல் வேண்டும். ஆனால் சைவசித்தாந்த நூல்கள் பதினான்கையும் முழுமையாக அறிந்திருக்கவேண்டும் என்பதில்லை. ஏதேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றினையாகுதல் சிறிதளவுக்கேனும் புரிந்திருந்தாற் போதும். உமாபதிசிவாசாரியார் அருளிய **திருவருட்பயன்** என்ற நூலைப் படித்துத் தெரிந்துகொண்டாலே போதும். திருவருட் பயனிலே நூறே நூறு குறள்கள் மட்டுமே உள்ளன. அவை பத்து அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரங்கள் பின்வரும் அடிப்படை விடயங்களை அழகாக விளக்குகின்றன:

1) இறைவனது இயல்பு

2) உயிர்களின் தன்மை

3) ஆணவமலத்தின் இயல்பு

4) திருவருளின் தன்மை

5) ஞானவடிவாகிய குருவின் தன்மை

6) குருவிடமிருந்து உண்மைப் பொருளை உணரும் முறைமை

7) ஆன்மா சுத்தியடைதல்

8) பேரானந்தத்தை அடையும் முறைமை

9) ஐந்தெழுத்தின் அருள்நிலை

10) சீவன்முத்தர் நிலைமை

மேற்கண்ட நூறு சூத்திரக்குறள்களையும் கற்றுக்கொண்டால், சைவசித்தாந்தத்தின் அடிப்படையை ஓரளவுக்குப் புரிந்து கொள்ளலாம். அதன்பின்னர், **சிவஞானசித்தியார்** என்ற நூலைப் படித்து முழுமையான சைவசித்தாந்த அறிவைப் பெற்றுக் கொள்ளலாம்.

மெய்கண்டசாத்திரத்தில் வருகின்ற பாடல்களிலும் சூத்திரங் களிலும் வருகின்ற பல சொற்களும் சொற்றொடர்களும் திருமூலரிடமிருந்து கடன் வாங்கியவையே. இஃதொன்றிலிருந்தே சந்தானகுரவர்கள் நால்வரும் திருமூலருக்குக் கடன்பட்டவர்கள் என்பது புலனாகும்.

சைவசித்தாந்தம் பற்றிய ஏனைய பிற்கால நூல்களில் பயன்படுத்தப்படுகின்ற கலைச்சொற்களும் சொல்லாட்சிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட சொற்களாகவே தோன்று கின்றன. திருமந்திரத்தைக் கற்கப் புகுகின்றவர்கள் மெய்கண்ட சாத்திரங்களில் பயிலப்பட்டிருக்கின்ற சொற்களையும் சொற் றொடர்களையும் முன்கூட்டியே புரிந்திருப்பது பயன்தரும்.

## 33. திருமந்திரப் பாடல்கள் - ஒரு பறவைப் பார்வை

### பாயிரப்பகுதி

பாயிரம் நீங்கலாகத் திருமந்திரம் ஒன்பது பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்றும், அந்தப் பெரும்பகுதிகள் ஒவ்வொன்றையும் தந்திரம் என்று கூறுவர் என்றும், ஏற்கெனவே கூறியிருக்கிறோம். இப்போது அவற்றின் உட்பிரிவுகளையும் எண்ணிக்கையையும் மேலோட்டமாகப் பார்ப்போம்.:

**(அ) பாயிரம்**

பாயிரம் என்ற பகுதியிலே நூற்றுப்பன்னிரண்டு (112) பாடல்கள் உள்ளன. அத்துடன் பாயிரப் பகுதி கீழே கண்டவாறு பத்துச் சிறிய உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

i. கடவுள் வாழ்த்து
ii. சிறப்புப் பாயிரம்
iii. வேதச் சிறப்பு
iv. ஆகமச் சிறப்பு
v. குரு பாரம்பரியம்
vi. திருமூலர் வரலாறு
vii. அவையடக்கம்
viii. திருமந்திரத் தொகைச் சிறப்பு
ix. குருமடவரலாறு
x. மும்மூர்த்திகள் முறைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) முதலாம் தந்திரம்

முதலாம் தந்திரம் இருபத்துநான்கு உட்பிரிவுகளைக் கொண்டிருக் கின்றது. அவற்றின் பெயர்கள் பின்வருமாறு:

i. உபதேசம்
ii. யாக்கை நிலையாமை
iii. செல்வம் நிலையாமை
iv. இளமை நிலையாமை
v. உயிர் நிலையாமை (உடல் நிலையாமை)
vi. கொல்லாமை
vii. புலால் மறுத்தல்
viii. பிறன்மனை நயவாமை
ix. இழிந்த மகளிர்
x. நல்குரவு
xi. வேள்வியின் விளக்கம்
xii. அந்தணர் ஒழுக்கம்
xiii. அரசாட்சி முறை
xiv. வானச்சிறப்பு
xv. தானச்சிறப்பு
xvi. அறம் செய்வான் திறம்
xvii. அறம் செய்யான் திறம்
xviii. அன்புடைமை
xix. அன்பு செய்வாரைச் சிவன் அறிவான்
xx. கல்வி
xxi. கேள்விகேட்டு அமைதல்
xxii. கல்லாமை
xxiii. நடுவு நிலைமை
xxiv. கள்ளுண்ணாமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) இரண்டாம் தந்திரம்

இரண்டாம் தந்திரம் இருபத்தைந்து உட்பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அந்த உட்பிரிவுகளின் பெயர்கள் பின்வருமாறு:

i. அகத்தியம்
ii. எட்டு வீரட்டம்
iii. இலிங்கபுராணம்
iv. தக்கன் வேள்வி
v. பிரளயம்
vi. சக்கரஆயுதம்
vii. எலும்பும் கபாலமும்
viii. அடிமுடி தேடல்
ix. படைத்தல்
x. காத்தல்
xi. அழித்தல்
xii. மறைத்தல்
xiii. அருளல்
xiv. கரு உற்பத்தி
xv. மூன்றுவகைச் சீவவர்க்கம்
xvi. பாத்திரம்
xvii. அபாத்திரம்
xviii. தீர்த்தம்
xix. திருக்கோயில் போற்றல்
xx. அதோமுக தரிசனம்
xxi. சிவநிந்தை
xxii. குருநிந்தை
xxiii. மகேசுவர நிந்தை
xxiv. பொறையுடைமை
xxv. பெரியாரைத் துணைக்கோடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) மூன்றாம் தந்திரம்

மூன்றாம் தந்திரம் இருபத்தொரு உட்பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. அவையாவன:

i. அட்டாங்கயோகம்
ii. இயமம்
iii. நியமம்
iv. ஆதனம் என்ற ஆசனம்
v. பிராணாயாமம்
vi. பிரத்தியாகாரம்
vii. தாரணை
viii. தியானம்
ix. சமாதி
x. அட்டாங்க யோகப்பேறு
xi. அட்டமாசித்தி
xii. கலைநிலை
xiii. காயசித்தி உபாயம் (சரீர சித்திஉபாயம்)
xiv. காலசக்கரம் (பதிவட்டப்பரிவிட்டம்)
xv. ஆயுள் பரிட்சை
xvi. வாரசரம்
xvii. வாரசூலம்
xviii. கேசரியோகம்
xix. பரியங்கயோகம்
xx. அமுரிதாரணை
xxi. சந்திரயோகம்

(உ) நான்காம் தந்திரம்

நான்காம் தந்திரம் பதின்மூன்று உட்பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. அவையாவன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. அசபை
ii. திரு அம்பலச்சக்கரம்
iii. அருச்சனை
iv. நவகுண்டம்
v. சக்திபேதம் (திரிபுரசக்கரம்)
vi. வயிரவி மந்திரம்
vii. பூரணசக்தி
viii. ஆதார ஆதேயம்
ix. ஏரொளிச் சக்கரம்
x. வயிரவச்சக்கரம்
xi. சாம்பவி மண்டலச்சக்கரம்
xii. புவனாபதிச் சக்கரம்
xiii. நவாக்கரி சக்கரம்

**(ஊ) ஐந்தாம் தந்திரம்**

ஐந்தாம் தந்திரம் மிக முக்கியமான தந்திரம். அதில் இருபத்து மூன்று உட்பிரிவுகள் உள்ளன. அவ்வுட்பிரிவுகளின் பெயர்களைக் கீழே காண்க:

i. சுத்தசைவம்
ii. அசுத்தசைவம்
iii. மார்க்க சைவம்
iv. கடும் சுத்தசைவம்
v. சரியை
vi. கிரியை
vii. யோகம்
viii. ஞானம்
ix. சன்மார்க்கம்
x. சகமார்க்கம்
xi. சற்புத்திரமார்க்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xii. தாசமார்க்கம்

xiii. சாலோகம்

xiv. சாமீபம்

xv. சாரூபம்

xvi. சாயுச்சியம்

xvii. சத்தி நிபாதம்

xviii. மந்ததரம்

xix. தீவிரம்

xx. தீவிரதரம்

xxi. அறுசமயப் பிணக்கம்

xxii. நிராகாரம்

xxiii. உட்சமயம்

(எ) ஆறாம் தந்திரம்

ஆறாம் தந்திரத்தில் பதினான்கு உட்பிரிவுகள் உள்ளன. அவற்றின் பெயர்கள் பின்வருமாறு:

i. சிவகுரு தரிசனம்

ii. திருவடிப்பேறு

iii. ஞாதுரு ஞானநேயம்

iv. துறவு

v. தவம்

vi. தவநிந்தை

vii. அருளுடைமை

viii. அவவேடம்

ix. தவவேடம்

x. திருநீறு

xi. ஞானவேடம்

xii. சிவவேடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xiii. அபக்குவன்

xiv. பக்குவன்

(ஏ) ஏழாம் தந்திரம்

ஏழாம் தந்திரம் நீளமான ஒரு தந்திரம். அதிலே முப்பத்தெட்டு உட்பிரிவுகள் உள்ளன. அவற்றின் பெயர்களைக் கீழே காண்க:

i. ஆறு ஆதாரம்

ii. அண்ட இலிங்கம்

iii. பிண்டலிங்கம்

iv. சதாசிவலிங்கம்

v. ஆத்மலிங்கம்

vi. ஞானலிங்கம்

vii. சிவலிங்கம்

viii. சம்பிரதாயம்

ix. திருவருள் வைப்பு

x. அருள்ஒளி

xi. சிவபூசை

xii. குருபூசை

xiii. மாகேசுவரபூசை

xiv. அடியார் பெருமை

xv. போசனவிதி

xvi. பிட்சாவிதி

xvii. முத்திரைபேதம்

xviii. பூரணக்குகை நெறிச்சமாதி

xix. சமாதிக் கிரியை

xx. விந்து உற்பனம்

xxi. விந்துசெயம் (போகசர ஓட்டம்)

xxii. ஆதித்த நிலை (அண்டாதித்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xxiii. பிண்ட ஆதித்தன்

xxiv. மன ஆதித்தன்

xxv. ஞான ஆதித்தன்

xxvi. சிவ ஆதித்தன்

xxvii. பசு இலக்கணம் - பிராணன்

xxviii. புருடன்

xxix. சீவன்

xxx. பசு

xxxi. போதன்

xxxii. ஐந்து இந்திரியம் அடக்கும் அருமை

xxxiii. ஐந்து இந்திரியம் அடக்கும் முறைமை

xxxiv. அசற்குருநெறி

xxxv. சற்குருநெறி

xxxvi. கூடாவொழுக்கம்

xxxvii. கேடுகண்டிரங்கல்

xxxviii. இதோபதேசம்

(ஐ) எட்டாம் தந்திரம்

எட்டாம் தந்திரத்தில் 43 உட்பிரிவுகள் உள்ளன. அவை பின்வருமாறு:

i. உடலில் பஞ்சபேதம்

ii. உடல் விடல்

iii. அவத்தை பேதம் (கீழாலவத்தை)

iv. மத்திய சாக்கிர அவத்தை

v. அத்துவாக்கள்

vi. சுத்த நனவு ஆதிபருவம்

vii. கேவலசகல சுத்தம்

viii. பரா அவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ix. முக்குண நிர்க்குணம்

x. அண்டாதிபேதம்

xi. பதினொராந் தானமும் அவத்தை எனக் காணல்

xii. கலவு செலவு

xiii. நின்மல அவத்தை

xiv. அறிவு உதயம்

xv. ஆறு அந்தம்

xvi. பதி பசு பாசம் வேறின்மை

xvii. அடிதலை அறியும் திறங்கூறல்

xviii. முக்குற்றம்

xix. முப்பதம்

xx. முப்பரம்

xxi. பரஇலட்சணம்

xxii. மூன்று துரியம்

xxiii. மூன்று முத்தி

xxiv. மூன்று சொரூபம்

xxv. மூன்று கரணம்

xxvi. மூன்று சூனிய தொந்தத்தசி

xxvii. முப்பாழ்

xxviii. காரிய காரண உபாதி

xxix. உபசாந்தம்

xxx. புறங்கூறாமை

xxxi. எட்டிதழ்க் கமல முக்குண அவத்தை

xxxii. ஒன்பான் அவத்தை
ஒன்பான் அபிமானி

xxxiii. சுத்தாசுத்தம்

xxxiv. முத்தி நிந்தை (மோட்சநிந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xxxv. இலட்சணாத்திரயம்

xxxvi. தத்துவமசி வாக்கியம்

xxxvii. விசுவக்கிராசம்

xxxviii. வாய்மை

xxxix. ஞானிசெயல்

xxxx. அவா அறுத்தல்

xxxxi. பத்தி உடைமை

xxxxii. முத்தி உடைமை

xxxxiii. சோதனை

(ஒ) ஒன்பதாம் தந்திரம்

ஒன்பதாம் தந்திரத்தில் 23 உட்பிரிவுகள் உள்ளன. அவற்றைக் கீழே காண்க:

i. குருமட தரிசனம்

ii. ஞானகுரு தரிசனம்

iii. பிரணவ சமாதி

iv. ஒளி

v. தூல பஞ்சாக்கரம்

vi. சூக்கும பஞ்சாக்கரம்

vii. அதிசூக்கும பஞ்சாக்கரம்

viii. திருக்கூத்துத் தரிசனம்

ix. ஆகாசப்பேறு

x. ஞானோதயம்

xi. சத்தியஞானானந்தம்

xii. சொரூப உதயம்

xiii. ஊழ்

xiv. சிவதரிசனம்

xv. சிவசொரூப தரிசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xvi. முத்திபேதம்
கருமநிர்வாணம்

xvii. சூனியசம்பாசனை (மறைபொருள் கூற்று)

xviii. மோனசமாதி

xix. வரை உரை மாட்சி

xx. அணைந்தோர் தன்மை

xxi. தோத்திரம்

xxii. சர்வவியாபி

xxiii. வாழ்த்து

மேற்படி உட்பிரிவுகளைக் கூட்டிப் பார்த்தால் எல்லாமாக இருநூற்று இருபத்துநான்கு உட்பிரிவுகள் இருப்பதைக் காணலாம்.

## 34. திருமந்திரத்தில் இடைச்செருகல்கள் ஏற்பட்டிருக்குமா?

இனி, மேற்படி இருநூற்று இருபத்துநான்கு உட்பிரிவுகளிலும் கூறப்பட்டிருக்கின்ற முக்கியமான விடயங்களைத் தந்திரம் தந்திரமாகப் பார்க்கமுன்னர், மீண்டும் ஒரு விடயத்தை நினைவு படுத்திக்கொள்வது நல்லது. அதாவது, திருமந்திரமாலையைத் திருமூலர் திருவாய்மலர்ந்தருளியபோது, அதில் அடங்கியிருக் கின்ற பாடல்களை அவர் அந்தாதி முறையில் அமைத்திருத்தல் வேண்டும் என்று முன்பு ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தோம். அதாவது, முதலாவது பாடலின் இறுதிச்சீர் அல்லது சீர்கள் அடுத்துவரும் பாடலின் முதற் சீராக அல்லது சீர்களாக வருமாறு அமைத்திருக்கவேண்டும் என்று குறித்திருந்தோம். இன்று நமக்குக் கிடைக்கின்ற திருமந்திரப் பாடல்களைப் பார்க்கும்போது, மேற்குறித்த அந்தாதி அமைப்புமுறை குலைந்திருப்பதைக் காண்கிறோம். இதனாலேதான் திருமந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைக்குள் இடைச் செருகல்கள் பல நுழைந்துவிட்டன என்று அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். திருமூலர் கருதியிராத பல புராணக்கதைகள் திருமந்திர மாலைக்குள் பிற்காலத்தில் புகுந்திருக்கக் கூடுமோவென்று சிவதத்துவம் வல்லவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் **"திருமந்திர ஆராய்ச்சி"** என்ற நூலை எழுதிய **Dr இரா மாணிக்கவாசகம்** அவர்கள் கூறிய ஒரு கருத்தை அப்படியே கீழே தருகின்றேன்:

"திருமூலர் ஒன்பது ஆகமங்களின் பெயரைக் குறிக்கின்ற படியால் ஒன்பது தந்திரம் எனப் பிரித்தனர். திருமூலர் குறிக்கின்ற ஒன்பது ஆகமங்கள் கூறுகின்றவற்றைத்தான் இவ்வொன்பது தந்திரங்கள் கூறுகின்றனவா என்பதைக் கூறுதல் இயலாது. ஏனெனில் அவை வெறும் பெயரளவிலேயே உள்ளன; நமக்குக் கிடைக்கவில்லை; கிடைப்பின் இவைபற்றிய தெளிவினை ஓரளவு பெறவியலும்.

ஆனால், ஆரம்பத்தில் திருமந்திரத்தைத் தொகுத்தவர்கள் ஏதேனும் ஓர் அடிப்படையிலேதான் தொகுத்திருக்க வேண்டும். திருமந்திரத்தில் பெருவாரியான சிதைவுகளும் இடைச் செருகல்களும் உள்ளமையால், அவ்வடிப்படை மேலும் ஆராயப்படவேண்டியதாக உள்ளது. நூலின் பொதுவான அமைப்பை நோக்கும்போது, பத்துப்பாடல்களாகச் சில பகுதிகளும், முப்பது பாடல்களாகச் சிலபகுதிகளும், ஐம்பது பாடல்களாகச் சிலபகுதிகளும், நூறு பாடல்களாகச் சிலபகுதி களும் தொகுக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. ஐந்துக்கும் குறைவாகக் காணப்படும் பாடல்களைச் சிதைவுற்ற பகுதிகளாகக் கருதலாம். எங்ஙனம் இருப்பினும் சுமார் எழு நூற்றுப் பதினாறு பாடல்கள் தொடர்ந்தும், விட்டுவிட்டும் அந்தாதிப் போக்கில் அமைந்துள்ளதால், இவர் அம்முறையிலேயே அனைத்துப் பாடல்களையும் இயற்றியிருத்தல் வேண்டும். எஞ்சியவை அவ்வப்போது இடைச்செருகலாக அமைந்திருக் கலாம். பயன்படுத்தப்பட்ட சொற்களைக் கொண்டும், அமைப் பைக்கொண்டும், நூற்றுப்பன்னிரண்டு பாடல்களை (112),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிஞர் வி.வி. ரமணசாத்திரி** இடைச்செருகல் என ஒதுக்கு கின்றார். எவ்வாறாயினும், இந்த நூல் மறையாகவே (வேதமாக) இருந்துவந்தமையே இவ்விடைச்செருகல், சிதைவு முதலிய வற்றுக்குக் காரணமாயிற்று என்பது மறுக்க முடியாத உண்மையாகும்"

## 35. மீண்டும் மீண்டும் வந்துள்ள பாடல்கள்

ஒரே பாடல் இரண்டுமுறை அல்லது மூன்றுமுறை வந்த தறுவாய்கள் பல திருமந்திரத்தில் உண்டு. அந்தப் பாடல்களின் இலக்கங்களைக் காட்டும் பட்டியலொன்றைக் கீழே காணலாம்:

1. 106; 990
2. 108; 540
3. 185; 863
4. 236; 2536
5. 331; 1856
6. 336; 882
7. 403; 438
8. 406; 414
9. 412; 2967
10. 440; 2351
11. 457; 2926
12. 490; 2012
13. 492; 1771
14. 504; 2175
15. 587; 1794

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. 617; 2471
17. 766; 2660
18. 884; 2988
19. 961; 1971
20. 965; 2698
21. 972; 1115
22. 973; 1213
23. 975; 2503
24. 1134; 1528
25. 1222; 1306
26. 1452; 1848
27. 1458; 1846
28. 1460; 2622
29. 1478; 1567
30. 1492; 1707
31. 1586; 1629
32. 1589; 1782
33. 1652; 1869
34. 1711; 2359
35. 1786 2938
36. 1862; 2111
37. 2016; 2903
38. 2071; 2550
39. 2093; 2559

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. 2362; 2637

41. 2441; 2473; 2826

42. 2493; 2570

43. 2498; 2572

44. 2530; 2979

45. 2597; 2845

நாற்பத்தைந்து பாடல்கள் மேலே குறிப்பிட்டவாறு இருவேறு இலக்கங்கள்கொண்ட பாடல்களாக வந்துள்ளன. அத்தகைய திருமந்திரப் பாடல்களைக்கொண்ட பட்டியல் ஒன்றை இந்த நூலின் பின்னிணைப்பில் காணலாம்.

## 36. இறை இயலும் தத்துவ இயலும்

பசும்பாலுக்குள்ளே நெய்யைத்தவிர வேறு பொருள்களும் கலந்திருக்கும்; தண்ணீரும் கலந்திருக்கும்; உப்பும் கலந்திருக்கும்; புரதமும் கலந்திருக்கும்; வேறு கனிமங்களும் கலந்திருக்கும். அவை ஒவ்வொன்றும் பாலுக்கு வேண்டியனவே. நெய்யை எடுக்கும்போது மற்றவை விலகிவிடும்; விலக்கப்பட்டுவிடும். ஆனாலும் பால் என்ற பண்பைப் பெறுவதற்கு நெய்யல்லாத மற்றவையும் வேண்டியனவே; நெய்யைப் புரிந்துகொள்ள அவை உதவுகின்றன.

Theology எனப்படுகின்ற இறைமை இயல் வேறு; Metaphysics அல்லது Ontology எனப்படுகின்ற தத்துவவியல் வேறு. திருமந்திரமாலையிலே இந்த இரண்டுமே கலந்திருக்கின்றன. நீரொடு கலந்த பாலில், **நீரை விலக்கிவிட்டுப் பாலைமட்டும் பிரித்துத்தந்த பணியைத்தான் சந்தான குரவர்கள் செய்திருக்கிறார்கள்** என்பதை நாம் நினைவில் வைத்துக்கொண்டே திருமூலரின் தந்திரங்களின் செய்திகளைப் புரிய முயலவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. திருமந்திரத்தின் உள்ளீடு
### - பாயிரம் பகருகின்ற செய்தி

இனி, திருமந்திரத்தில் அடங்கியுள்ள பாயிரப் பகுதியிலும் அதனை அடுத்து அமைந்துள்ள ஒன்பது தந்திரங்களிலும் பொதிந்துள்ள விடயங்களை மேலோட்டமாகப் பார்ப்போம்.

பாயிரத்திலே நூற்றியிருபத்தெட்டுப் பாடல்கள் உள்ளன. அவை பத்து உட்பிரிவுகளில் அடக்கப்பட்டிருக்கின்றன. இந்த உட்பிரிவுகளில் மும்மூர்த்திகளின் முறைமை, வேதங்களின் சிறப்பு, ஆகமங்களின் சிறப்பு, அந்தணரின் ஒழுக்கம், ஆகுதி வேட்டல், ஆட்சிமுறை, வானச்சிறப்பு, அறம் செய்வோரின் தன்மை, அறம் செய்யாதோரின் தன்மை என்று பல விடயங்கள் பேசப்படுகின்றன.

**சிவன், திருமால், பிரம்மன் என்ற மூவரையும் இணைத்துப் பேசுவதன்மூலம் சமயப் பொறையையும் சமயப் பொதுமையையும் வெளிக்காட்டுகிறார் திருமூலர். வேதங்களைச் சிறப்பித்துப் பேசுவதன்மூலம், வேதங்களை விலக்கிவிட முடியாது என்ற ஒரு கருத்தையும் முன்வைக்கிறார் திருமூலர்.** சமக்கிருத மொழியை ஒதுக்கமுடியாது என்றாற்போலவும் பேசுகிறார்.

ஆகமச்சிறப்புப்பற்றிக் கூறுகின்ற பாடல்கள், எவ்வாறு சிவனிடமிருந்து சத்தியின் வழியாக ஒன்பது ஆகமங்களும் நந்தியங்கடவுளிடம் வந்து சேர்ந்தன என்ற வரலாற்றைக் கூறுகின்றன.

அந்தணர் ஒழுக்கம் என்ற பகுதி பாசநீக்கத்துக்குப் புலனடக்கமும், தவமும், ஆசையொழிப்பும் முக்கியமென்பதை வலியுறுத்துவதுபோல அமைந்திருக்கிறது. சிறப்புப் பாயிரம் என்ற பகுதி குரு பரம்பரை பற்றியும், திருமூலரின் வரலாற்றையும் எடுத்துக்கூறுகின்றது. திருமூலரின் வரலாற்றை அறிவிக்கின்ற பகுதி இந்தப்பகுதிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. முதலாம் தந்திரம் மொழிகின்ற செய்தி

முதலாம் தந்திரத்திலே *166* பாடல்களும் *24* உட்பிரிவுகளும் உள்ளன. இந்தத் தந்திரத்திலே, திருவள்ளுவர் அறத்துப்பாலிலே கூறுகின்ற கருத்துக்கள் பல இடம்பெற்றிருக்கின்றன. வீடு பேற்றுக்கு அறச் செயல்கள்தாம் வழி என்பது திருமூலரின் அடிநாதக் கொள்கையாதலால், அவர், யாக்கை, செல்வம், இளமை ஆகியவற்றின் நிலையாமையை வற்புறுத்திப் பெண்ணாசை, ஊனாசை என்பவற்றை விலக்குமாறு வற்புறுத்துகின்றார்.

**"மகளிர் இழிவு"** என்ற தலைப்பில் உள்ள செய்தி திருமூலரின் செய்தியாக இருக்கமுடியாது என்றும், அதுவும் ஓர் இடைச்செருகலாக இருக்கக்கூடும் என்றும் அறிஞர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

இறையியல் கோட்பாடான அருள் (Grace) என்ற விடயம் முதலாம் தந்திரம் முழுவதிலும் மேலோங்கி நிற்கிறது.

நூற்றுப்பதினைந்தாவது பாடல் *(115)* பதி, பசு, பாசம் என்ற சைவசித்தாந்தக் கோட்பாட்டை அறிமுகம் செய்கிறது.

நூற்றிப்பத்தொன்பதாவது பாடல் *(119)* சீவனுக்கும் சிவனுக்கும் இடையிலான தத்துவக் கோட்பாட்டைக் கூறுகின்றது.

நூற்றுமுப்பத்தைந்தாம் பாடல் *(135)* ஆன்மாவின் சித்துத் தன்மையை மறைத்து வைக்கின்ற ஐம்புலன்கள் பற்றிப் பேசுகின்றது. சிவத்துக்கே உரியதான சித்து நிலையை விளக்குகின்ற பாடல்களாக *124, 125, 126, 127, 128, 129* ஆகிய பாடல்கள் அமைகின்றன. சைவசித்தாந்தம் ஒப்புக் கொள்கின்ற முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிய செய்திகளையும் இந்தப் பாடல்கள் தருகின்றன.

*168* தொடங்கி *336* வரையுள்ள பாடல்கள், ஞானத்துக்கு முதற்படியான சரியை மார்க்கம்பற்றித் தொட்டுச்செல்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. இரண்டாம் தந்திரம் இயம்புகின்ற செய்தி

இரண்டாம் தந்திரத்திலே இருபத்தைந்து (25) உட்பிரிவுகளும் 208 பாடல்களும் உள்ளன.

இதிலே வருகின்ற **"இலிங்கபுராணம்"** என்ற தலைப்பில் எட்டுப் பாடல்கள் உள்ளன. அந்தத் தலைப்புக்கும் அதிலே பேசப்படுகின்ற செய்திகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கொள்ளமுடியாது என்பதால், இந்தப் பகுதி இடைச்செருகலாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருத்துரைத்திருக்கிறார்கள். வாசகர்கள் சிந்திக்கவேண்டிய ஒரு விடயம் இது.

**படைத்தல்** தொடங்கி **அருளல்** வரையிலான தலைப்புக்களில் அறுபத்தெட்டுப் பாடல்கள் உள்ளன. அவை இறைவனுடைய ஐந்தொழில்கள் பற்றிப் பேசுகின்றன. இறுதியில் கூறப்பட்டிருக்கின்ற **பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல்** என்ற தலைப்புக்கள் திருக்குறளை நினைவூட்டுகின்றன. அவை இரண்டும் முதலாம் தந்திரத்துக்கு உரியனவோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது. முதலாம் தந்திரத்தில் உள்ள இருபத்துநான்கு தலைப்புக்களில் பதினேழு தலைப்புக்கள் திருக்குறளை நினைவூட்டுவனவாக உள்ளன. மூன்று தொடங்கி ஒன்பது வரையிலுள்ள தந்திரங்களில் திருக்குறள் தலைப்புக்கள் இல்லையென்பதும் எண்ணிப்பார்க்கவேண்டிய ஒன்று.

381ஆம் பாடல்தொடங்கி 410ஆம் பாடல் வரையுள்ள பாடல்கள், படைத்தல் தொழில் பற்றியன. தமிழ்ச் சைவசித்தாந்த தத்துவத்தில் பேசப்படுகின்ற கலைச்சொற்கள் பலவற்றை இந்தப் பாடல்கள் தருகின்றன. அதாவது, **பராபரம், பராபரை, பரம், பரை, நாதம், விந்து, சிவம், சக்தி, ஞானசக்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி, மாயை, ஐம்பூதங்கள், சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை, மனோன்மனி, மங்கலி, வாரணி, ஆரணி, மோகினி, பூரணி** முதலிய சொற்கள் பயிலப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. மூன்றாம் தந்திரம் முழங்குகின்ற செய்தி

மூன்றாம் தந்திரத்தில் 333 பாடல்கள் உள்ளன. அவை இருபத்தொரு உட்பிரிவுகளில் அடங்குகின்றன. அட்டாங்கயோகம் தொடங்கிச் சந்திரயோகம் வரையிலான இருபத்தொரு உட்பிரிவுகளில் யோகப்பயிற்சி பற்றிய பல செய்திகள் பேசப்படுகின்றன. திருமூலர் இந்தப் பகுதியை எழுதுவதற்குப் பதஞ்சலியின் யோகசாத்திரத்தின் துணையை நாடினாரா இல்லையா என்பது இன்றும் விவாதத்துக்கு உரியதாகவே உள்ளது. தொல்காப்பியத்தின் புறத்திணை இயலின் 75ஆம் நூற்பா **"அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்"** என்று தொடங்குகின்றது. அந்த நூற்பாவில்,

> **"நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்**
> **பாலறி மரபில் பொருநர் கண்ணும்"**

என்று இரண்டு வரிகள் வருகின்றன. இந்த நூற்பாவில் வருகின்ற **"தாபதப் பக்கத்தர்"** என்ற தொடருக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் **"யோகிகளாய், உபாயங்களான் முக்காலமும் உணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன் தேயத்து அனைநிலை வகையோராவர் அவர்க்கு மாணாக்கராகித் தவஞ்செய்வோர் தாபதப் பக்கத்தார் ஆவர்"** என்று எழுதியுள்ளார். யோகியரின் பண்புபற்றித் தொல்காப்பியர் குறித்திருப்பதால், யோகக் காட்சிபற்றிய அறிவு தமிழர் அறிந்திருந்த ஒன்று என்பது புலனாகும்.

549ஆம் பாடலிலிருந்து 631ஆம் பாடல்வரையுள்ள பாடல்கள், அட்டாங்க யோகத்தை எவ்வாறு பயிலவேண்டும் என்று சொல்கின்றன.

632ஆம் பாடல் தொடங்கி 639ஆம் பாடல் வரையுள்ள பாடல்கள், அட்டாங்கயோகத்தின் பலாபலன்கள் பற்றிப் பேசுகின்றன.

640ஆம் பாடல் தொடங்கி 740ஆம் பாடல் வரையுள்ள பாடல்கள் அட்டமாசித்திகள் பற்றிக் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் பரியாங்கயோகம் வரை உள்ள பாடல்களின் மெய்ப்பொருளை விளங்கிக்கொள்வது கடினமாக உள்ளது. அட்டாங்க யோகத்தில் ஈடுபாடு கொண்டார்க்கே அவை தெளிவாக விளங்கும்போலும்! பரியாங்க யோகம் என்றால் என்ன என்பதுபற்றியும் அறிஞரிடையே கருத்துவேறுபாடு உண்டு.

## 41. நான்காம் தந்திரம் நவிலுகின்ற செய்தி

நான்காம் தந்திரத்தில் 520 பாடல்கள் உள்ளன. **அசபை** தொடங்கி **நவாக்கரி சக்கரம்** வரையில் பதின்மூன்று உப்பிரிவுகள் உள்ளன. மூன்றாம் தந்திரம் முழுவதும் யோகம் பற்றிக் கூறுவதுபோல, நான்காம் தந்திரம் முழுவதும் பல்வேறுபட்ட **சக்கரங்கள், யந்திரங்கள்** எனப்பட்ட **மண்டலங்கள்** ஆகியன பற்றிக் கூறுகின்றது.

வாய்விட்டு உச்சரிக்கின்ற மந்திரத்துக்குச் **சபை** என்பது பெயர். அதன் மறுதலை **அசபை;** அதாவது, மனதுக்குள் மவுனமாக உச்சரிக்கின்ற மந்திரத்துக்கு அசபை என்பது பெயர். “ஓம்”, “சிவாயநம” என்பன அசபை மந்திரங்கள் என்பார்கள். அசபை மந்திரம் பிராணனுடன் தொடர்புடையது என்பார்கள்.

நான்காம் தந்திரத்தில் வருகின்ற **“அருச்சனை”** என்ற பிரிவு, மேற்படி மந்திரச் சக்கரங்களை வழிபடுகின்ற முறை என்னவென்று கூறுகின்றது.

இந்தத் தந்திரத்திலே வருகின்ற சில பகுதிகள் சாக்த தத்துவத்தோடு சம்பந்தப்பட்டனவாகத் தோன்றுகின்றன.

902ஆம், 913ஆம் பாடல்கள் சிவநடனம் பற்றியும் திருவம்பலச் சக்கரம் பற்றியும் பேசுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. ஐந்தாம் தந்திரம் அறைகின்ற செய்தி

இந்தத் தந்திரத்தில் 156 பாடல்களும் இருபத்துமூன்று உட்பிரிவுகளும் உள்ளன. இந்தத் தந்திரம், **சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்தசைவம்** என்று சொல்லப்படுகின்ற நான்கு வகையான சைவசமயங்கள் பற்றிப் பேசுகின்றது. அத்துடன் அவற்றின் பொது அடிப்படைகளான, சரியை மார்க்கம், கிரியை மார்க்கம், யோகமார்க்கம், ஞானமார்க்கம் என்ற நான்கு வழிகள் பற்றியும் கூறுகின்றது. அதாவது சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம் என்ற நான்கு மார்க்கங்கள் பற்றிப் பேசுகின்றது. அத்தோடு அந்த மார்க்கங்களில் நின்று வெற்றி பெறுவோர் அடைகின்ற பதவிகளாகிய **சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்** என்பன பற்றியும் பேசுகின்றது.

இந்த ஐந்தாம் தந்திரம் சிவனது இயல்பு, அருள் என்பன பற்றிக் கூறுவதோடு, திருவருள் வீழ்வு எனப்படுகின்ற, சத்திநிபாதம் பற்றியும் பேசுகின்றது.

சிவனியல்பு பற்றிப் பேசுகின்ற இந்தத் தந்திரத்தில், சத்தியைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. சத்தியைப்பற்றிக் கூறுகின்ற பாடல்கள் அனைத்தும், சக்தி வழிபாட்டோடு நெருங்கிய உறவுகொண்ட சக்கரங்களைப்பற்றி விவரிக்கின்ற நான்காம் தந்திரத்தில் இருக்கவேண்டிய பாடல்கள் என்று அறிஞர்கள் கருத்துரைத்திருக்கிறார்கள்.

1530ஆம் பாடல் தொடங்கி 1549ஆம் பாடல்வரையுள்ள பாடல்கள், சைவசித்தாந்தம் தவிர்ந்த ஏனைய ஆறு தரிசனங் களையும் சாடுகின்றன. சமயப்பொறையுள்ள சித்தரான திருமூலர் ஏனைய தரிசனங்களைச் சாடியிருப்பாரா என்பது ஆராய்ச்சிக்குரியது.

1557ஆம் பாடல் தொடங்கி 1572ஆம் பாடல் வரையுள்ள பாடல்கள் சைவசித்தாந்த தத்துவத்தின் உயர்வை விளக்க முனைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. ஆறாம் தந்திரம் அறிவிக்கின்ற செய்திகள்

ஆறாம் தந்திரத்தில் 128 பாடல்களும் பதினான்கு உட்பிரிவுகளும் உள்ளன.

1573இல் இருந்து 1604 வரையுள்ள பாடல்கள் சிவகுருவைப் பற்றிய பாவாரங்களாக உள்ளன. 1614 தொடங்கி 1632 முடியவுள்ள பாடல்கள், துறவு பற்றியும் தவம் பற்றியும் பேசுகின்றன. இறைவனை அடைவதற்குத் தவமும் ஒரு வழியாகும் என்று ஆறாம் தந்திரம் கூறுகின்றது.

1633ஆம் பாடல் தொடங்கி 1703ஆம் பாடல் ஈறாக உள்ள பாடல்கள், தவத்தை எவ்வாறு மேற்கொள்ளவேண்டும் என்று கூறுகின்றன. அதேநேரம் தவம் மறைந்து அல்லவை செய்கின்றவர்களைப் பற்றியும் திருமூலர் குறிப்பிடுகின்றார். தவம் செய்வதற்கும் இறையின் அருள் வேண்டுமென்பதைத் திருமூலர் வற்புறுத்துகின்றார். **"தவமும் தவமுடையார்க்கு ஆகும்"** என்று வள்ளுவர் பாடுவதும் இதனாற்றான் போலும்!

1655 தொடங்கி 1667வரையுள்ள பாடல்கள் திருநீற்றின் மகிமையை விரித்துரைக்கின்றன.

## 44. ஏழாம் தந்திரம் எடுத்தோதும் செய்தி

ஏழாம் தந்திரத்தில் 407 பாடல்கள் உள்ளன. இவை முப்பத்தெட்டுத் தலைப்புக்களின்கீழ் அடக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தந்திரம் ஆதாரங்கள் பற்றியும், பல்வேறு வகைப்பட்ட இலிங்கங்கள் பற்றியும் பேசுவதோடு, பதி இலக்கணம் பற்றியும், பசுவின் இலக்கணம்பற்றியும், ஐந்து இந்திரியங்களை அடக்கவேண்டியதன் அவசியம் பற்றியும், அவற்றை அடக்குவதில் இருக்கக்கூடிய சிக்கல்கள் பற்றியும், ஐந்து இந்திரியங்களை அடக்குவதற்கான வழிமுறைகள் பற்றியும் பேசுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சம்பிரதாயம்" என்ற பிரிவு, சிவனும் சீவனும் வேறல்லர் என்ற கருத்தை முன்வைக்கிறது. "சிவபூசை" என்னும் பிரிவிலும், "உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்" என்று கூறுவதன்மூலமும் மேற்படி கருத்தே முன்வைக்கப்படுகின்றது.

**குருபூசை, போசன விதி, பிட்சாவிதி** என்பன விளங்கற்கரிய பிரிவுகளாகவும், உட்கிடை கொண்ட பிரிவுகளாகவும் உள்ளன. வல்லார்வாய்க் கற்று அறியவேண்டிய பகுதிகள் இவை.

**"இதோபதேசம்"** என்ற பிரிவில், "ஒன்றே குலம், ஒருவனே தேவன் நன்றே நினைமின்"; "இக்காயம் நீக்கி இனியொரு காயத்தில் புக்குப் பிறவாமல் போம்வழி நாடுமின்" என்பன போன்ற உபதேசங்களைக் காணலாம்.

1892ஆம் பாடலில் தொடங்கி 1922ஆம் பாடல் வரையுள்ள பாடல்கள் **குண்டலினி யோகம்** பற்றிப் பேசுகின்ற பாடல்கள் என்று கொள்ளலாம். முத்திரைகள் எவையென்றும், அவற்றை எவ்வாறு பயிலவேண்டும் என்றும், 1892இல் இருந்து 1901 முடியவுள்ள பாடல்கள் கூறுகின்றன.

1902ஆம் பாடல் தொடங்கி 1922ஆம் பாடல்வரையிலான பாடல்கள், சமாதிநிலைக் கிரியைகளில் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் பற்றிப் பேசுகின்றன.

**1922ஆம் பாடலிலிருந்து 1974ஆம் பாடல் வரையிலான பாடல்கள் தாந்திரிகம் பற்றிய பாடல்கள். இவை புரிந்து கொள்ளமுடியாத அளவுக்கு நுட்பமானவை. யோகப் பயிற்சியில் ஈடுபட்டார்க்கே இவை ஓரளவுக்கேனும் புரியும் என்று அறிஞர்கள் எழுதியிருக்கிறார்கள்.**

மேலே நாம் குறிப்பிட்டது போல, ஏழாம் தந்திரம் திட்ப நுட்பம் நிறைந்த தந்திரம்; அறிதொறூஉம் நம் அறியாமையை வெளிக்காட்டுகின்ற தந்திரமாக இந்தத் தந்திரம் அமைந் திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45. எட்டாம் தந்திரம் எண்பிக்கின்ற செய்தி

எட்டாம் தந்திரத்தில் நாற்பத்துமூன்று உட்பிரிவுகள் உள்ளன. அவற்றை விளக்குகின்ற பாடல்களாக 521 பாடல்கள் உள்ளன.

எட்டாம் தந்திரம், வெவ்வேறு மட்டங்களில் உயிருக்குரியதாக இருக்கும் அறிவுநிலை பற்றி முற்றாகப் பேசுகின்ற தந்திரமாக உள்ளது.

2122ஆம் பாடல் தொடங்கி 2141ஆம் பாடல் வரை உள்ள பாடல்கள் மானுட உடலின் இயல்பு பற்றியும், அதனை ஆக்குகின்ற கூறுகள் பற்றியும், உடல் படுகின்ற அநுபவங்கள் பற்றியும் பேசுகின்றன.

தூல உடம்பு, சூக்கும உடம்பு, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், பஞ்சேந்திரியங்கள், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், அந்தக்கரணங்கள், தத்துவங்கள், அவத்தைகள் என்பனவற்றின் விளக்கங்களை மேற்படி பாடல்களிலே பார்க்கலாம்.

**இந்தத் தந்திரத்தில் வருகின்ற பாடல்களும் விளங்குவதற்கு அரியனவாகவே உள்ளன.**

2187ஆம் பாடல் தொடங்கி 2648ஆம் பாடல் வரையிலான பாடல்கள் இறையியல் பற்றியும் சித்தாந்த இயல் பற்றியும் விவரிக்கின்ற பாடல்கள். **அநுபவத்தால் அன்றி, வெறும் சாத்திர ஞானத்தால் புரிந்துகொள்ளமுடியாத சங்கதிகள் பல இத்தந்திரத்தில் உள்ளன. வல்லார்வாய்க் கற்றுப் பயின்றாலன்றி இவற்றின் நுண்மையைத் தெளிந்துகொள்ளமுடியாது.** சைவர்களாய்ப் பிறந்து, சைவர்களாய் வாழ்ந்து, சைவசமயத் தத்துவங்களில் ஊறியவர்களுக்கே விளங்காத சங்கதிகள் பல இந்தத் தந்திரத்தில் இருப்பதால், வெறுமனே நூலைப் படித்து நுனிப்புல் மேய்கின்றவர்கள் இந்தத் தந்திரத்தைப் புரியவும் முடியாது, விளக்கவும் முடியாது என்பது சொல்லாமலே புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46. ஒன்பதாம் தந்திரம் ஒலிக்கின்ற செய்தி

ஒன்பதாம் தந்திரத்தில் இருபத்துமூன்று உட்பிரிவுகளும் அவற்றை விவரித்துரைக்கின்ற 398 பாடல்களும் உள்ளன. ஒன்பதாம் தந்திரம் முழுவதும் சித்தாந்தக் கூறுகளைக் கூறுகின்ற பகுதியாக இருக்கின்றது என்று கொள்ளலாம். முதலெட்டுத் தந்திரங்களில் கூறப்பட்டவற்றின் சுருக்கத்தை இந்தத் தந்திரம் கொண்டிருப்பதுபோலத் தெரிகிறது; தனித்து நோக்கவேண்டிய தந்திரம் இத் தந்திரம்.

இந்தத் தந்திரத்திலே **"மறைபொருட்கூற்று"** என்ற ஒரு தலைப்புக் காணப்படுகிறது. **திருமந்திரமாலை** என்ற பூட்டுக்கான திறவுகோல் இந்த "மறைபொருட்கூற்று" என்ற தலைப்பிலேதான் இருக்கிறது என்று சொல்வது வழக்கம். அதாவது முன்னுள்ள எட்டுத் தந்திரங்களிலும் பொதிந்துள்ள கருத்துக்களையெல்லாம் ஒன்றுதிரட்டி, உட்கிடை கொண்ட சொற்களால் கூறுகின்ற தந்திரமாக ஒன்பதாம் தந்திரத்தைக் கொள்ளலாம் என்கிறார்கள் சித்தாந்தம் வல்லவர்கள்.

2644ஆம் பாடல் தொடங்கி 3047ஆம் பாடலில் முடிகின்ற இந்தத் தந்திரம் தெய்வீகக் காட்சியைக் காண்பதற்கான வழியைக் காட்டுகின்ற தந்திரமாக அமைந்துள்ளது. தெய்வீக தரிசனந்தான் கன்ம விடுதலையை ஏற்படுத்தும் என்று 2864ஆம் 2865ஆம் பாடல்கள் காட்டுகின்றன.

**பற்றற்றவர் பற்றிநின்ற பரம்பொருள்**
**கற்றற்றவர் கற்றுக் கருதிய கண்ணுதல்**
**சுற்றற்றவர் சுற்றிநின்ற என் சோதியைப்**
**பெற்றுற்றவர்கள் பிதற்று ஒழிந்தாரே (2865)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47. திருமந்திரம் நிறைவுரை

"நீத்தார் பெருமை" என்று ஓர் அதிகாரம் திருக்குறளில் உண்டு. அந்தத் தொடருக்கு உரை எழுதிய பரிமேலழகர், "முற்றத் துறந்த முனிவரது பெருமை கூறுதல்" என்று எழுதிச்செல்கிறார். நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தில் வருகின்ற முதலாவது குறள்,

> **"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
> **வேண்டும் பனுவல் துணிவு"**

என்று அமைந்திருக்கிறது. ஒழுக்கத்தில் நிலைத்துநின்று பற்றினை விட்ட துறவோர்களின் பெருமையையே சிறந்த நூல்களெல்லாம் பாராட்டிப் பேசுகின்றன. இதனை மேலும் விரித்து விளக்க விரும்பிய பரிமேலழகர் பின்வருமாறு கூறுகிறார்:

> "தத்தம் வருணத்துக்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாது போற்றி ஒழுகும்போது அறம் வளரும்; அறம் வளரப் பாவம் தேயும்; பாவம் தேய அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க நித்த அநித்தங்களது வேறுபாடுகள் பற்றிய உணர்வும், அழிதன்மாலையவாய இம்மை மறுமை இன்பங்களின் உவர்ப்பும் பிறவித் துன்பங்களும் தோன்றும்; அவை தோன்றவே, வீட்டின்கண் ஆசை உண்டாம்; அஃது உண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனில் முயற்சிகள் எல்லாம் நீங்கி, வீட்டிற்குக் காரணமாகிய யோக முயற்சி உண்டாம்; அஃது உண்டாக, மெய்யுணர்வு பிறந்து, புறப்பற்றாகிய "எனது" என்பதும் அகப்பற்றாகிய "யான்" என்பதும் விடும்."

என்று எழுதிச் செல்கிறார்.

அஃதாவது அறம் வளர்ந்ததும் பாவம் தேயும் என்றும், பாவம் தேய்ந்ததும் அறியாமை நீங்கும் என்றும், அறியாமை நீங்கியதும் நித்தியம் எது, அநித்தியம் எது என்பது பற்றிய நல்லுணர்வு ஓங்கும் என்றும், அந்த நல்லுணர்வு தோன்றியதும் இம்மை மறுமைகளில் உவர்ப்புத் தோன்றும் என்றும், உவர்ப்புத் தோன்றியதும் பிறவித் துன்பங்கள் தோன்றும் என்றும், துன்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்த வருத்த வீட்டின்கண் ஆசை உண்டாகும் என்றும், வீட்டிலே விருப்பம் மிகமிக, பயனில் முயற்சிகள் எல்லாம் நீங்கும் என்றும், அந்த நிலையில் யோக முயற்சி உண்டாகும் என்றும், இந்த யோக முயற்சியை மேற்கொண்டால் மட்டுமே மெய்யுணர்வு பிறக்கும் என்றும்கூறி வலியுறுத்தவே திருமூலர் தமது மூன்றாம் தந்திரத்தில் அட்டாங்க யோகம் பற்றி நிறைவாகப் பேசியிருக்கிறார்.

மூன்றாம் தந்திரத்தில் பேசப்படுகின்ற அட்டாங்கயோகத்துக்கு அடியார்களைத் தயார்பண்ணும் முகமாகவே முதலாம் தந்திரத்தில் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, கொல்லாமை, புலால் மறுத்தல், அன்புடைமை, கல்வி, கல்லாமை, கள்ளுண்ணாமை, நடுவுநிலைமை என்பனவற்றின் அவசியம் பற்றித் திருமூலர் அதிகம் சொல்கிறார் என்று எண்ணவேண்டியிருக்கிறது. **இரண்டாம் தந்திரத்தில் இடம் பெறுகின்ற பொறையுடைமை, பெரியாரைத் துணைக் கோடல் என்ற தலைப்புக்கள்கூட முதலாம் தந்திரத்தில் வந்திருக்கவேண்டி யவைகளோ என்று எண்ணத் தோன்றுகின்றது.** இப்படி எண்ணுகின்ற போது ஆறாம் தந்திரத்தில் இப்போது இடம்பெற்றிருக்கின்ற "துறவு", "தவம்" என்ற தலைப்புக்கள்கூட முதலாம் தந்திரத்துக்கு உரியனவோ என்று சிந்திக்கவும் வைக்கிறது. எட்டாம் தந்திரத்தில் இடம்பெற்றிருக்கின்ற "புறங் கூறாமை", "வாய்மை", "அவா அறுத்தல்" என்ற தலைப்புக்கள்கூட முதலாம் தந்திரத்தில் இருப்பதற்குப்பதிலாக இடம்மாறித் தவறுதலாக எட்டாம் தந்திரத்தில் வைக்கப்பட்டு விட்டனவோ என்ற ஐயத்தை விளைவிக்கின்றன.

மெய்யுணர்வு பிறப்பதற்கும், அதன்வழி **யான், எனது** என்ற செருக்கறுத்து, வானோர்க்கு உயர்ந்த வையம் பெறுவதற்கும் யோகமுயற்சி முக்கியம் என்பதை மூன்றாம் தந்திரத்தில் வற்புறுத்திய திருமூலர், அந்த யோகமுயற்சிச் செயற்பாடு களுக்குத் தியானம் அவசியம் என்பதை வலியுறுத்தும் முகமாகவே நான்காம் தந்திரத்தில் தியானத்துக்கு வேண்டிய முக்கியமான மந்திரங்களைக்கொண்ட சக்கரங்கள் பற்றி அழுத்திப்பேசுகிறார் என்பதை நாங்கள் மனங்கொளல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரமாலை என்ற பாலுக்கும், அந்தப் பாலிலிருந்து பெறப்பட்ட பதினான்கு சாத்திரங்கள் என்ற நெய்க்கும் இடையிலான வேறுபாடு ஒன்றுண்டு. பதினான்கு சாத்திரங்கள் அனைத்தும் ஆன்மாவைப் பீடித்துள்ள நோய்கள் பற்றிக் கூறுகின்றன; ஆனால் நோய் தணிக்கும் வழியைக் கூறவில்லை. நோய் தணிக்கும் வழியைக் கூறுகின்ற நூல்தான் திருமந்திரம். அந்த வழிகளைத்தான் திருமூலர் மூன்றாம் நாலாம் தந்திரங்களிற் கூறியிருக்கிறார். ஆனால் அந்த வழிகளை மேற்கொள்வது சுலபமான காரியமன்று. இது சுலபமான காரியமன்று என்பதனை வள்ளுவனார் முப்பத்தாறாம் அதிகாரமான **"மெய்யுணர்தல்"** என்ற அதிகாரத்திலும் அதை அடுத்துவரும் **"அவா அறுத்தல்"** என்ற அதிகாரத்திலும் விளக்கமாகக் கூறியுள்ளார்.

**"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய்"** என்ற 360ஆம் குறளும்

**"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்"** என்ற 370ஆம் குறளும் சைவசித்தாந்தத்தின் பிழிவாக உள்ள குறள்கள். திருமூலரின் திருமந்திரத்தையோ சந்தானகுரவரின் மெய்கண்டசாத்திரங்களையோ கற்க விரும்புகின்றவர்கள், திருவள்ளுவரின் **"நீத்தார்பெருமை"**, **"மெய்யுணர்தல்"**, **"அவா அறுத்தல்"** என்ற அதிகாரங்களில் வருகின்ற குறள்களைக் கசடறக் கற்றுத் தெளியவேண்டும். அவ்வாறு கற்றபின், மெய்கண்டசாத்திரங்களின் அடிப்படைத் தத்துவங்களைப் புரிந்துகொண்டு திருமந்திர மாலைக்குள் புகுவது பயனுள்ள முயற்சியாக அமையும். இதனை மனதில் கொண்டே திருமந்திரம் பற்றிய இந்த நூலில் சைவசித்தாந்தம் பற்றியும் இந்தியத் தத்துவதரிசனங்கள் பற்றியும் முதலாம் இரண்டாம் பாகங்களில் சிறு சிறு குறிப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திருமந்திரத்தை ஆழமாகக் கற்க விரும்புகின்றவர்கள் அநுபூதிமான்கள் எனப்படும் வல்லார்வாய்க் கேட்டுப் பயனடைவார்களாக.

முற்றும்

* * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 1

## நூலாக்கத்துக்கு உதவிய நூல்களின் பட்டியல்


1. Tirumantiram - A Tamil Scriptural Classic - Sri Ramakrishna Matt Publication -Mylapore (1991)
2. திருமந்திர ஆராய்ச்சி - முனைவர் இரா. மாணிக்கவாசகம் - அன்னை அபிராமி வெளியீடு *(1982)*
3. திருமூலர் திருமந்திரம் - மூலமும் விளக்க உரையும் - ஞா.மாணிக்க வாசகன் - உமா பதிப்பகம் *(2013)*
4. திருக்குறள் - பரிமேலழகர் உரை
5. திருத்தொண்டர் புராணம் (மூலம்) - காசித் திருமடம் - திருப்பனந்தாள் *(2004)*
6. சைவசித்தாந்த சாத்திர வரலாறு - க. வெள்ளைவாரணனார் - தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் *(2002)*
7. சைவ சித்தாந்த சாத்திரங்கள் - சித்தாந்தச் செம்மணி முனைவர் பழ. முத்தப்பன் - உமாபதிப்பகம் *(2009)*
8. மந்திரங்கள் என்றால் என்ன? - பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் - கங்கை புத்தகநிலையம் - தியாகராயநகர், சென்னை
9. இந்தியத் தத்துவ ஞானம் - கி. லக்சுமணன் - பழனியப்பா பிரதேர்ஸ் - திருச்சி *(2010)*
10. Oxford Dictionary of Hinduism - W. J. Johnson - Oxford University Press (2010)
11. சைவசமயம் ஓர் அறிமுகம் - வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா- கொழும்பு *(2010)*
12. அபிதான சிந்தாமணி - ஆ. சிங்காரவேலு முதலியார் - Asian Educational Services - New Delhi *(1996)*
13. The Yoga of Siddha Tirumular - Essays on Tirumandiram - Babaji's Kriya Yoga & Publications - Canada - 2006
14. Tamil Lexicon - Madras University Publication - Madras - 1982 Reprint
15. The Saiva School of Hinduism - Suppiramaniapillai Sivapathasundaram
16. Tamil: A Biography by Professor David Shulman (ISBN 9780674059924)
17. "சித்தாந்தச் செழும் புதையல்கள்" - பண்டிதமணி, இலக்கிய கலாநிதி கந்தையா.
18. "சைவசித்தாந்தமும் தமிழர் பண்பாடும்" - வடபழநி ஆண்டவர் திருக்கோயில் வெளியீடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 2

# பயனுள்ள திருமந்திரப் பாடல்கள் சில

1. அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே 43

2. நல்லார் நவகண்டம் ஒன்பதும் இன்புறப்
பல்லார் அமரர் பரிந்தருள் செய்கென
வில்லாற் புரத்தை விளங்கெரி கோத்தனன்
பொல்லா அசுரர்கள் பொன்றும் படிக்கே 360

3. முப்பதும் முப்பதும் முப்பத்து அறுவரும்
செப்ப மதிள்உடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிள்உடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே 154

4. பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்
பதிஅணுகில் பசுபாசம் நிலாவே 115

5. நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே 85

6. பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலா நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடு கூழநின்று ஓதலு மாமே 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்
எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணஒண் ணாதே 312

8. உறுவது அறிதண்டி ஒண்மணல் கூட்டி
அறுவகை ஆன்ஐந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழுவால் வெட்டி மாலை பெற்றானே 351

9. மந்திரம் ஒன்றுள மலரால் உதிப்பது
உந்தியின் உள்ளே உதயம் பண்ணாநிற்கும்
சந்திசெய் யாநிற்பர் தாம் அறிகிலர்
சந்தி தொழுதுபோய் ஆர்த்து அகன்றார்களே 958

10. அளகநல் நுதலாய் ஓர் அதிசயம்
களவு காயம் கலந்தஇந் நீரில்
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளும் கபாலமே 849

11. நூறு மிளகு நுகரும் சிவத்தின் நீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்கள்
தேறில் இதனைத் தெளிஉச்சி கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயிர் ஆமே 847

12. இருட்டறை மூலையில் இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி அவனை மணம் புரிந்தாளே 1514

13. கற்பன கற்றுக் கலைமன்னும் மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
தொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரம் கண்டுளோர் சைவசித் தாந்தரே 1421

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்து உளார்க்கு வகுத்து வைத்தானே 1475

15. வேட்டவி உண்ணும் விரிசடை நந்திக்கு
காட்டவும் நாமிலம் காலையும் மாலையும்
ஊட்டவி ஆவன உள்ளம் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பால்அவி ஆகுமே 1824

16. சாத்தியும் வைத்தும் சயம்புஎன்று ஏத்தியும்
ஏத்திய நாளும் இறையை அறிகிலார்
ஆத்தி மலக்கிட்டு அகத்தழுக் கற்றக்கால்
மாத்திக்கே செல்லும் வழிஅது வாமே 1841

17. அன்னம் இரண்டுள ஆற்றங் கரையினில்
துன்னி இரண்டும் துணைப்பிரி யாதன
தன்னிலை அன்னம் தனிஒன்றது என்றக்கால்
பின்ன மடஅன்னம் பேறு அணுகாதே 2006

18. எண்ணிலா ஞானி உடல்எரி தாவிழல்
அண்ணல்தம் கோயில் அழலிட்டது ஆங்கொக்கு
மண்ணில் மழைவிழாது வையகம் பஞ்சமாம்
எண்ணரும் மன்னர் இழப்பார் அரசுமே 1912

19. புண்ணியமாம் அவர்தம்மைப் புதைப்பது
நண்ணி அனல்கோக்கில் நாட்டில் அழிவாகும்
மண்ணில் அழியில் அலங்கார பங்கமாம்
மண்ணுலகு எல்லாம் மயங்கும் அனல்மண்டியே ????

20. ஆசான் முன்னே துயில் மாணவ கரைத்
தேசாய தண்டால் எழுப்பும் செயல்போல்
நேசாய ஈசனும் நீடு ஆணவத்தரை
ஏசாத மாயாள் தன்னாலே எழுப்புமே 2163

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவு என்னும்
ஞானத் திரியைக் கொளுவி அதனுட்புக்கு
ஊனை இருளற நோக்கும் ஒருவற்கு
வானகம் ஏற வழி எளிதாமே 2316

22. வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்
கல்லும் பிளந்து கடுவெளி ஆமே 2303

23. முதலாகும் வேதம் முழுதாகமம் அப்
பதியான ஈசன் பகர்ந்தது இரண்டு
முதிதான வேத முறைமுறையால் அமர்ந்து
அதிகாதி வேதாந்த சித்தாந்தம் ஆமே 2404

24. ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே 2615

25. அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கிதன்னில் அறையில் சங்காரம்
அரன் உற்ற அணைப்பில் அமரும் திரோதாயி
அரன்அடி என்னும் அநுக்கிரகம் என்னே 2799

26. சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே 2716

27. முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை
எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை
நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்
அத்தகு சோதி அதுவிரும்பாரே 2115

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே 2104

29. அன்பும் சிவமும் இரண்டெனப்ர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே 270

30. நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே 85

31. அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே 148

32. வளத்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றும்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந் தாலவை ஓடென்று வைப்பார்
உடலுடைந்தால் இறைப்போதும் வையாரே 58

33. ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடருற்ற வாறே 201

34. சத்தியம் இன்றித் தனிஞானம் தானின்றி
ஒத்த விடயம் விட்டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன் உண்மை இன்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே 231

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலம்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிகிலார்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடியிருந் தானே 579

36. உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே 725

37. கானுறு கோடி கழகமழ் சந்தனம்
வானுறு மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேர ஒண்ணாதே 1452

38. பத்தன் சரியை கிரியை பயில்வுற்று
சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்
உய்த்த நெறியுற்று உணர்கின்ற ஞானத்தால்
சித்தம் குருவரு ளாற்சிவம் ஆகுமே 1455

39. எளியனல் தீபம் இடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மம் சனமாதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே 1502

40. அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனார் தோட்டத்தில்
எண்ணிக்கும் ஏழேழ் பிறவி உணர்விக்கும்
உண்ணிற்ப தெல்லாம் ஒழிய முதல்வனைக்
கண்ணுற்று நின்ற கனியது ஆகுமே 1523

41. குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழு மாறே 1680

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக
உள்ள பொருளுடல் ஆவிஉடன் ஈக
எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று
தள்ளி அறியச் சிவபதம் தானே 1693

43. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளித் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே 1823

44. புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவுகின்றாரே 1828

45. சீவனெனச் சிவன் என்னவெவ் வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாயிட் டிருப்பரே 2017

46. அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும்போய் மேய்ந்ததும் அஞ்சுகமே புகும்
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சா திறைவனை எய்தலு மாமே 2026

47. கண்காணி இல்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி இல்லா இடமில்லைக் காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே 2067

48. மலக்கலப்பாலே மறைந்தது சக்தி
மலக்கலப்பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப்பாலே மறைந்தனன் தாணு
மலக்கலப் பற்றான் மதியொழி யாமே 2213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றார்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே 2355

50. வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்
ஓதத்தகும் எட்டு யோகாந்த அந்தமும்
ஆதிக் கலாந்தமும் ஆறந்தமாமே 2370

* * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 3

## திருமந்திரமும் மெய்கண்டசாத்திரங்களும் - ஓர் ஒப்பீடு

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய சைவசித்தாந்தச் சாத்திரங்கள் எல்லாவற்றுக்கும் திருமூலரின் திருமந்திரமே முதல்நூலாகும். ஏனைய பதினொரு திருமுறைகளும் மெய்கண்டசாத்திரங்களுக்கு ஊற்றாக இருந்திருக்கின்றன என்பது உண்மையேயாயினும், திருமந்திரமே அடிமணையான நூலாக அமைந்தது என்பதைப் பின்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டிருக்கும் பாடல்கள் மூலம் உணரலாம்:

1. **மெய்வாய் கண்மூக்குச் செவியெனும் மெய்த்தோற்றத்து**
   **அவ்வாய் அந்தக் கரணமும் அகிலமும்**
   **எல்லா உயிரும் இறையாட்ட ஆடலால்**
   **கைவாய் இலாநிறைவு எங்கும்மெய் கண்டதே**

   **(திருமந்திரம் – 2586)**

2. **ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**
   **தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு**
   **அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே**

   **(சிவஞானபோதம் – சூத்திரம் 8)**

1. **குருவே சிவமெனக் கூறினன் நந்தி**
   **குருவே சிவமென்பது குறித்து ஓரார்**
   **குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்**
   **குருவே உரையுணர்வு அற்றதோர் கோவே**

   **(திருமந்திரம் – 1581)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள்
சகளமாய் வந்தது என்று உந்தீபற
தானாகத் தந்தது என்று உந்தீபற

(திருவுந்தியார் – 01)

1. வித்தினில் அன்றி முளையில்லை அம்முளை
வித்தினில் அன்றி வெளிப்படு மாறில்லை
வித்தும் முளையும் உடனன்றி வேறல்ல
அத்தன்மை யாகும் அரனெறி காணுமே

(திருமந்திரம் – 1932)

2. வித்தும்அதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்
வித்தும்அதன் அங்குரமும் மெய்யுணரில் – வித்ததனில்
காணாமை யால்அதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணாமை யால்அற்றார் பேறு

(திருக்களிற்றுப்படியார் – 57)

1. பசுபதி பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற் பசு பாசம் அநாதி
பதியினைச் சென்று அணுகாப் பாசம்
பதி அணுகில் பசுபாசம் நிலாவே

(திருமந்திரம் – 115)

2. வாக்கு மனம்இறந்த வான்கருணை ஆளன்உரு
தாக்கறவே நிற்கும் தனிமுதல்வா – நீங்காப்
பதியினைப்போல் நித்தம் பசுபாசம் என்றாய்
கதியிடத்து மூன்றினையும் காட்டு

(உண்மைவிளக்கம் – 49)

1. நாகம் உடல்உரி போலும் நல்அண்டச
மாக நனாவில் கனாமறந் தல்லது
போகலும் ஆகும் அரன் அருளாலே சென்று
ஏகும் இடம்சென்று இருபயன் உண்ணுமே

(திருமந்திரம் – 2132)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அரவுதன் தோலுரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போய்வரும்அப் பண்பும் – பரவில்
குடகாய ஆகாயக் கூத்தாட்டாம் என்பது
அடாதுள்ளம் போமாறு அது

(சிவஞானபோதம் – 14ஆம் வெண்பா)

1. உன்னை அறியாது உடலைமுன் நானென்றாய்
உன்னை அறிந்து துரியத்து உறநின்றாய்
தன்னை அறிந்தும் பிறவி தணவாதால்
அன்ன வியாத்தன் அமலன் என்று அறிதியே

(திருமந்திரம் – 2279)

2. எனதுஎன்ற மாட்டுஎன் எனதலாது என்னாது
உனதுஅலாது உன்கைகால் யாக்கை – எனதென்றும்
என்னறிவது என்றும் உரைத்துநீ நிற்றிகாண்
உன்னிலவை வேறாம் உணர்

(சிவஞானபோதம்– மூன்றாம் சூத்திரம், இரண்டாம் அதிகரணம்)

1. சத்தும் அசத்தும் சத்அசத்தும் தான்கண்டு
சித்தும் அசித்தும் சேர்வுறாமே நீத்த
சுத்தம் அசுத்தமும் தோய்வுறாமே நின்ற
சுத்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே

(திருமந்திரம் – 1420)

2. உணர்உரு அசத்தெனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்து ஆம்என
இரண்டு வகையின் இசைக்கும் மன்உலகே

(சிவஞானபோதம் – ஆறாம் சூத்திரம்)

1. தானே அறியான் அறிவிலோன் தானல்லன்
தானே அறிவான் அறிவு சதசத்துஎன்று
ஆனால் இரண்டும் அரன்அருளாய் நிற்கத்
தானே அறிந்து சிவத்துடன் தங்குமே

(திருமந்திரம் – 2329)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்திலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டல ஆன்மா
(சிவஞானபோதம் – ஏழாம் சூத்திரம்)

1. தத்துவம் ஆடச் சதாசிவனும் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசக்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே
(திருமந்திரம் – 2789)

2. ஆதிநடு அந்தமிலா அளவில் சோதி
அருள்ஞான மூர்த்தியாய் அகிலம் ஈன்ற
மாதினையும் ஒருபாகத்து அடக்கி வானோர்
மகுடசூ ளாமணியாய் வையம் போற்ற
பாதிமதி அணிபவளச் சடைகள் தாழப்
படர்ஒளி அம்பலத்து ஆடும் பரனார் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம்
(சிவஞானசித்தியார் – பரபக்கம்)

1. படமாடக் கோயில் பகவற்கு ஒன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றுஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதுஆம்
(திருமந்திரம் – 1857)

2. தாபர சங்கமங்கள் என்றிரண்டு உருவில் நின்று
மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க்கு அருளை வைப்பான்
நீபரன் தன்னை நெஞ்சில் நினைவையேல் நிறைந்த பூசை
ஆய்பரம் பொருளை நாளும் அர்ச்சிநீ அன்புசெய்தே
(சிவஞானசித்தியார் – திருவிருத்தம் – 118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரைஅவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே

(திருமந்திரம் – 2397)

2. வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதிஅமலன் தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநி பாதர்க்கும்
நிகழ்த்தியது நீள்மறையின் ஒளிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்

(சிவஞானசித்தியார் – சுபக்கம் –267)

1. சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே

(திருமந்திரம் – 117)

2. சூரிய காந்தக் கல்லினிடத்தே செய்ய
சுடர்தோன்றி இடச்சோதி தோன்று மாபோல்
ஆரியனாம் ஆசான் வந்து அருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும் தோன்றத்
தூரியனாம் சிவன்தோன்றத் தானும் தோன்றும்
தொல்லுலகம் எல்லாம்தன் னுள்ளே தோன்றும்
நேரியனாய்ப் பரியனுமாய் உயிர்க் குயிராய் எங்கும்
நின்றநிலை எல்லாம்முன் நிகழ்ந்து தோன்றும்

(சிவஞானசித்தியார் – சுபக்கம் – 280)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையின் சங்காரம்
அரனுற் றணைப்பில் அமருந்தி ரோதாயி
அரன்அடி என்றும் அனுக்கிரகம் என்னே

(திருமந்திரம் – 2799)

2. தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

(உண்மைவிளக்கம் – 35)

1. பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நில்லாவே

(திருமந்திரம் – 115)

2. வாக்கு மனமிறந்த வான்கருணை யாளன்உருத்
தாக்கறவே நிற்கும் தனிமுதல்வா – நீங்காப்
பதியினைப்போல் நித்தம் பசுபாசம் என்றாய்
கதியிடத்து மூன்றினையுங் காட்டு

(உண்மைவிளக்கம் – 49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பின்னிணைப்பு 4

## இரட்டித்து இடம்பெற்ற திருமந்திரப் பாடல்கள்

1. 106ஆம் பாடல்

சிவன்முதல் மூவரோடு ஐவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண்டு ஒன்றொடு ஒன்றாகும்
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதல் சங்கரன் தன்பெயர் தானே. 990

2. 108ஆம் பாடல்

ஓலக்கம் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்தடி யேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடு என்றானே. 540

3. 185ஆம் பாடல்

ஒன்றிய ஈர்எண் கலையும் உடல்உற
நின்றது கண்டு நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பு ஒழியாரே. 863

4. 236ஆம் பாடல்

ஒன்றும் இரண்டும் ஒடுங்கிய காலத்து
நன்றும் இருந்தும் நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்கும் திரு உடையோரே. 2536

5. 331ஆம் பாடல்

இராப்பகல் ஆற்ற இடத்தே இருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்
இராப்பகல் அற்ற இறையடி இன்பத்து
இராப்பகல் மாயை இரண்டடித் தேனே. 1856

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. 336ஆம் பாடல்

உண்ணீர் அமுதம்உறும் ஊறலைத் திறந்து
எண்ணீர் குரவன்இணை அடித் தாமரை
நண்ணீர் சமாதியின் நாடிநீரால் நலம்
கண்ணார் தொடச் சென்று கால்வழி காணுமே. 882

7. 403ஆம் பாடல்

நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங்கு இயங்கி அரன்திரு மாலவன்
மன்றது செய்யும் மலர்மிசை மேல்அயன்
என்றிவராக இசைந் திருந் தானே. 438

8. 406ஆம் பாடல்

தேடும்திசை எட்டும் சீவன் உடல்உயிர்
கூடும் பிறவிக்குணம் செய்த மாநந்தி
ஊடும் அவர்தமது உள்ளத்தின் உள்நின்று
நாடும் வழக்கமும் நான் அறிந்தேனே. 414

9. 412ஆம் பாடல்

தானே திசையொடு தேவருமாய் நிற்கும்
தானே உடல்உயிர் தத்துவ மாய்நிற்கும்
தானே கடல்மலை யாதியு மாய்நிற்கும்
தானே உலகில் தலைவனும் ஆமே. 2967

10. 440ஆம் பாடல்

மண்ஒன்று தான்பல நற்கலம் ஆயிடும்
உண்ணின்ற யோனிகள் எல்லாம் ஒருவனே
கண்ஒன்று தான்பல காணும் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ணம் ஆகிநின் றானே. 2351

11. 457ஆம் பாடல்

போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
பாகன் விடான்எனில் பன்றியும் ஆமே. 2926

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. 490ஆம் பாடல்

**ஏனோர் பெருமையன் ஆகிலும் எம்மிறை**
**ஊனே சிறுமையுள் உட்கலந்து ஆங்குளன்**
**வானோர் அறியும் அளவல்ல மாதேவன்**
**தானே அறியும் தவத்தின் உள்ளே. 2012**
3024

13. 492ஆம் பாடல்

**சத்திசிவன் விளை யாட்டால் உயிராக்கி**
**ஒத்தஇரு மாயா கூட்டத்து இடைபூட்டிச்**
**சுத்தம தாகும் துரியம் பிரிவித்துச்**
**சித்தம் புகுந்து சிவமய மாக்குமே. 1771**

14. 504ஆம் பாடல்

**ஆவன ஆவ அழிவ அழிவன**
**போவன போவ புகுவ புகுவன**
**காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்**
**ஏவன செய்யும் இளங்கிளை யோனே. 2175**

15. 617ஆம் பாடல்

**அறிவாய அசத்தென்னும் ஆறாறு அகன்று**
**செறிவான மாயை சிதைந்து அருளாலே**
**பிறியாத பொருளா யிடும் பெற்றி**
**நெறியான அன்பர் நிலை அறிந்தாரே. 2471**

16. 884ஆம் பாடல்

**போற்றுகின்றேன் புகழ்ந்தும் புகல் ஞானத்தைத்**
**தேற்றுகின்றேன் சிந்தை நாயகன் சேவடி**
**சாற்றுகின்றேன் அறையோ சிவயோ கத்தை**
**ஏற்றுகின்றேன் எம்பிரான் ஓர் எழுத்தே. 2988**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. 961ஆம் பாடல்

விந்துவும் நாதமும் மேவிஉடன் கூடிச்
சந்திர னோடே தலைப்படு மாயிழல்
அந்தர வானத்து அமுதம்வந்து ஊறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாமே. 1971

18. 965ஆம் பாடல்

ஐம்பது எழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பது எழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்பது எழுத்தேயும் ஆவது அறிந்தபின்
ஐம்பது எழுத்தும் போய் அஞ்செழுத்தாமே. 2698

19. 972ஆம் பாடல்

இயைந்தனள் ஏந்திழை என்னுளம் மேவி
நயந்தனள் அங்கே நமசிவ என்னும்
பயந்து அனையோரும் பதமது பற்றும்
பெயர்ந்தனள் மற்றும் பிதற்றறுத் தேனே. 1115

20. 973ஆம் பாடல்

ஆமத்து இனிது இருந்து அன்ன மயத்தினை
ஓமத்திலே யுதம் பண்ணும் ஒருத்திதன்
நாம நமசிவ என்றிருப் பாருக்கு
நேமத் தலைவி நிலவி நின்றாளே. 1213

21. 975ஆம் பாடல்

அகாரம் உயிரே உகாரம் பரமே
மகார மலமாய் வருமுப்ப தாறில்
சிகாரம் சிவமாய் வகாரம் வடிவமாய்
அகாரம் உயிரென்று அறையலும் ஆமே. 2503

22. 1134ஆம் பாடல்

இரவும் பகலும் இலாத இடத்தே
குரவம் செய்கின்ற குழலியை நாடி
அரவம் செய்யாமல் அருளுடன் தூங்கப்
பருவம் செய்யாததோர் பாலனும் ஆமே. 1528

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. 1222ஆம் பாடல்

உணர்ந்தெழு மந்திரம் ஓமெனும் உள்ளே
மணந்தெழு மாம்கதி ஆகிய தாகும்
குணர்ந்தெழு சூதனும் சூதியும் கூடிக்
கணந்தெழும் காணுமக் காமுகை யாமே. 1306

24. 1452ஆம் பாடல்

கான்உறு கோடி கழகமழ் சந்தனம்
வான்உறு மாமலர் இட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உண்பவர்க்கு அல்லது
தேனமர் பூங்கழல் சேர ஒண்ணாதே. 1848

25. 1458ஆம் பாடல்

ஊழிதோ றூழி உணர்ந்தவர்க்கு அல்லது
ஊழிதோறூழி உணரவும் தான் ஒட்டான்
ஆழிஅமரும் அரிஅயன் என்று உளார்
ஊழி முயன்றும் ஓர்உச்சி உளானே! 1846

26. 1460ஆம் பாடல்

உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்
கந்தமலரில் கலக்கின்ற நந்தியைச்
சிந்தை உறவே தெளிந்திருள் நீங்கினால்
முந்தைப் பிறவிக்கு மூல வித்தாமே. 2622

27. 1478ஆம் பாடல்

சைவப் பெருமை தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துஉய்ய
வையத்து உளார்க்கு வகுத்து வைத்தானே. 1567

28. 1492ஆம் பாடல்

ஆதார சோதனையால் நாடி சுத்திகள்
மேதாதி ஈரெண் கலந்தது விண்ஒளி
போதா லயத்துப் புலன்கரணம் புத்தி
சாதா ரணம் கெடலாம் சகமார்க்கமே. 1707

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. 1586ஆம் பாடல்

இன்எய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை
முன்எய்த வைத்த முதல்வனை எம்இறை
தன்எய்தும் காலத்துத் தானே வெளிப்படும்
மன்எய்த வைத்த மனம் அதுதானே. 1629

30. 1589ஆம் பாடல்

தரிக்கின்ற பல்லுயிர்க்கு எல்லாம் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்
பிரிக்கின்ற இந்தப் பிணக்கறுத்து எல்லாம்
கருக் கொண்ட ஈசனைக் கண்டுகொண்டேனே. 1782

31. 1652ஆம் பாடல்

அவ்வுல கத்தே பிறக்கில் உடல்ஓடும்
அவ்வுல கத்தே அரும்தவர் நாடுவர்
அவ்வுல கத்தே அரன்அடி கூடுவர்
அவ்வுல கத்தே அருள் பெறுவாரே. 1869

32. 1711ஆம் பாடல்

ஆயும் மலரின் அணிமலர் மேலது
ஆய இதழும் பதினாறும் அங்குள
தூய அறிவு சிவானந்தம் ஆகிப்போய்
மேய அறிவாய் விளைந்தது தானே. 2359

33. 1786ஆம் பாடல்

உணர்வு உடையார்கட்கு உலகமும் தோன்றும்
உணர்வு உடையார்கட்கு உறுதுயர் இல்லை
உணர்வு உடையார்கள் உணர்ந்த அக்காலம்
உணர்வு உடையார்கள் உணர்ந்து கண்டாரே. 2938

34. 1862ஆம் பாடல்

ஏறுடையாய் இறைவா எம்பிரான் என்று
நீறிடுவார் அடியார் நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை அண்ணல் இவரென்று
வேறு அணிவார்க்கு வினைஇல்லைத் தானே. 2111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. 2016ஆம் பாடல்

கொல்லையில் மேயும் பசுக்களைச் செய்வதென்
எல்லை கடப்பித்து இறைவனடி கூட்டி
வல்ல செய்து ஆற்ற மதித்தபின் அல்லது
கொல்லை செய் நெஞ்சம் குறிப்பறியாதே. 2903

36. 2071ஆம் பாடல்

காயக் குழப்பனைக் காயநல் நாடனைக்
காயத்தின் உள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்துளே எங்கும் தேடித் திரிவார்கள்
காயத்துள் நின்ற கருத்து அறியாரே. 2550

37. 2093ஆம் பாடல்

கூடகில்லார் குருவைத்த குறிகண்டு
நாடகில்லார் நயம்பேசித் திரிவார்கள்
பாடகில்லார் அவன்செய்த பரிசுஅறிந்து
ஆடவல்லார் அவர்பேறு எதுவாமே. 2559

38. 2362ஆம் பாடல்

அறிவு அறிவு என்று அங்கு அரற்றும் உலகம்
அறிவு அறியாமை யாரும் அறியார்
அறிவு அறியாமை கடந்து அறிவானால்
அறிவு அறியாமை அழகிய வாறே. 2637

39. 2441ஆம் பாடல்

தொம்பதம் தற்பதம் தோன்றும் அசிபதம்
நம்பிய சீவன்பரன் சிவனாய் நிற்கும்
அம்பத மேலைச் சொரூபம் மாவாக்கியம்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே. 2473

*2573*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**40. 2493ஆம் பாடல்**

ஆகிய அச்சோயம் தேவதத்தன் இடத்து
ஆகியவை விட்டால் காயம் உபாதானம்
ஏகிய தொந்தத்தசி என்ப மெய்யறிவு
ஆகிய சீவன் பரசிவன் ஆமே. 2570

**41. 2498ஆம் பாடல்**

துரியம் அடங்கிய சொல்அறும் பாழை
அரிய பரம்பரம் என்பர்கள் ஆதர்
அரிய பரம்பரம் என்றே துதிக்கும்
அருநிலம் என்பதை யார் அறிவாரே. 2572

**42. 2530ஆம் பாடல்**

ஆறே அருவி அகம்குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமும்
கூறே குவிமுலைக் கொம்பனை யாளொடும்
வேறே இருக்கும் விழுப்பொருள் தானே. 2979

**43. 2597ஆம் பாடல்**

தலைநின்ற தாழ்வரை மீதுதவம் செய்து
முலைநின்ற மாதுஅறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனைக் கண்டு கொண்டேனே. 2845

* * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 5

# குழூஉக்குறிச் சொற்களும் அவற்றைக் கொண்டுள்ள பாடல்களின் எண்களும்

| குழூஉக்குறிச் சொற்கள் | பாடல்கள் எண்கள் |
|---|---|
| (1) இருட்டறை | 1514 |
| (2) அன்னம் இரண்டுள | 2006 |
| (3) ஆசான் முன்னே | 2163 |
| (4) ஆனைகள் ஐந்தும் | 2316 |
| (5) அண்ணிக்கும் பெண்பிள்ளை | 1523 |
| (6) அஞ்சுள சிங்கம் | 2026 |
| (7) கன்னித்துறை படிந்து | 1519 |
| (8) ஒன்றதுபேரூர் | 1558 |
| (9) நாகமும் ஒன்று | 1621 |
| (10) பழுக்கின்ற வாறும் | 1643 |
| (11) ஓடும் குதிரைக்கு | 1679 |
| (12) நாலும் இருமூன்றும் | 1704 |
| (13) ஈராறு நாதத்தில் | 1705 |
| (14) ஆயும் மலரின் | 1711 |
| (15) கூடியபாதம் | 1730 |
| (16) சத்திநாற்கோணம் | 1745 |
| (17) அணுவுள் அவனும் | 2010 |
| (18) கற்ற பசுக்கள் | 2015 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குழூஉக்குறிச் சொற்கள் | பாடல்கள் எண்கள் |
|---|---|
| (19) ஆகமதத்தன | 2023 |
| (20) புலம் ஐந்து புள் ஐந்து | 2025 |
| (21) ஐவர் அமைச்சருள் | 2027 |
| (22) குட்டம் ஒரு முழம் | 2031 |
| (23) மாணிக்கமாலை மலர்ந்தெழு மண்டலம் | 2064 |
| (24) ஒன்றிரண்டு ஆகிநின்று | 2077 |
| (25) காயப்பை ஒன்று | 2122 |
| (10) ஆறந்தமாகி நடுவுடன் | 2129 |
| (11) முப்பதோடு ஆறின் | 2143 |
| (12) முன்னிக்கு ஒருமகன் | 2152 |
| (13) நின்றவன் நிற்க | 2154 |
| (14) ஊமை எழுத்தொடு | 2158 |
| (15) படிஉடை மன்னவன் | 2165 |
| (16) பொன்னை மறைத்தது | 2289 |
| (17) மரத்தை மறைத்தது | 2290 |
| (18) அஞ்சில் அமுதம் | 2299 |
| (19) ஊமைக் கிணற்றகத்து | 2304 |
| (20) ஆனைகள் ஐந்தும் அடக்கி | 2316 |
| (21) வேதத்தின் அந்தமும் | 2370 |
| (22) உண்மைக் கலை ஆறு | 2383 |
| (23) பசுப்பல கோடி | 2406 |
| (24) ஒன்றுண்டு தாமரை | 2432 |
| (25) நாசிநுனியில் | 2546 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குழூஉக்குறிச் சொற்கள் | பாடல்கள் எண்கள் |
|---|---|
| (26) வில்லின் விசை நாணில் கோத்து | 2567 |
| (27) வம்பு பழுத்த | 2607 |
| (28) பூதாண்ட, பேதாண்ட | 2728 |
| (29) வழுதலை வித்திட | 2869 |
| (30) ஏற்றம் இரண்டுள | 2873 |
| (31) பட்டிப் பசுக்கள் | 2874 |
| (32) பார்பப்பான் அகத்திலே | 2883 |
| (33) ஆமாக்கள் ஐந்தும் | 2884 |
| (34) பத்துப் பரும் புலி | 2888 |
| (35) கூகையும் பாம்பும் | 2891 |
| (36) காடுபுக்கார் இனி | 2893 |
| (37) பருந்தும் கிளியும் | 2896 |
| (38) ஆறு பறவைகள் | 2905 |
| (39) போகின்ற எட்டும் | 2926 |
| | *457* |
| (40) அத்திப் பழமும் | 160 |
| (41) பருஊசி | 183 |
| (42) மத்தளி | 189 |
| (43)வேதாந்தம் கேட்க | 225 |
| (44)கடைவாசலைக்கட்டி | 591 |
| (45)பள்ளி அறையில் | 611 |
| (46)நூறும் அறுபதும் | 729 |
| (47)மும்மூன்றும் ஒன்றும் | 776 |
| (48)மதியின் எழும்கதிர் | 813 |
| (49)மண்டலத்துள்ளே | 818 |
| (50)பன்னிரண்டானைக்கு | 577 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னிணைப்பு 6**

## ஆசிரியரின் ஏனைய நூல்களின் பட்டியல்
## Other books by the author

1. சட்டமும் தமிழும் - *(1972 - இலங்கை)*
2. பங்காண்மைச் சட்டம் - *(1981 - இலங்கை)*
3. The Ethical Essence of the Tamils *(1993 - இலண்டன்)*
4. அவ்வையார் காட்டிய வழி - *(2003 - சென்னை)*
5. ஊர்க்காற்று (கவிதைகள்) - *(2003 - சென்னை)*
6. சைவசமயம் - ஓர் அறிமுகம் - *(2010 - இலங்கை)*
7. The Deserted Wife and The Dancing Girl's Daughter - *(2011 - இலண்டன்)*
8. Scenes from Tamil Classics - *(2011 - அமெரிக்கா)*
9. ஆங்கிலம் பிறந்த கதையும் வளர்ந்த கதையும் - *(2015 - இலங்கை)*
10. பேசாதவை பேசியவை (கவிதைகள்) - *(2015 - இலங்கை)*
11. Tamil Through English - *(2015 - இலங்கை)*
12. Chronology of Ceylon Tamil Literary Luminaries - (in English) *(விரைவில் வெளிவரும்)*
13. Tamil Verses of Wisdom - (in English) *(விரைவில் வெளிவரும்)*
14. செகசிற்பியரின் நாடகக் கதைகள் *(விரைவில் வெளிவரும்)*
15. Samples of Classical Tamil Poems - (in English) *(விரைவில் வெளிவரும்)*
16. விறுவிறுப்பான அறுபது கவிதைகள் *(விரைவில் வெளிவரும்)*
17. ஆர், ஆருக்கு, எப்போது? *(விரைவில் வெளிவரும்)*
18. The Story of the Tamil Language *(விரைவில் வெளிவரும்)*
19. இறந்தாரை மறக்கலாமா? *(விரைவில் வெளிவரும்)*
20. Problems in translating Classical Tamil Literature *(விரைவில் வெளிவரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த நூலின் ஆசிரியர் சட்ட அறிஞர் பரம்பரையில் வந்தவர். மேலைப்புலோலியூர் வழக்கறிஞர் மாணிக்கம் செல்லத்தம்பியின் மகன்மாரில் ஒருவர். தசாவதானி மேலைப்புலோலியூர் கதிரவேற்பிள்ளை அவர்களின் மரபில் உதித்தவர். தமிழும் சட்டமும் துறைபோகப் பயின்றவர். தென்புலோலியூர்ப் பெரும்புலவன் கந்தமுருகேசனார், தமிழ்க்கடல் சிவன் கருணாலய பாண்டியனார், திருச்சி தூயவளவனார் கல்லூரிப் பேராசான் ஐயன்பெருமாள் கோனார் போன்ற மரபுவழித் தமிழாசான்களிடம் முறையாக எழுத்தெண்ணிக் கற்றவர். மதிநுட்பம் நூலோடுடையவர். எல்லாவற்றுக்கும் மேலாக இன்னும் தமிழ் மாணவனாகவே இருந்து வருபவர். இலங்கையில், நீதி அமைச்சில் சட்டத் தொழில் புரிந்த காலத்தில் 'சட்டமும் தமிழும்', 'பங்காண்மைச் சட்டம்' என்ற இரண்டு சட்ட நூல்களை எழுதியதோடு 'சட்டமும் சிரிக்கும்', 'தெரியுமா சட்டம்' ஆகிய கட்டுரைத் தொகுதிகளையும் செய்தித் தாள்களில் வெளியிட்டுப் பெயர் பெற்றவர்.

1985இல் இலண்டனுக்கு வந்த பின்னர் 'Ethical Essence of the Tamils', 'Scenes from Tamil Classics', 'The Deserted Wife and the Dancing Girl's Daughter', Tamil Through English', 'The Birth and Growth of the English Language', 'இனிக்காதா இலக்கணம்', 'Tamil Verses of Wisdom', 'அவ்வையார் காட்டிய வழி', 'ஊர்க்காற்று', 'பேசாதவை பேசியவை', 'சைவசமயம் ஓர் அறிமுகம்' ஆகிய நூல்களை எழுதியுள்ள இவர் இப்போது, புலம் பெயர்ந்து வாழும் சைவமக்களின் நலனை முன்னிட்டுத் "திருமந்திரம் ஓர் அறிமுகம்" என்ற நூலைப் படைத்துத் தமிழன்னையை மகிழ்த்துகிறார்.

ISBN 978-955-0881-27-7
9 789550 881277
விலை 400.00 #028A

Printed by Kumaran Press (Pvt) Ltd. kumbhik@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org